கிராம நலம்

நவம்பர் 1960



13 ந.பை







1-4 தென் ஆற்காடு மாவட்ட பஞ்சாயத்துத் தலைவர்கள் மகாநாடு. முதல் அமைச்சர் ஸ்ரீ காமராஜ் அவர்கள் கலந்து கொண்டார்.

5-7 திருக்கழுக்குன்ற வட்டாரத்தில் பஞ்சாயத்து யூனியன் துவக்க விழா.



“சென்னை ராஜ்யத்தில் பஞ்சாயத்து அபிவிருத்தி ஏற்பாடுகள் ஆரம்பமாவதை அறிந்து மட்டற்ற மகிழ்ச்சி யடைகிறேன். பஞ்சாயத்துகளே நமது ஜனநாயக சுதந்திரத்தின் அடிப்படை. எனவே, பஞ்சாயத்துகளின் அபி விருத்தி அதிக முக்கியமானது என்று நான் கருதுகிறேன். “பஞ்சாயத்து ராஜ்யம்” என்பதைப்பற்றி இப்பொழுது அடிக்கடி பேசி வருகிறோம். எங்கெல்லாம் இது முன்னேற்றம் அடைந்திருக்கிறதோ, அங்கெல்லாம் நல்ல பலன்கள் இருப்பதைக் காண்கிறோம்.

மேலே உள்ளவர்கள் கட்டாயப்படுத்தித் திணிப்பதனால் ஜனநாயக முன்னேற்றம் ஏற்பட்டுவிடாது. அரசாங்க அமைப்பு முக்கியமான வேலைகளைச் செய்துவந்த போதிலும், உண்மையான முன்னேற்றத்தின் ஜீவநாடி மக்க ளிடத்திலேதான் இருக்கவேண்டும். எல்லா அபிவிருத்திகளுக்கும் அடிப்படையாக இருப்பது மக்களின் தன்னம் பிக்கையே ஆகும். மக்கள் பஞ்சாயத்துகளின் மூலம் ஒன்றுபட்டு வேலை செய்வதனால், இந்தத் தன்னம்பிக்கை வளருகிறது.

இந்தக் காரணத்தை முன்னிட்டே கிராமப் பகுதிகளில் பஞ்சாயத்துகளும் கூட்டுறவு சங்கங்களும் வளர்ச்சி அடைவது அதிக முக்கியமென்று நான் கருதுகிறேன். இந்த இரண்டு ஸ்தாபனங்களும் அதிகாரிகளின் ஆதிக்கத் திற்கு உள்ளாகிவிடாமல் சுதந்திரமாக இயங்கவேண்டும். அதிகாரிகள் அவர்களுக்கு வழிகாட்டிகளாகவும் உதவி செய்பவர்களாகவும் இருக்கவேண்டுமே தவிர, தங்களுடைய கருத்தை வலியுறுத்தித் திணிப்பவர்களாக இருக்கக் கூடாது.

சென்னை ராஜ்யம் பல துறைகளிலும் நல்ல வேலைகளைச் செய்து புகழ் பெற்றிருக்கிறது. சுய ஆட்சியோடு கூடிய பஞ்சாயத்துகளை அபிவிருத்தி செய்யும் இந்தத் துறையிலும் சென்னை ராஜ்யம் வெகுவாக முன்னேறும் என்று நம்புகிறேன். இம்முயற்சி பூரண வெற்றி பெற வாழ்த்துகிறேன்.”

ஜவஹர்லால் நேரு



“நம் மாநிலம் முழுவதும் பஞ்சாயத்து அபிவிருத்தி வாரம் கொண்டாடப்படும் என்றும், இந்தக் கொண்டாட்டத்தின் ஓர் அம்சமாக, ஒவ்வொரு மாவட்டத்திலும் செப்டம்பர் 25-ம் தேதி பஞ்சாயத்துத் தலைவர்களும், மாவட்ட அபிவிருத்தி மன்ற உறுப்பினர்களும் கொண்ட ஒருமகாநாடு நடைபெறும் என்றும் அறிந்து மகிழ்ச்சியடைகிறேன்.

ராஜ்யமானது, கிராமப் பஞ்சாயத்துக்களை அமைக்க ஏற்பாடு செய்து, சுய ஆட்சியின் உறுப்புக்களாக அவை வேலை செய்வதற்குத் தேவையான சக்தியையும் அதிகாரத்தையும் அவற்றிற்கு அளிக்கவேண்டும் என்பது நமது அரசியல் அமைப்புச் சட்டத்தில் அமைந்துள்ள நெறிமுறைக் கோட்பாடுகளில் ஒன்றாகும். இந்தக் கொள்கையைப் பின்பற்றியே புதிய பஞ்சாயத்துச் சட்டம் உருவாகி இப்பொழுது அமுலாகி வருகின்றது. பஞ்சாயத்து நிர்வாகத்தின் அடிப்படை அமைப்பு புது முறையில் அமைக்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு அபிவிருத்தி வட்டாரத்திலுள்ள பஞ்சாயத்துகளையும் கூட்டுமுறையில் இணைத்து, பஞ்சாயத்து யூனியன் என்று உருவாக்கப்பட்டிருக்கிறது. அதிக அளவில் அதிக வசதிகளைப் பெற்று மேலும் பல புதிய பொறுப்புகளையும் வேலைகளையும் ஏற்று, அவற்றை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு ஏற்ற பலத்தையும் பஞ்சாயத்துகள் அடையவேண்டும் என்பதற்காகவே இந்த சீர்திருத்தம்.

இந்த சீர்திருத்தத்தின் விளைவாக, மாவட்டங்களில் நடைபெறும் மகாநாடுகளில் கூடியுள்ள பஞ்சாயத்துத் தலைவர்கள் இனிமேல் இரண்டுவிதமான பொறுப்புகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும். அவரவர்கள் பஞ்சாயத்துகளை நடத்தும் அதிகார பூர்வமான நிர்வாகிகளாகத் தொடர்ந்து கடமையைச் செய்யவேண்டியது ஒருபுறம். அதுமட்டுமல்ல, பஞ்சாயத்து மன்ற உறுப்பினர் என்ற முறையில் பஞ்சாயத்து யூனியன் பொறுப்புகளையும் கூட்டுமுறையில் அவர்கள் கையாளவேண்டும். இந்தப் பஞ்சாயத்து வாரக் கடைசி நாளில் ஆரம்பமாக இருக்கும் பஞ்சாயத்து யூனியன்கள் வெற்றிகரமாக இயங்கவேண்டுமென்றால், சட்டப்பேரவையினரால் அளிக்கப்பட்டுள்ள கடமைகளை அறிந்து அவற்றை மனப்பூர்வமாக நிறைவேற்றுவதற்கு பஞ்சாயத்துத் தலைவர்தள் முன்வரவேண்டும்.

மேற்சொன்ன பலனை அளிக்கும் முயற்சியில் இந்த மகாநாடு வெற்றி பெறும் என்று மனப்பூர்வமாக நம்புகிறேன்.”

விஷ்ணுராம் மேதி

"புது சகாப்தம் துவங்குகிறது"

சென்னை மாநிலத்திலுள்ள சமுதாய அபிவிருத்தி வட்டாரங்களில் முதல் முதலாக 75 வட்டாரங்களில், 1960-ம் ஆண்டு அக்டோபர் 2-ம் தேதியன்று பஞ்சாயத்து ஆட்சித் திட்டத்தை சென்னை அரசாங்கம் துவக்கி வைக்கிறது. சுமார் இரண்டு வருடங்களுக்கு முன்னால், மதுரை மாவட்டத்தைச் சார்ந்த ஒரு வட்டாரத்தில், பஞ்சாயத்து யூனியன் அமைத்து நடத்தியது, சென்னையில் பஞ்சாயத்து ஆட்சியின் துவக்கத்திற்கு முன்னோடியாக விளங்கியது. அதையொட்டி, பஞ்சாயத்து ஆட்சிக்கான சட்டம் இயற்றுவது பற்றிய விரிவான நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெற்றன. இவ்வருஷம் ஜனவரி மாதத்திலிருந்து பஞ்சாயத்து யூனியன், மாவட்ட அபிவிருத்தி மன்றம் ஆகியவற்றின் அமைப்புபற்றிய விதி முறைகள், மிகுந்த கவனத்தோடு ஆராய்ந்து வகுக்கப்பட்டன. புதிதாக அமையும் இந்த ஸ்தாபனங்கள், அச்சம், தாட்சண்யம், சச்சரவு ஆகியவை எதுவுமின்றி எளியமுறையில் நடைபெறுவதற்கு ஏற்றமுறையில் விதிமுறைகள் அமைந்துள்ளன. அதோடன்றி, அதிகாரிகளும், அதிகாரச் சார்பற்றவர்களான பொதுஜனத் தலைவர்களும் ஒன்று கலந்து தம்முடைய கருத்துக்களைப் பரிமாறிக்கொள்வதற்கான கருத்தரங்குகள் ஜில்லாவாரியாக நடைபெற்றன. இவையெல்லாவற்றையும் விட, பொதுமக்களுக்கு இந்த முக்கிய விஷயத்தைப்பற்றி விளக்கும் நோக்கத்தோடு செப்டம்பர் 25-ம் தேதி முதல் ஒரு வாரம் வரையில் நடைபெறும் விழா தனிப்பட்டமுக்கியத்துவம் வாய்ந்தது. பொதுமக்களுக்கு அளிக்கப்படும் இந்த அதிகாரம் பற்றிய விவரங்களை, அவர்கள் நன்றாக அறிந்துகொண்டு பொறுப்புணர்ச்சியோடு நடந்துகொள்கிறார்களா, இல்லையா என்பதை இந்த விழாவின் விளைவுகள் உறுதிப்படுத்தும்.

நமது சமுதாயம் பழைய நிலையிலிருந்து இப்போது மலர்ந்துகொண்டிருக்கும் நவீன முன்னேற்ற நிலையை அடைய நாம் பாடுபட்டுக்கொண்டிருக்கிறோம். பழங்காலத்தில் நாம் வாழ்ந்ததைப் போன்று, சுதந்திர மக்களாய் நாம் வாழ முடிவு செய்துகொண்டிருக்கிறோம். ஏனெனில் அவ்வாறு வாழ்வதின் மூலம் தான் நமது தத்துவத்தையும், விஞ்ஞானத்தையும், கலையையும், கலாச்சாரத்தையும் ஒரே நிலையில் வளர்க்க முடியும். ஒரு புது "கும்பமேளா" (பெரிய திருவிழா) ஆரம்பிக்கப்பட்டுள்ளது. புராதனப் பெருமைமிக்க சென்னை மாநிலத்தில் இது ஆரம்பிக்கப்படுகிறது. இக்கும்பமேளாவில் நானும் ஒருவனாகக் கலந்து மகிழும் பேறினை வேறு பல நிகழ்ச்சிகள் தடுக்காமலிருந்திருந்தால் பெற்றிருப்பேன். இச்செய்தியை அனுப்புவதின் மூலமாக மட்டுமே நான் இதில் கலந்துகொள்ளும் நிலையில் இருக்கிறேன். செயலோடு உள்ளத்தை ஈடுபடுத்திக் கொள்வதின் வெளிப்புறச் சின்னமே இச்செய்தியாகும். பரம்பரையாகவே சிறந்த அறிவாளிகளான சென்னை வாசிகளுக்கு அவர்கள் ஏற்கெனவே அறிந்த சில அடிப்படை உண்மைகளை மட்டும் என்னால் இயன்ற அளவு வலியுறுத்த விரும்புகிறேன். இவ்விருபதாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் மாயவித்தைகள் மூலம் பெரும் மாறுதல்களை ஏற்படுத்திவிட முடியாது. பஞ்சாயத்து ராஜ்யம் என்பதுவும் அத்தகைய ஒரு மாய வித்தையல்ல. இதனால் மட்டுமே, அறிவு, உழைப்பு சமுதாய உணர்ச்சி, தம்மினும் மாறுபட்ட கொள்கைகளையுடைய மற்றவர்களுடன் ஒன்று சேர்ந்து கூட்டாக இயங்கும் மக்களின் அளவிடமுடியாத சக்தி ஆகியவையனைத்தையும் நாம் பெற்றுவிட்டதாகக் கருதமுடியாது.

புதுப் பஞ்சாயத்து யூனியன்கள் ஆரம்பிக்கப்பட்டு நன்றாக இயங்கும் நிலையில், நான் உங்கள் மாநிலம் முழுவதும் சுற்றுப்பிரயாணம் மேற்கொள்ள விரும்புகிறேன். இதன் மூலமாக சென்னை மாநில மக்களுக்குப் பஞ்சாயத்து ராஜ்யம்பற்றி மற்ற மாநிலங்களில் நான் பெற்ற அனுபவத்தை எடுத்துக் கூற இயலும். சில மாதங்களுக்கு முன்னர், நான் சென்னை மாநிலத்தில் மேற்கொண்ட குறுகிய சுற்றுப்பிரயாணத்தின்போது, புதிய நம்பிக்கை ஓட்டம், உற்சாகம், ஒத்துழைப்புணர்ச்சி ஆகியவை கிராமத்து மக்களிடையே உரம் பெற்று வளருவதை உணர்ந்தேன். இந்தத் தெளிவு பஞ்சாயத்து ராஜ்ய முறையை அமுலாக்கும்போது மேலும் ஓங்கி வளருமென்று எதிர்பார்க்கிறேன். 1960-ம் வருஷம் அக்டோபர் மாதம் 2-ம் தேதியில் ஒரு புது சகாப்தம் துவங்க இருக்கும் இந்த சந்தர்ப்பத்தில் உங்கள் மாநில முதலமைச்சர் முதல் கிராமசேவக், கிராம சகாயக் ஈறுகவுள்ள எல்லா நண்பர்களுக்கும் தொண்டர்களுக்கும் எனது மனமுவந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

எஸ். கே. டே,

(மத்திய அரசாங்க கூட்டுறவு, சமுதாயநல அபிவிருத்தி அமைச்சர்.)



" இன்று மகாத்மா காந்தி பிறந்த நாள். இந்த நாட்டிலுள்ள கோடிக்கணக்கான ஏழையெளியவர்கள் எல்லோரும் சுபிட்சமாக வாழவேண்டும் என்பதற்காகவே மகாத்மா பாடுபட்டார். அவர் நடத்திய சுதந்திரப் போராட்டத்தின் பயனாக அரசியல் விடுதலை நமக்குக் கிடைத்திருக்கிறது. அவர் விரும்பியபடி, பொருளாதார முன்னேற்றமும், சமூக ஒற்றுமையும் ஏற்படவேண்டும். கிராமங்கள் விஷயத்தில், காந்தியடிகள் விசேஷ கவனமும் சிரத்தையும் கொண்டிருந்தார். சுதந்திரப் போராட்டம் நடந்து கொண்டிருந்த அந்தக் காலத்தில் கூட, கிராமங்கள் நல்ல முறையில் வளர்ச்சி அடைவதற்காக வேண்டிய ஆக்க வேலைகளில் ஈடுபட்டிருந்தார். கிராமப் பஞ்சாயத்துக்களின் மூலம் கிராமங்களுடைய வளர்ச்சிக்கு வழி செய்ய வேண்டுமென்பது அவருடைய அவாவாக இருந்தது. புதிய பஞ்சாயத்து சட்டத்தின் மூலம் அவருடைய கனவு நனவாகிறது என்று தான் சொல்ல வேண்டும்.

நம்முடைய நாட்டில் பஞ்சாயத்துகள் ஏற்கனவே பல கிராமங்களில் இருந்து வந்து இருக்கின்றன. பழைய பஞ்சாயத்துகளுக்கும், செயல்படப்போகும் புதிய பஞ்சாயத்துகளுக்கும் மிகுந்த வித்தியாசம் உண்டு. கிராம அபிவிருத்திக்கான வேலைகள் எல்லாவற்றையும் இப்புதிய பஞ்சாயத்துகள் ஏற்றுக்கொள்ளப் போகின்றன. ஒவ்வொரு பஞ்சாயத்தும், தான் நிறைவேற்ற வேண்டிய வேலைகளுக்குப் போதுமான நிதி வசதிக்கு இப்புதிய சட்டம் வழி செய்திருக்கிறது. ஒரு கிராமப் பஞ்சாயத்தால் செய்யமுடியாத வேலைகளை, ஒரு வட்டாரத்திலுள்ள எல்லா பஞ்சாயத்துகளும் சேர்ந்து செய்வதற்காகத்தான் பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் சம்பந்தமான சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. யூனியன் கவனிக்கவேண்டிய வேலைகள் இன்னின்ன என்று விளக்கி சட்டத்தில் குறிக்கப்பட்டிருக்கின்றன. முதலாவதாக, உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்கான எல்லா ஏற்பாடுகளையும் பஞ்சாயத்தும், பஞ்சாயத்து யூனியன்களும் செய்யவேண்டியதிருக்கும். இன்னும், விவசாய முன்னேற்றத்திற்கு வேண்டிய பொறுக்கு விதைகளும், உரம், கடன் வசதி, ஏரி குளங்களை மராமத்து செய்தல் முதலிய வேலைகளும் பஞ்சாயத்து யூனியனுடைய பொறுப்பாக இருந்து வரும். விவசாய வேலை இல்லாதவர்களுக்கு வேலை கிடைப்பதற்காக, கதர்-சிறு கைத்தொழில் வளர்ச்சி போன்ற திட்டங்களையும் யூனியன் கவுன்சில்கள் மேற்கொள்ளும். அடுத்தபடியாக, கிராமத்திலுள்ள எல்லாக் குழந்தைகளும் கல்வி கற்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்வது, குழந்தைகளுக்கு மத்தியான உணவு கொடுப்பது முதலிய காரியங்களைக் கவனிப்பதும் யூனியன் கவுன்சில்களுடைய வேலைத் திட்டங்களில் ஒன்றாக இருக்கும். மேலும், சுகாதார வசதிகளுக்கான மற்ற ஏற்பாடுகளைச் செய்வதும், நல்ல குடி தண்ணீர் வசதி செய்து கொள்வதும், பஞ்சாயத்து யூனியன் எல்லைக்குள் சிறிய ரோடுகள் அமைத்துக்கொள்வதும் பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலுடைய திட்டங்களில் ஒன்றாகும். ஜனத்தொகை ஓரளவுக்கு மேல் அதிகரித்து விடாமல் கட்டுப்படுத்துவதற்கான திட்டத்தையும் பஞ்சாயத்தும், பஞ்சாயத்து யூனியனும் கவனித்து வரும்.

இந்த வேலைகளுக்கு வேண்டிய பண வசதியும், நிர்வாக சுதந்திரமும் பஞ்சாயத்துகளுக்கும் பஞ்சாயத்து யூனியன்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்புதிய ஏற்பாடுகளின்படி, ஒவ்வொரு யூனியனுக்கும் சுமார் ஏழு அல்லது எட்டு

லட்ச ரூபாய் வருமானம் இருந்து வரும். இந்த நிதி வசதி போதாது என்றால், வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்கான அதிகாரங்களும் யூனியனுக்கு உண்டு. வேலைத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு வேண்டிய சர்க்கார் சிப்பந்திகளையும், பயிற்சி பெற்ற நிபுணர்களையும் சர்க்கார் கொடுத்து உதவுவார்கள். இவர்களுடைய சம்பளம் முதலிய வற்றையும் சர்க்காரே ஏற்றுக்கொள்ளும். இப்பொழுதுள்ள இந்த ஏற்பாடுகளில் ஏதாவது குறையிருந்தால் அனுபவத்தைக் கொண்டு பின்னால் மாற்றிக்கொள்வதற்கு தடையிருக்காது.

சட்டசபையில் இந்தப் பஞ்சாயத்து சட்டங்கள் நிறைவேறியபோது எல்லாக் கட்சியாரும் நன்றாக அலசிப் பார்த்த பின்னர் ஏக மனதாக ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். எனவே இவற்றை அமுல் நடத்தும்போது எல்லோருடைய உதவியும் ஒத்துழைப்பும் இருந்து வருமென்றே நம்புகிறேன். பஞ்சாயத்துகளுக்கு ஒரு நல்ல காலம் ஏற்படப் போகிறது என்று தோன்றுகிறது. ஏனென்றால் சமீபத்தில் நடந்த பஞ்சாயத்துத் தேர்தல்களில் பெரும்பாலான பஞ்சாயத்துகளில் போட்டியில்லாமலே அங்கத்தினர்களும் தலைவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். பஞ்சாயத்து யூனியன்களில் எந்த அளவுக்கு ஒற்றுமை உணர்ச்சி இருக்கிறதோ, அந்த அளவு பஞ்சாயத்து வேலைகளுக்கு வெற்றி ஏற்படும். எனவே, ஜாதி மத அரசியல் கட்சி பேதமின்றி எல்லோரும் ஒன்று சேர்ந்து அந்தந்த வட்டாரங் களின் வளர்ச்சிக்காக பாடுபடவேண்டும். அபிப்ராய வித்தியாசங்களைப் பெரிதாக்காமல், ஊர் நலத்தை உத்தேசித்து ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து காரியங்களைச் செய்ய முன் வரவேண்டும். கிராமத்தின் நன்மையை மனத்தில் கொண்டு வேலை செய்தால், வித்தியாசங்கள் நாளடைவில் மறைந்துவிடும். அனுபவம் ஏற்பட ஏற்பட எல்லாம் நல்ல முறையில் நடைபெறும். அங்கத்தினர்கள் எல்லோரும் ஒற்றுமையாக ஒரு மனத்தோடு இருந்தால் நல்ல வேலைகளைச் செய்ய உதவியாக இருக்கும். அந்த சூழ் நிலையை நீங்கள் ஏற்படுத்த வேண்டும்.

கிராமங்களிலுள்ள கிராம முன்சிப்புகள், கூட்டுறவு சங்கத்தலைவர்கள் இவர்களோடும் ஒத்துழைத்து, இவர்களையும் பஞ்சாயத்து அபிவிருத்தியில் சிரத்தை கொள்ளுமாறு நீங்கள் ஏற்பாடு செய்யவேண்டும். அரசாங்க ஊழியர்கள் நல்ல முறையில் பஞ்சாயத்துக்கு உதவியாக இருந்து காரியங்களைத் தாமதப்படுத்தாமல் கூடிய விரைவில் அவ்வப்பொழுது செய்யவேண்டிய வேலைகளைச் செய்து வருவார்கள்.

இன்று முதல் ஆரம்பமாக இருக்கும் இந்த 75 பஞ்சாயத்து யூனியன்களும், அடுத்து வரும் மற்ற பஞ்சாயத்து யூனியன்களுக்கு வழிகாட்டிகளாக அமையும் வகையில் நடந்து கொள்ள வேண்டும்.

நமக்குக் கிடைத்துள்ள ஜனநாயக சுதந்திரம் நிலைத்திருக்க வேண்டுமானால், கிராமப் பஞ்சாயத்துகள் நல்ல முறையில் அமைந்து வேலை செய்ய வேண்டும். எனவே ஜனநாயக ஆட்சி இந்த நாட்டில் சிறந்து விளங்கவேண்டு மென்று எண்ணுபவர்கள் அனைவரும், கிராமப் பஞ்சாயத்துகள் நன்றாக வேலை செய்வதற்கு முயற்சிக்கவேண்டும்.

பஞ்சாயத்து அபிவிருத்தி வேலைகளில் சென்னை ராஜ்யம் மற்றவர்களுக்கு ஒரு எடுத்துக் காட்டாக அமையும் என் பதில் சந்தேகமில்லை.

மகாத்மா காந்தி காட்டிய வழியைப் பின்பற்றி, இந்த பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்கள் மூலமாக கிராமங்களின் வளர்ச்சிக்குப் பாடுபடுவோம் என்று இந்த நல்ல நாளிலே மனத்தில் உறுதி செய்து கொள்ளுவோமாக."

கு. காமராஜ்

(2—10—60-ல் வானொலியில் ஒலிபரப்பப்பட்ட பேச்சு.)



அன்புள்ள பஞ்சாயத்துத் தலைவருக்கு,

நமது நாட்டின் பெருவாரியான ஜனங்கள், கிராமங்களில்தான் வசிக்கிறார்கள். புதிய ஆட்சி அமைப்பில் கிராம மக்களின் நலனுக்காகப் பாடுபடுவது, பஞ்சாயத்துக்களின் மிக முக்கியமான பொறுப்பாகும். ஐந்தாண்டுத் திட்டங்களின் கீழ் செய்யப்படும் அபிவிருத்தி வேலைகள் எல்லாம், கிராம ஜனங்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காகத்தான். அரசாங்கம் இந்தத் துறையில் முழு மூச்சுடன் வேலை செய்து வருகிறது.

ஆனால், எவ்வளவுதான் இந்தத்துறையில் பெரும்பாடுபட்டு வேலை செய்தாலும், தினம் தினம் வளர்ந்து கொண்டே போகும் ஜனத்தொகைப் பெருக்கத்தை கட்டுப்பாடு செய்தாலொழிய, அபிவிருத்தி வேலைகள் முழுப்பயனை விளைவிக்கமாட்டா. எனவே, ஜனத்தொகை கட்டுப்பாடு மிக முக்கியமான தேசியப்பணியாகிறது. 1958-ம் வருடம் சென்னை பஞ்சாயத்துச் சட்டத்தின் பீடிகையிலேயே இந்த ஜனத்தொகைக் கட்டுப்பாடு ஒரு முக்கியமான நோக்கமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே, குடும்பக்கட்டுப்பாடு திட்டத்தை, நம் சென்னை ராஜ்யத்திலே செம்மையான முறையில் செயல் படுத்துவதில், பஞ்சாயத்துக்களுக்குள்ள பெரும் பொறுப்பு உங்களுக்கு நன்றாகத் தெரியும். ஆகவே, அதை அதிகமாக வலியுறுத்தவேண்டிய அவசியமில்லை என நினைக்கிறேன்.

இந்த நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு, கிராமப்புறங்களில் குடும்பக்கட்டுப்பாடு முறைகளை (அறுவை சிகிச்சை முறையை) பரப்ப, அரசாங்கம் முடிவு செய்துள்ளது. இதன் விளைவாக, கிராமவாசிகள் சில வசதிகளைப் பெறலாம். அத்துடன், இத்துறையில் அவர்களிடையே உற்சாகத்தைத் தூண்டும் வகையில், ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. குடும்பக் கட்டுப்பாட்டுக்கான அறுவை சிகிச்சை முறை பற்றிய விளக்கத்தை, இத்துடன் சேர்க்கப்பட்டுள்ள இணைப்பில் (பக்கம் 32) காணலாம்.

இந்த விஷயத்தில், பஞ்சாயத்துக்கள் செய்யவேண்டிய முக்கியமான இரண்டு கடமைகளை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

அவற்றுள், முதலாவதாக "**குடும்பக்கட்டுப்பாடு கைப்புத்தகத்தை**" (இப்புத்தகம் உங்கள் பஞ்சாயத்துக்கு ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ளது) உங்கள் கிராமத்திலே உள்ள எழுதப் படிக்கத் தெரிந்த கிராமவாசிகள் எல்லோரும் படிக்கும்படியாக, நீங்கள் ஏற்பாடு செய்யவேண்டும். இரண்டாவதாக, அறுவை சிகிச்சை முறையைப்பற்றி கிராம மக்கள் எல்லோருக்கும் புரியும்படியான முறையில், தெளிவாக விளக்கிச் சொல்ல ஏற்பாடு செய்ய வேண்டும். இதனால், அறுவை சிகிச்சை செய்துகொள்பவர்களுக்கு அரசாங்கம் கொடுத்துள்ள வசதிகளைப்பற்றி, கிராமவாசிகள் நன்றாகத் தெரிந்துகொண்டு, அதனால் கிடைக்கின்ற பலனையும் அவர்கள் அடைய உதவியாக இருக்கும்.

இந்தத் திட்டம் வெற்றியடைய வேண்டுமானால், நீங்கள் இத்துறையில் அதிக ஆர்வம் காட்டி, அக்கரையோடு உழைப்பது மிகவும் அவசியம். பஞ்சாயத்து தலைவராகிய நீங்களும், மற்றும் உங்களுடன் சேர்ந்து பாடுபடும் பஞ்சாயத்து அங்கத்தினர்களும், இதற்காக விசேஷ சிரத்தையுடன் தொண்டாற்ற வேண்டும். எனவே, உங்கள் பஞ்சாயத்து எல்லைக்குள், இந்தத் திட்டம் வெற்றிகரமாக நிறைவேறுவதற்கு, நீங்கள் எல்லோரும் உங்களால் இயன்ற எல்லாவிதமான ஒத்துழைப்பையும் அளிப்பதுடன், அதற்கான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்படிக்கு அன்பன்,

எம். ஏ. மாணிக்கவேலு.

கிராம நலம்

" எப்படிக் காலைப் பொழுதானது பகல் பொழுதைக் காட்டி
நிற்கிறதோ,
அதைப்போல, இளமைப் பருவமானது எதிர்கால மனிதனை
படம் பிடித்துக் காட்டுகிறது."

—மில்டன்.

மலர் 6	நவம்பர் 1960	இதழ் 2

பொருளடக்கம்

	பக்கம்.
பஞ்சாயத்து வார விழா	8
செட்டி நாட்டு நாடோடிப் பாடல்கள்—'சோமலெ'	12
குச்சிபூடி நாட்டிய நாடகங்கள்	19
விவசாய அமைச்சரின் வேண்டுகோள்	
சமுதாய நலத் திட்டம்	22
"சத்திய சோதனை" வெளியீட்டு விழா	25
எங்கள் நேரு—ஸ்ரீ சோம. சுப்பையன்	26
"புதுமை காண்பீர்"—ஸ்ரீ மா. பாதமுத்து	28
குடும்பக் கட்டுப்பாடு—(இணைப்பு)	32
கிராம வளம் பெறுக—ஸ்ரீ ஒ. இரா. கிருட்டிணசாமி	36
வாழ்க நம் பஞ்சாயத்து யூனியன்கள் (இணை அபிவிருத்திக் கமிஷனரின் வானொலிப் பேச்சு)	38

முதல் அட்டைப்பட விளக்கம் :

இன்றைய குழந்தைகள் எதிர்கால மன்னர்கள். இந்த நாட்டின் கோடானுகோடி குழந்தைகள் நாட்டின் விலைமதிக்கமுடியாத சொத்து. ஒவ்வொரு குழந்தையும், எதிர்காலத்தில் ஒரு சிறந்த விஞ்ஞானியாகவோ, ஒரு கைதேர்ந்த கலைஞனாகவோ, நாட்டுக்குப் பயன்படும் நல்லதொரு விவசாயியாகவோ, ஒரு பொறியியல் வல்லுனனாகவோ விளங்க வேண்டுமென்பது நமது ஆசை. அந்த ஆசையைத்தான் இந்த இதழ் அட்டைப்படம் விளக்குகிறது.

கடைசி அட்டைப்படம் :

கடலூரில் பஞ்சாயத்துத் தலைவர்கள் ஊர்வலம்.

" குழந்தைகள் தினம் "

பிரதமர் நேரு அவர்களின் பிறந்த தினத்தை (14—11—60) ஒவ்வொரு ஆண்டும் "குழந்தைகள் தினமாக" பாரத நாடெங்கிலும் கொண்டாடி வருகிறோம். பாரதப் பிரதமருக்கு குழந்தைகள் என்றால் உயிர். இந்த நாட்டு குழந்தைகளின் இதயம் கவர்ந்தவர் அவர். 'குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்திலே" என்பார்கள். இந்த ஆண்டு 'குழந்தைகள் தினம்' குறிப்பிடத்தக்கது. " பள்ளிகள் தூய்மை தினமாக" இந்த ஆண்டு குழந்தைகள் தினம் இந்தியாவெங்கிலும் கொண்டாடப்படுகிறது. " சுத்தம் சோறு போடும்." புறத்தூய்மை மட்டும் போதாது; அகத்தூய்மை அவசியம் வேண்டும். கள்ளங்கபடமில்லாத வெள்ளைஉள்ளம் படைத்த எண்ணற்ற இந்தியச் சிறுவர் சிறுமிகளுக்கு இந்த மாத ' கிராம நல ' இதழைச் சமர்ப்பிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

கிராம நலம்—சந்தா விவரம்

" கிராம நலம் " பத்திரிகையில் வெளியிட கதை, கட்டுரை, பாட்டு முதலியனவும் அவை சம்பந்தப்பட்ட கடிதங்கள் அனைத்தும் " ஆசிரியர், "கிராம நலம்", கிராம அபிவிருத்தி தல நிர்வாகத் துறை, சென்னை-9 " என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

ஆண்டு சந்தா ரூ. 1·50 ந.பை.
ஆறுமாத சந்தா 0·75 ந.பை.
தனிப் பிரதி 0·13 ந.பை.

சந்தா, மற்றும் "கிராம நலம்" பத்திரிகை சம்பந்தப்பட்ட எல்லா கடிதப்போக்குவரத்துகளும் 'பொது ஜனத் தொடர்பு அதிகாரி, கிராம அபிவிருத்தி, தல நிர்வாகத் துறை, சென்னை-9" என்ற முகவரிக்கு எழுதப்படவேண்டும். ஸ்டாம்புகள் பெற்றுக்கொள்ளப்பட மாட்டாது. வி. பி. பி. மூலம் பிரதிகள் அனுப்பப்படமாட்டாது.

"பஞ்சாயத்து வார விழா"

R.P.

நம்முடைய மாநிலத்தில் கடந்த செப்டெம்பர் 25-ம் தேதியிலிருந்து அக்டோபர் 2-ம் தேதி வரையில் மாநில மெங்கும் பஞ்சாயத்து வாரமாகக் கொண்டாட வேண்டும் என்று அரசாங்கம் முடிவு செய்தது. 1960-ம்ஞ அக்டோபர்மீ 2-ந் தேதியன்று மாநிலத்தில் 75 வட்டாரங் களில் பஞ்சாயத்து யூனியன்கள் செயல்படத் தொடங்கு வதை ஒட்டி, இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. நமது மாநில அரசியல் நிர்வாக அமைப்பு முறையில் ஏற்பட்டுள்ள மகத்தானதொரு மாறு தலை, இந்தக் குறிப்பிடத்தக்க அம்சத்தை, தமிழ் மக்கள் தெளிவாகப் புரிந்துகொண்டு, குறிப்பாக பஞ் சாயத்துச் சம்பந்தப்பட்டவர்கள் அனைவரும் இந்த மாற்றத்தை உணர்ந்து, கடமையுணர்ச்சியுடன் செய வாற்றத் தூண்டும் வகையில் ஒரு அறிவொளிபரப்பும் திட்டத்தின் பகுதியாக இந்த விழாக் கொண்டாட அர சாங்கம் முடிவு செய்தது.

இந்தப் பஞ்சாயத்து வார விழாவினை எப்படிக் கொண் டாட வேண்டும் என்பது பற்றி அரசாங்கம் தெளிவாக விளக்கி உத்தரவுகள் பிறப்பித்தது. இதில் குறிப்பிடத் தக்க அம்சங்கள் மூன்று உள்ளன. முதலில் பஞ் சாயத்து வார விழாத் தொடக்க அம்சமாக 1960-ம்ஞ செப்டம்பர்மீ 25ந் தேதி அன்று மாநிலத்திலுள்ள மாவட்டங்கள் அத்தனையிலும் மாவட்டத் தலைநகர் களில் மாவட்ட பஞ்சாயத்துத் தலைவர்கள் மகாநாடு ஒன்று நடத்தப்பெற வேண்டுமென்று உத்தர விடப்பட்டது. பின்பு 1960-ம்ஞ செப்டம்பர்மீ 30-ந் தேதி அன்று மாநிலமெங்கிலும் பஞ்சாயத்துக்களில் பஞ்சாயத்து தினமாகக் கொண்டாடப்பட வேண்டுமன்றும் பின்பு 1960-ம்ஞ அக்டோபர்மீ 2-ந் தேதியில் மாநிலத்தில் பஞ்சாயத்து யூனியன் செயல்படத் தொடங்கும் 75 வட்டாரங்களில் பஞ்சாயத்து யூனியன் துவக்க விழா நாளாகக் கொண்டாடப்படவேண்டும் என்று உத்தரவிடப்பட்டது.

இந்தக் கொண்டாட்டங்களையெல்லாம் எப்படிக் கொண்டாட வேண்டும், எந்தெந்த முறையில் இவை நடத்தப்பெற வேண்டும், அவைபற்றி அனுசரிக்க வேண்டிய விதிமுறைகள் என்னென்ன என்பது பற்றி யெல்லாம் அரசாங்கம் அந்தந்த மாவட்டக் கலெக்டர் களுக்கு முன்கூட்டியே அறிவித்திருந்தது. இதைப் பற்றி கலந்தாலோசிக்க செப்டம்பர் 5-6 தேதிகளில் சென்னையில் கலெக்டர்கள் மகாநாடு கூடியது. இந்த பஞ்சாயத்து வார விழாக் கொண்டாட்டம் பற்றிய தகவல் கள் அடங்கிய பிரசுரங்கள் தமிழில் தயாரிக்கப்பட்டு மாநில மெங்கும் முன்கூட்டியே கிடைக்கும்படியான ஏற்பாடுகள் அரசாங்கத்தாரால் செய்யப்பட்டன.

பஞ்சாயத்து வார விழாவினை ஒட்டி பயன்தரத்தக்க வெளியீடுகள் அரசாங்கத்தாரால் வெளியிடப்பட்டன. (1) "பஞ்சாயத்து அபிவிருத்திக்கான திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டம்", (2) "சென்னை மாநில மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட வரைவுச் சுருக்கம்", (3) "புதிய பஞ்சாயத்து ஆட்சி", (4) "பூக்கும் புது யுகம்" என்று நான்கு பிரசுரங்கள் தமிழில் ஏராளமாக அச்சிடப்பட்டு மாவட்டங்களில் விநியோகம் செய்வதற்காக மாவட்டக் கலெக்டர்களுக்கு அனுப்பப்பட்டன. பஞ்சாயத்து வாரத் தில் இந்தப் பிரசுரங்கள் ஏராளமாக வினியோகம் செய்யப்பட்டன. இந்தப் பிரசுரங்கள் கிடைக்காத பஞ்சா யத்து சம்பந்தப்பட்டவர்கள் தங்கள் வட்டார அதிகாரி யையோ, மாவட்டக் கலெக்டருக்கோ எழுதிப் பெற்று கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

சென்னை மாநிலம் எப்பொழுதும் எதிலும் பின்தங்கிய தல்ல. எந்த நல்ல காரியத்திலும் இந்த மாநிலத்தின் பங்கு குறிப்பிடத்தக்கதாகவே இருக்கும். ஆகவே, பஞ்சாயத்து வார விழா இந்த மாநிலத்தில் சிறப்பான முறையில், மகத்தான அளவில் கொண்டாடப்பட்டது ஒன்றும் ஆச்சரியமில்லை. இந்த வாரத்தில் தமிழ் மக்கள் காட்டிய உற்சாகமும், ஒத்துழைப்பும் எதிர் காலத்தில் இந்த ராஜ்யம் அடைய இருக்கின்ற வெற்றிக்கு பலத்த உறுதுணையாக நிற்கும் என்பது உறுதி. கிராமப் புறங்களிலே ஏற்பட்டுள்ள புதிய விழிப்புணர்ச்சியைக் கண்டு பூரிக்கிறோம்.

1960-ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 25-ம் தேதியில் மாவட்டத் தலைநகர்களில் நடந்த பஞ்சாயத்துத் தலைவர் கள் மகாநாடுகள் தமிழ்நாட்டின் சரித்திரத்திலேயே ஒரு மகத்தான திருப்பு மையமாகும். பஞ்சாயத்து தலைவர்கள் ஆயிரக் கணக்கில் வந்து குழுமிய காட்சி கண்ணையும் கருத்தையும் கவர்ந்து நின்றது. அவர்கள் காட்டிய உற்சாகம், அவர்கள் கண்களிலே காணப்பட்ட புதிய ஒளி, இந்த நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கின்ற மகத்தான சக்தி வாய்ந்த அவர்களிடையே ஏற்பட்டுள்ள

புதிய விழிப்புணர்ச்சி இவை அத்தனையும் கண்டு பெருமைப் படுகிறோம். சரித்திரப் பிரசித்தி பெற்றுவிட்ட இந்தப் பஞ்சாயத்து வார விழா விவரங்களை அப்படியே பிரசுரிக்க சந்தர்ப்பம் இல்லையாகையால், மாவட்ட வாரியாக சுருக்கி இயன்றவரையில் கீழே கொடுத்திருக்கிறோம்.

செங்கல்பட்டு மாவட்டம்

செங்கல்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த பஞ்சாயத்துத் தலைவர்கள் மகாநாடு வைஷ்ணவ முக்கியத்துவம் வாய்ந்த ஸ்ரீபெரும்புதூரில் 1960-ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 25-ம் தேதியன்று மிகுந்த கோலாகலத்துடன் நடைபெற்றது. மாவட்டத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், மாவட்ட அபிவிருத்தி மன்ற உறுப்பினர்கள், பஞ்சாயத்துத் தலைவர்கள் பெருவாரியான முறையில் மகாநாட்டில் கலந்துகொண்டு விழாவினைச் சிறப்பித்தனர். சுமார் 2,000 பிரதிநிதிகள் இந்த மகாநாட்டில் கலந்து கொண்டனர்.

காலை 9 மணிக்கு மகாநாடு துவங்கியது. காலை 8 மணிக்கு ஊரில் உள்ள உடையவர் கோவிலிலிருந்து பெரிய ஊர்வலம் ஒன்று புறப்பட்டு முக்கியமான வீதிகளின் வழியாக மகாநாட்டுப் பந்தலை வந்தடைந்தது. ஊர்வலம் மிகவும் விமரிசையான முறையில் அமைந்திருந்தது. நாதசுர இசை முழங்க, "பஞ்சாயத்துக்கள் வாழ்க"! என்ற வாழ்த்தொலியுடன் சென்னை சட்டமன்ற சபா நாயகர் டாக்டர் **யு. கிருஷ்ண** ராவ், மாவட்டக் கலெக்டர் ஸ்ரீ கே. எஸ். சிவசுப்பிரமணியம், ஐ.ஏ.எஸ்., ஆகியோர் தலைமை வகித்து முன் செல்ல, ஊர்வலம் சிறப்பாக நடைபெற்றது. விழாவினை ஒட்டி ஸ்ரீ பெரும்புதூரே திருவிழாக் கோலம் பூண்டிருந்தது.

மாவட்டக் கலெக்டர் ஸ்ரீ கே. எஸ். சிவசுப்பிரமணியம் அவர்கள் முதலில் பேசுகையில் புதிய பஞ்சாயத்துச் சட்டத்தின் முக்கியத்துவத்தைப் பற்றி தெளிவாக விளக்கி கூறினார்கள். பின்பு மாநில கவர்னர், மத்திய அரசாங்க சமுதாய நல கூட்டுறவுத் துறை அமைச்சர் ஸ்ரீ எஸ். கே. டே ஆகியோரிடமிருந்து வந்திருந்த வாழ்த்துச் செய்திகளை மாவட்ட விளம்பர அதிகாரி ஸ்ரீ நாகபூஷணம் அவர்கள் வாசித்தார்கள். சபாநாயகர் **ஸ்ரீ யு. கிருஷ்ண ராவ்** அவர்கள் அரியதொரு சொற்பொழிவாற்றினார்கள். புதிய ஆட்சி அமைப்பு முறையில் பஞ்சாயத்துக்களின் பெரும் பொறுப்பு பற்றி அவர் விளக்கிக் கூறினார்கள். பஞ்சாயத்துக்களில் கட்சிப் பூசல்களுக்கே இடமில்லையென்றும், கட்சிகளுக்கெல்லாம் அப்பாற்பட்டது பஞ்சாயத்துக்கள் என்றும், சிறு சிறு பூசல்கள், கட்சிப் போராட்டங்கள், பஞ்சாயத்துக்களினுள் புகுந்து, ஐக்கியத்தைக் குலைத்து விடாமல் பார்த்துக் கொள்ளவேண்டியது பஞ்சாயத்துக்களின் மிக முக்கியமான கடமை என அவர் வலியுறுத்திப் பேசினார்கள்.

சபாநாயகரின் பேச்சுக்குப் பிறகு மாவட்டத்தைச் சேர்ந்த கீழ்க்கண்ட பிரமுகர்கள் பேசினார்கள் :—

ஸ்ரீ என். ராமகிருஷ்ணய்யர், எம்.பி., அவர்கள் மகாத்மா காந்தியின் உருவப்படத்தைத் திறந்து வைத்து காந்தியடிகளின் வாழ்க்கையைப்பற்றி அரியதொரு சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்.

(1) ஸ்ரீ எம். சேஷாச்சாரியார், எம்.எல்.சி.

(2) ஸ்ரீ ஏ. கே. தங்கவேலு முதலியார், எம். எல்.சி. பழைய பஞ்சாயத்துச் சட்டம், புதிய பஞ்சாயத்துச் சட்டம்—ஒப்பு நோக்கு.

(3) ஸ்ரீ வி. கோவிந்தசாமி நாயுடு, எம்.எல்.ஏ.—விவசாயம்.

(4) ஸ்ரீ துரைசாமிஅய்யர், எம்.ஏ. பி.எல், தலைவர், மாங்காடு பஞ்சாயத்து—புதிய சட்டத்தின் பீடிகை.

இடைவேளைக்குப் பிறகு மறுபடியும் மகாநாடு பகல் மூன்று மணிக்குக் கூடியது. அவ்வமயம், 1. ஸ்ரீ பி. அப்பாவு, எம்.எல்.ஏ., 2. ஸ்ரீமதி கமலாம்புஜம்மாள், எம்.எல்.ஏ. ஆகியோர் "மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட வேலையில் பஞ்சாயத்துக்களின் பங்கு" என்பது பற்றியும் ஸ்ரீ டி. பி. ஸ்ரீநிவாசவரதன் "கல்வி" யைப் பற்றியும்; மாவட்ட வைத்திய அதிகாரி ஸ்ரீ எம். நாராயணன், எம்.பி. பி.எஸ். "குடும்பக் கட்டுப்பாடு" பற்றியும், வித்வான் ஸ்ரீ டி. முத்துக்கண்ணப்பர், எம்.எல்.சி., "பாரதியார்" பற்றியும் சொற்பொழிவாற்றினார்கள்.

இரவு கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

1960-ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 30-ம் தேதியன்று மாவட்டத்தில் உள்ள எல்லாப் பஞ்சாயத்துக்களிலும் பஞ்சாயத்துத் தினம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

1960-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 2-ம் தேதியன்று செங்கல்பட்டு மாவட்டத்தில் திருக்கழுக்குன்றம், உத்திரமேரூர், ஸ்ரீபெரும்புதூர், பூந்தமல்லி, திருவள்ளூர், கடம்பத்தூர் ஆகிய வட்டாரங்களில் பஞ்சாயத்து யூனியன் துவக்கி வைக்கப்பட்டது. ஒவ்வொரு வட்டாரங்களிலும், விழாவில் அரசாங்கத்தின் சார்பில் மாவட்ட அரசாங்க அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தென் ஆற்காடு மாவட்டம்

தென் ஆற்காடு மாவட்டத்தில் பஞ்சாயத்து வாரவிழா விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. 1960-ம் ஆண்டு செப்டம்பர் மீ 25 தேதி அன்று கடலூரில் நடைபெற்ற பஞ்சாயத்துத் தலைவர்கள் மகாநாட்டில் முதல் அமைச்சர் **ஸ்ரீ காமராஜ்** அவர்களும் கலந்து கொண்டது சிறப்பாகக் குறிப்பிடத்தக்க அம்சமாகும். பஞ்சாயத்துத் தலைவர்கள் மகாநாட்டை ஒட்டி கடலூர் நகரமே புதுப் பொலிவுடனும் புதுச்சோபையுடனும் திகழ்ந்தது எனலாம். காலையில் நடைபெற்ற பிரம்மாண்டமான ஊர்வலம் எல்லோருடைய

கருத்தையும் கவர்ந்து விட்டது. கலெக்டர் ஆபீசுக்கு எதிரில் முனிசிபல் மைதானத்தில் விசேஷமாக அமைக்கப்பட்டிருந்த கொட்டகையில் மகாநாடு நடைபெற்றது. மேடையில் மாவட்டத்தைச் சேர்ந்த மாவட்ட அபிவிருத்தி மன்ற உறுப்பினர்கள், சட்டப்பேரவை உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் அமர்ந்திருந்தனர். மகாத்மா காந்தியடிகளின் உருவப் படத்தை ஸ்ரீ பொன்னப்ப நாயுடு அவர்கள் திறந்து வைத்தார்கள். மாவட்டக் கலெக்டர் ஸ்ரீ எஸ். ஏ. சுந்தரராஜன், ஐ.ஏ.எஸ்., அவர்கள் மகாநாட்டுத் தலைவர் என்ற முறையில் எல்லோரையும் வரவேற்றுப் பேசுகையில் புதிய பஞ்சாயத்துச் சட்டத்தின் முக்கியத்துவத்தையும், பஞ்சாயத்து நிறுவனங்களின் புதிய பொறுப்புகளைப்பற்றியும் விளக்கிப் பேசினார்கள். அதன் பிறகு, முதல் அமைச்சர் **ஸ்ரீ காமராஜ்** அவர்கள் சொற்பொழிவாற்றினார்கள். மகாத்மா காந்தியடிகள் கண்ட கனவு நனவாகின்ற வகையில் இந்த புதிய பஞ்சாயத்துச் சட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது என்றும் எல்லோரும் கட்சிப் பூசல்களை மறந்து ஒற்றுமையுடன் இந்தச் சட்டத்தை செயல்படுத்த முன் வரவேண்டுமென்றும் முதல் அமைச்சர் அவர்கள் வேண்டுகோள் விடுத்தார்கள். மாநில கவர்னர், ஸ்ரீ எஸ். கே. டே ஆகியோரிடமிருந்து வந்த வாழ்த்துச் செய்திகள் பின்பு படிக்கப்பட்டன. சிறந்த சர்வோதய ஊழியர்களில் ஒருவரான ஸ்ரீ எஸ். ஆர். சுப்ரமணியம் அவர்கள் உண்மையான கிராம ராஜ்யம் என்றால் என்ன என்பதை தெளிவாக விளக்கிப் பேசினார்கள். பின்பு மகாநாட்டுடன் அமைக்கப்பட்டிருந்த பொருட் காட்சியை முதல் அமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

பகல் மூன்று மணிக்கு மகாநாடு மறுபடியும் கூடியது. கீழ்க்கண்ட பிரமுகர்கள் அவ்வமயம் சொற்பொழிவாற்றினார்கள் :—

(1) ஸ்ரீ எஸ். கிருஷ்ணசாமி பிள்ளை, இணைச் செயலாளர், கிராம அபிவிருத்தி, தல நிர்வாகத்துறை.

(2) ஸ்ரீ ஏ. என். நடராஜன், பி.ஏ. (ஹானர்ஸ்), மாவட்டக் கலெக்டரின் உதவியாளர் (திட்டம், அபிவிருத்தி).

(3) ஸ்ரீ அண்ணுசாமி, பி.எஸ்.சி. (Ag.), மாவட்ட விவசாய அதிகாரி.

(4) ஸ்ரீ சங்கரன், வைத்திய அதிகாரி.

(5) ஸ்ரீ ஜீ. வாகீசம் பிள்ளை, எம்.எல்.ஏ.

(6) ஸ்ரீ ஆர். கோவிந்தசாமி பிள்ளை, மாவட்ட அபிவிருத்தி மன்ற உறுப்பினர், கள்ளக்குரிச்சி தாலூகா.

மாலையில் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

1960-ம் ஆண்டு செப்டம்பர் மீ 30உ அன்று மாவட்டத்தில் உள்ள பஞ்சாயத்துக்களில் எல்லாம் பஞ்சாயத்து தினம் கொண்டாடப்பட்டது. 1960-ம் ஆண்டு அக்டோபர் மீ 2உ அன்று பண்ருட்டி, ஒரத்தூர், கள்ளக்குரிச்சி, மேல்மாயனூர், செஞ்சி, சின்ன சேலம், திருநாவலூர் ஆகிய ஏழு வட்டாரங்களில் பஞ்சாயத்து யூனியன் ஆரம்ப விழா மிகவும் கோலாகலமான முறையில் அனுசரிக்கப்பட்டது.

தஞ்சாவூர் மாவட்டம்

தஞ்சை மாவட்டத்தில் பஞ்சாயத்து வார விழாக் கொண்டாட்டத்தில் பொது மராமத்துத் துறை அமைச்சர் **ஸ்ரீ கக்கன்** அவர்கள் கலந்து கொண்டார்கள். தஞ்சையில் 1960-ம் ஆண்டு செப்டம்பர் மீ 25உ அன்று நடைபெற்ற மாவட்ட பஞ்சாயத்துத் தலைவர்கள் மகாநாடு எல்லா வகையிலும் சிறப்புடன் விளங்கியது எனலாம். மகாநாட்டை ஒட்டி அன்று காலை நடைபெற்ற ஊர்வலம் தனிச் சிறப்புடையது. கலை வளர்ச்சியில் அதிக ஈடுபாடுடைய தஞ்சை மாவட்டத்தின் கலைச் சிறப்பு அன்று நடத்தப் பெற்ற ஊர்வலத்தில் தெள்ளென விளங்கியது எனலாம். அமைச்சர் **ஸ்ரீ கக்கன்**, மாவட்டக் கலெக்டர், மாவட்டத்தைச் சேர்ந்த சட்டப்பேரவை உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரீ அய்யாக்கண்ணு ஆகியோர் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

காலை 9 மணிக்கு மகாநாடு துவங்கியது. மகாநாட்டு கொட்டகையின் அலங்கார அமைப்பு மிகவும் சீரிய முறையில் அமைந்திருந்தது. ஸ்ரீ ஏ. கிருஷ்ணசாமி வாண்டையார், எம். எல். சி., அவர்கள் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார்கள். பொருட் காட்சியை ஏ. ஒய். எஸ். பரிசுத்த நாடார், எம். எல். ஏ., அவர்கள் திறந்து வைத்தார்கள். மாவட்டக் கலெக்டர் ஸ்ரீ எம். சந்திரசேகரன், ஐ. ஏ. எஸ்., அவர்கள் மகாநாட்டுக்கு வந்திருந்த எல்லோரையும் வரவேற்றுப் பேசுகையில், புதிய பஞ்சாயத்துச் சட்டத்தின் முக்கிய அம்சங்களை தெளிவாக விளக்கினார்கள். பின்பு ஸ்ரீ ஏ. கிருஷ்ணசாமி வாண்டையார், எம். எல். சி., அவர்கள் தேசியக் கொடியின் மகத்துவத்தைப்பற்றி பேசினார்கள். பின்பு மகாத்மா காந்தியடிகளின் வாழ்க்கை பற்றியும் அவருடைய லட்சியங்கள் பற்றியும் சர்தார் வேதரத்தினம் பிள்ளை, எம். எல். ஏ., அவர்கள் அரியதொரு சொற்பொழிவாற்றினார்கள். பின்பு அமைச்சர் **ஸ்ரீ கக்கன்** அவர்கள் புதிய பஞ்சாயத்துச் சட்டத்தின் முக்கிய அம்சங்களைப்பற்றியும் மக்களின் கடமை பற்றியும் பேசினார்கள். காலை நிகழ்ச்சி இத்துடன் முடிவடைந்தது.

மாலை மூன்றரை மணிக்கு மகாநாடு மறுபடியும் துவங்கியது. கீழ்க்கண்ட பிரமுகர்கள் அவ்வமயம் பேசினார்கள் :—

(1) ஸ்ரீ சி. முத்தையா பிள்ளை, எம். எல். ஏ.

(2) ஸ்ரீ திட்டை சுப்பிரமணியம், எம். எல்.ஏ.

(3) ஸ்ரீ ராமாமிர்த தொண்டைமான், எம். எல். ஏ.

(4) ஸ்ரீ ஆர். சீனிவாச அய்யர், எம். எல். ஏ.

(14-ம் பக்கம் பார்க்கவும்)

1–3. இடைப்பாடி வட்டார பஞ்சாயத்து யூனியன் துவக்க விழா.

4. கடம்பத்தூர் வட்டார பஞ்சாயத்து யூனியன் துவக்க விழா.

5. மதுரை மேற்கு வட்டார பஞ்சாயத்து யூனியன் துவக்க விழா.

செட்டி நாட்டு நாடோடிப்பாடல்கள்

R.P.

"சோமலெ"

[செட்டி நாடு என்பது ராமநாதபுரம், திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் சில பகுதிகளாகும். இங்கு வழங்கும் நாடோடிப் பாடல்களில் பெருவாரியானவை கட்டபொம்மன், மருதுபாண்டியர் ஆகியோரின் வரலாறு பற்றியவை. ஏனைய நாட்டுப் பாடல்களில், மக்களைப் பெற்ற மாதர் பாடும் இன்பத்தாலாட்டும் கண்ணீரோடு கலந்து வரும் ஒப்பாரிக் கவிதையும் தனிச் சிறப்புடையன என்று தமிழ் அறிஞர்களாலும் பாமர மக்களாலும் பாராட்டப்பெற்றவை. இக்கட்டுரை ஆசிரியர் உலகம் சுற்றியவர். இருந்தாலும் பிறந்த மண்ணை யார்தான் மறக்க முடியும்? தமிழ் நாட்டின் சிறந்த எழுத்தாளர்களில் ஒருவரும் செட்டு நாட்டு வாழ்க்கையில் ஊறித் திளைத்தவருமான 'சோமலெ' அவர்களின் கட்டுரையை பெரு மகிழ்ச்சியுடன் இங்கு வெளியிடுகிறோம்.....

—ஆசிரியர்.]

செட்டி நாட்டில் பெண் குழந்தைகளை பள்ளிக்கூடத்திற்கு அனுப்பும் வழக்கம் 1930-லேயே ஏற்பட்டது. அதற்கு முற்பட்ட காலத்தில் பெண்கள் தொடக்கப்பள்ளிக்கூடப் படிப்புக்கூட இல்லாதிருந்தனர். அவ்வாறிருந்தும், கேள்வி அறிவாலும், உலகியல் அநுபவத்தாலும், பரம்பரைப் புலமையாலும், இலக்கிய மணம் கமழும் சொற்றொடர்களை அமைத்துப்பாடும் திறம் இவர்களிடம் இயல்பாக அமைந்திருக்கிறது. தங்கள் செல்வச் சிறுவர்கள் கண்ணயரப் பாடுகின்ற தாலாட்டுகளும், தம் உற்றார் உறவினரைப் பறிகொடுத்து மனம் குமுறும் வேளையில் புலம்பும் ஒப்பாரிகளும் இவர்களது ஆற்றலுக்குச் சான்று பகருகின்றன.

தலைமுறை தலைமுறையாக வழங்கிவரும் தாலாட்டு

ஊர்பேர் தெரியாத செட்டி நாட்டு மூதாட்டியர் பாடிய தாலாட்டுகள் பல தலைமுறையாக வாய்மொழி மூலம் பரவி வருகின்றன.

தாலாட்டுகளில் பல தரப்பட்ட கருத்துக்களைப் பரக்கக் காணலாம். மக்கட் செல்வத்தைப் பெறுவதற்கு துடிக்கும் தாய் நோற்ற நோன்பு அதில் இடம் பெறும். சேய், தன் தாய்க்குத் தரும் தன்னேரில்லா இன்பம் அதில் இனிது விளங்கும்; அம்மான் மாரும், ஏனைய உறவினரும் குழந்தைக்கு அன்புடன் தரும் பொன், பொருள், விளையாட்டுக்கருவிகளையும் அதில் காணலாம். அவர்கள் வாழும் மாட மாளிகைகளையும், மங்கலப் பொருளாக விளங்கும் "வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளற் பெரும் பசுக்களை"யும் அப்பசுக்கள் தரும் பாலிலிருந்து பெறும் நறுமணமுள்ள நெய்யையும், வேலையாட்களின் வரிசைகளையும் தெரிவித்துச் செட்டி நாட்டுச் செல்வக் குடும்பங்களின் வாழ்க்கையை இப்பாடல்கள் நம் கண் முன்னே நிறுத்துகின்றன.

இவ்வாறு அரிய செய்திகளைத் தரும் தாலாட்டுகள் இலக்கிய இன்பம் தருபவையாகவும் உள்ளன. சில பகுதிகள், புகழ் பெற்ற கவிஞர்களை நமக்கு நினைவூட்டும். கோவலன், கண்ணகியின் நலம் பாராட்டும்

"மாசறு பொன்னே, வலம்புரி முத்தே
காசறு விரையே, கரும்பே, தேனே"

என்ற இளங்கோ அடிகளின் வரிகளைப் பின் வரும் தாலாட்டுப் பகுதி நம் நினைவுக்குக் கொண்டு வருகிறது:

"சந்தனமோ என் பொருளோ
சாமிதந்த தவப்பயனோ
கொட்டிவைத்த முத்தோ
குமிச்சு வைத்த ரத்தினமோ......"

பள்ளிப் படிப்பறியாத செட்டி நாட்டுத் தாயின் பைந்தமிழ்ப் பற்றை, தன் அருமை மகளை

"தமிழோ புனக்கிளியோ"

என்று பாராட்டுவதிலிருந்து அறியலாம்.

"பிள்ளைக்கனி அமுதே
பேசும் பொற் சித்திரமே"

என்ற பாரதியாரின் அடிகளுக்கு விளக்கம் கூறுவது போல

"கோடை பலாச்சுளையும்
குலைசேர்ந்த மாங்கனியும்"

என்ற தாலாட்டுப்பகுதி அமைந்துள்ளது.

தொட்டில் கட்டிய அற்புதம்

அருமையாகப் பெற்ற மகனுக்கு தொட்டில் கட்டி தொட்டிலில் அவனைக் கண்வளரச் செய்கிறாள் ஒரு செட்டி

நாட்டுத் தாய். தான் கட்டிய தொட்டிலே வெள்ளி வளைய மும் தங்கவளையமும் பூட்டிக் கட்டியதாக அவள் பெருமைப் படுகிருள். பால் வடிய வடிய பச்சை இலுப்பைக் கிளையை யும் வெட்டி அதிலும் தொட்டி கட்டியதாகப் பாடுகிருள்.

“ வெள்ளி வளை பூட்டி
விலாசமாய்த் தொட்டி கட்டி
தங்கவளை பூட்டி
சதுர அலங்காய் தொட்டி கட்டி
பச்சை இலுப்பை வெட்டி
பால் வடியத் தொட்டி கட்டி
தொட்டியிலே அட்டணக்கால்
தூங்குறது ஆருமகன்
சீதை மகனே
ஸ்ரீராமர் தந்த கண்ணே
அல்லி மகனே அரிராமர்
மருமகனே......”

தொட்டிலில் உறங்கும் தன் “ துரை மகனை ”ப் பார்த்துத் தாய் பூரிப்படைகிருள். தாய் அவனை, “பாண்டிப் பெரு முத்து” என்று உளம் நிறைந்து பாராட்டுகிருள். முத்துக் குளிக்கும் நிகழ்ச்சிகளும் இப்பாடலில் கூறப் படுகின்றன. முத்து வியாபாரம் செய்வதைத் தங்களுடைய முக்கிய தொழிலாகக் கொண்ட (முன்னுளில்) சமூகம் அன்றோ ?

“ வையை பெருகிவர
வாந்த மணல் ஊறிவர
ஊரி வந்த தண்ணியிலே
ஓட்டி வந்த கட்டி முத்தோ
பெருகி வந்த தண்ணியிலே
பின் அணைந்த சந்தனமோ
சந்தனமோ என் பொருளோ
சாமி தந்த தவப்பயனே
கொட்டி வைத்த முத்தோ
குமிச்சு வைத்த ரத்தினமோ
கட்டிக் கரும்போ
காணிக்கை ஆணி முத்தோ
முத்தில் ஒரு முத்தோ
முதிர விளைந்த முத்தோ
தேற விளைந்த முத்தோ
தில்லைக்கு உகந்த முத்தோ
பாண்டிப் பெரு முத்தோ
பாட்டன் மார் ஆண்ட முத்தோ
ஆணிப் பெரு முத்தோ
ஐயாக்கள் ஆண்ட முத்தோ
முத்து முத்து ஆத்துக்குள்ளே
மூணுத்து பாய்ச்சலிலே
முக்கிளிச்சு முத்தெடுக்கும்
முத்து மகன் நித்திரை போ
நித்திரையும் போவானும்

சித்திரப் பூத் தொட்டிலிலே
தாமரையும் பூக்குமாம்
தனக்கிசைந்த பொய்கையிலே
தாமரையின் வாழ் மலரோ
தங்கை பெற்ற குஞ்சலரோ ”

இவ்வாறு நாளொரு மேனியும் பொழுதொரு வண்ண மும் வளரும் குழந்தை ஓய்ந்திருக்குமா ? ஓடி விளை யாடும் அல்லவா ? அதிலும் திரை கடலோடித் திர வியம் தேடும் செட்டியார் குழந்தை அல்லவா ?

“ நாழிச் சிறு சலங்கை
நல்ல பவன் பொன் சலங்கை
உழக்குச் சிறு சலங்கை
ஓசத்தி உள்ள பொன் சலங்கை
ஆருக்கு இடுவமின்னு
தேடித் திரிகையிலே
எனக்கிடுங்க என்று சொல்லி
எதிர் கொண்டு வந்தவனே
தனக்கிடுங்க என்று சொல்லி
தம்பி துணை ஆனவனே ”

“ மீன் பூக்க நிலவரிக்க மின்னல் குளம் பெருக
மின்னலிலே காதவழி தம்பி நீ விளையாடி வந்தாயோ ?
அச்சடிக்கப் பொன் விளைய ஆதிச்சார் உன் நாடு.
வைத்திருக்கத் தந்த மகன் வாழலான் நூறு குடி.
குடகு சிறு மலையாம் கன்னியவான் ஆடுமலை.
அரிசித் தினைவிளையும் நீ பிறந்த அண்ணுமலை நாடு.”

“ ஆனை கட்டிப் போராடிக்கும் அம்மானுர் சேனை தலம்.
குதிரை கட்டிப் போரடிக்கும் கோடிப்பேர் சேனை தலம்.
மான்கட்டிப் போரடிக்கும் மாமுடிமார் சேனைதலம்.
அம்மானுர் செய்களிலே அவனுக்கொரு நெல் எடுத்து
பள்ளிதனைக் காட்டிப் பதம்போல் அவல் இடித்து
இடைச்சிதனைக்காட்டி இலைபோல் அவல் இடித்து
அவல் அழகைக் கண்ட தம்பி—நீ அழகை அமர்ந்தாயோ ! ”

பிறந்த வீட்டின் பெருமித வர்ணனை

பிறந்த வீட்டின் பெருமையைப் பேசுவது பெண்ணி னத்தின் இயல்பு. செட்டி நாட்டுப் பெண்களும் இவ் விதிக்கு உட்பட்டவர்கள்தான். தாய் வீட்டார் தந்த சீர் வரிசைகளை மெய் மறந்து பாராட்டுவர். தன் மக னுக்கு அம்மான் கொடுத்த விளையாட்டுச் சாமான்களைப்

(27-ம் பக்கம் பார்க்கவும்)

G.N.—4

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

(5) ஸ்ரீ எம். டி. தியாகராஜ பிள்ளை, எம். எல். ஏ.
(6) சர்தார் வேதரத்தினம் பிள்ளை, எம். எல். ஏ.
(7) ஸ்ரீ ஜி. நாராயணசாமி நாயுடு, எம். எல். ஏ.
(8) ஸ்ரீ எஸ். அய்யாக்கண்ணு, எம்.ஏ., எம்.பி.
(9) ஸ்ரீ டி. என். சேஷன், ஐ. ஏ. எஸ். அரசாங்க துணைச் செயலாளர்.

பிரமுகர்களின் பேச்சுக்குப் பிறகு கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. கலை நிகழ்ச்சிகள் அத்தனையும் அற்புத மான முறையில் நடத்திக் காட்டப்பட்டன. தஞ்சை மாவட்டம் என்றும் தனிச் சிறப்புடையதுதான் என்ப தற்கு இந்த மகாநாடு வியக்கத்தக்க முறையில் நடை பெற்றதே போதிய சான்றாகும். 1960-ம்ஸு செப்டம்பர்மீ 30உ தஞ்சை மாவட்டத்தில் உள்ள எல்லாப் பஞ்சா யத்துகளிலும் பஞ்சாயத்து தினம் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

1960-ம்ஸு அக்டோபர்மீ 2உ மாவட்டத்தில் பாப நாசம், கும்பகோணம், மாயூரம், சீர்காழி, கிவளூர், திருத்துறைப்பூண்டி, வேதாரணியம், பட்டுக்கோட்டை ஆகிய வட்டாரங்களில் பஞ்சாயத்து யூனியன் செயல்படத் தொடங்கியது. அதிகாரிகளும், அதிகாரப்பற்றற்றவர் களும் ஏராளமாக இந்த ஆரம்ப விழாக்களில் கலந்து கொண்டனர்.

சுருக்கமாகச் சொல்லப்போனால், தஞ்சைத் தரணி தனக்கே உரித்தான முறையில் கலையழகு பொருந்திய ஒரு தனிச்சிறப்புடன் பஞ்சாயத்து வார விழாவைக் கொண்டாடியது எனலாம்.

திருச்சிராப்பள்ளி மாவட்டம்

பஞ்சாயத்து வார விழா திருச்சிராப்பள்ளி மாவட்டத் தில் மிகவும் அற்புதமான முறையில் கொண்டாடப்பட் டது. பண்டைக்கால கிராமக் குடி ஆட்சி முறையின் சிறப் பியல்புகளை உணர்ந்த சோழ நாடு அல்லவா ?

மாவட்ட பஞ்சாயத்து தலைவர்கள் மகாநாடு மாவட்டத் தலைநகராகிய திருச்சிராப்பள்ளியில் 1960-ம்ஸு செப்டம் பர்மீ 25உ அன்று மிகுந்த கோலாகலத்திடன் நடந் தேறியது. அன்று காலை நகரின் மெயின் கார்டு கேட்டி லிருந்து ஒரு பிரம்மாண்டமான ஊர்வலம் புறப்பட்டு மகாநாடு நடக்கும் கலெக்டர் அலுவலகத்தை ஒட்டி போடப்பட்டிருந்த பெரும் கொட்டகையை சென்றடைந் தது. நகரின் முக்கிய வீதிகள் வழியே சென்ற இந்த ஊர்வலத்தில் மாநில மின்சாரத்துறை அமைச்சர் **ஸ்ரீ வீ. ராமையா** அவர்கள், மற்றும் மாவட்ட கலெக்டர் ஸ்ரீ குலாம் அஹமது பாட்சா, ஐ. ஏ. எஸ்., மாவட்ட அபிவிருத்தி மன்ற உறுப்பினர்கள், மாவட்டத்தைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்டப்பேரவை உறுப்பினர்கள், பஞ்சாயத்துத் தலைவர்கள் எல்லோரும் கலந்து கொண்டனர்.

மகாநாட்டுப் பந்தலில் மகாத்மா காந்தியடிகளின் உரு வப் படத்தை அமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள். பின்பு மாநில கவர்னர், ஸ்ரீ எஸ். கே. டே ஆகியோரின் வாழ்த்துச் செய்திகள் படிக்கப்பட்டன. மகாநாட்டிற்கு வந்திருந்த பஞ்சாயத்து தலைவர்களை வரவேற்று மாவட்டக் கலெக்டர் அவர்கள் பேசுகையில் புதிய பஞ்சாயத்துச் சட்டத்தின் முக்கிய அம்சங்கள் பற்றியும், முக்கியத்துவத் தைப் பற்றியும் விளக்கமாக எடுத்துக் கூறினார்கள். பின்பு அமைச்சர் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவில் புதிய பஞ்சாயத்து ஆட்சியில் மக்களுடைய கடமைகள், பொறுப் புகள் என்ன என்பதை அழகாக விளக்கி நம்மிடையே ஒற்றுமை வளர்ச்சி நிலவவேண்டியதின் அவசியத்தை வலியுறுத்தினார்கள். அமைச்சருக்குப் பிறகு ஸ்ரீ டி. எஸ். அருணாசலம், எம்.எல்.சி., அவர்கள் கருத்தாழம் நிறைந்த சொற்பொழிவொன்றை ஆற்றினார்கள். பின்பு மாவட்டத்தில் அதிகப்படியான நெல்லையும், கரும்பையும் விளைச்சல் செய்த இரண்டு விவசாயிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடி வடைந்தன.

மாலையில் முதல் பேச்சாளராக பேசிய ஸ்ரீ பழனியாண்டி, எம்.பி. அவர்கள் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றி வைப்பதில் பஞ்சாயத்துக்களின் பங்கு என்ன என்பது பற்றி விளக்கிப் பேசினார்கள். ஸ்ரீ எஸ். லாசர் உடை யார், எம். எல். ஏ., அவர்கள் புதிய சட்டத்தின் அம்சங்களை எடுத்து விளக்கினார்கள். ஸ்ரீ டி. எம். நல்லுசாமி, எம்.எல்.ஏ., அவர்கள் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை வெற்றிகரமாக நடத்தி வைப்பதில் பஞ்சாயத்துக்களுக் குள்ள பெரும் பொறுப்புபற்றி வலியுறுத்திப் பேசினார்கள். மாவட்ட வேளாண்மை அதிகாரி ஸ்ரீ ஜி. முருகேசன் அவர்கள் "உணவு உற்பத்தி" பற்றியும், ஸ்ரீ டி. எஸ் துரைராஜ் பிள்ளை, எம்.எல்.சி., அவர்கள் பஞ்சாயத்து தலைவர்களைப் பாராட்டியும் பேசினார்கள்.

இரவு கலை நிகழ்ச்சிகள் நடந்தேறின. அகில இந்திய ரேடியோ திருச்சி நிலைய கலைஞர்களும் கலை நிகழ்ச்சி களில் கலந்து கொண்டனர்.

1960-ம் வருஷம் செப்டம்பர்மீ 30உ மாவட்டமெங்கிலும் பஞ்சாயத்துக்களில் பஞ்சாயத்து தினமாக மிகுந்த கோலா கலத்துடன் கொண்டாடப்பட்டது.

1960-ம் வருஷம் அக்டோபர்மீ 2உ அன்று திருச்சிராப் பள்ளி மாவட்டத்தில் கே. பரமத்தி, குளித்தலை, திருவரங் குளம், தொட்டியம், முசிறி, லால்குடி, வேப்பந்தட்டை ஆகிய வட்டாரங்களில் பஞ்சாயத்து யூனியன் துவக்கி வைக்கப்பட்டது. பஞ்சாயத்து யூனியன் துவக்க விழா இந்த ஏழு வட்டாரங்களிலும் அழகான முறையில் கொண்டாடப்பட்டது.

மதுரை மாவட்டம்

சரித்திரப் பிரசித்தி பெற்ற மதுரை மாநகரிலே 1960ம்ஸு செப்டம்பர்மீ 25உஅன்று **கூடிய மதுரை**

மாவட்ட பஞ்சாயத்து தலைவர்கள் மகாநாடு சரித்திர பிரசித்தம் வாய்ந்தது என்று சொன்னால் மிகை யாகாது. எந்த நல்ல காரியத்தை துவக்கி வைப் பதிலுமே முன்னோடியாக எப்பொழுதும் விளங்கும் மதுரை மாவட்டம் பஞ்சாயத்து வார விழாவைச் சிறப் பாக கொண்டாடுவதிலும் முன்னோடியாகவே விளங்கி யது. மதுரையில் நடைபெற்ற விழாவில் நில வருவாய்த் துறை அமைச்சர் ஸ்ரீ எம். ஏ. மாணிக்கவேலு அவர்கள் கலந்துகொண்டார்கள்.

ஸ்ரீ மீனாட்சி அம்மன் கோயிலின் அருகில் உள்ள காந்தி சிலைக்கு அருகிலிருந்து அன்று காலை ஒரு பெரிய ஊர்வலம் புறப்பட்டு மகாநாடு நடைபெற்ற தம்கம் மைதா னத்தைச் சென்றடைந்தது. ஊர்வலத்தில் அமைச்சர், மாவட்டக் கலெக்டர் ஸ்ரீ எஸ். விஸ்வநாதன், ஐ.ஏ.எஸ்., மற்றும் மாவட்டப் பஞ்சாயத்துத் தலைவர்கள், மாவட்டத் தைச் சேர்ந்த மாவட்ட அபிவிருத்தி மன்ற உறுப்பினர் கள், சட்டப் பேரவை உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், நகரப் பிரமுகர்கள் எல்லோரும் கலந்து கொண்டனர். ஊர்வலம் ஏறக்குறைய ஒரு மைல் நீளம் இருந்தது.

மகாநாட்டின் ஆரம்ப அம்சமாக ராஜ்ய பஞ்சாயத்துத் தலைவர்கள் சங்கத்தின் தலைவர் ஸ்ரீ கு. ராஜாராம் அவர் கள் தேசீயக் கொடியை ஏற்றி வைத்தார்கள். இறை வணக்கத்திற்குப் பிறகு, பழம் பெரும் தேசபக்தர் ஸ்ரீ என். எம். ஆர். சுப்பராமன் அவர்கள் மகாத்மா காந்தியடி களின் உருவப் படத்தை திறந்து வைத்தார்கள். மாவட்ட டக் கலெக்டரின் வரவேற்புரைக்குப் பின்னர், அமைச்சர் அவர்கள் மகாநாட்டை துவக்கி வைத்துப் பேசினார்கள். அவர் தன்னுடைய பேச்சில் நம்மிடையே, அதுவும் குறிப் பாக பஞ்சாயத்துகளை ஏற்று நடத்துபவர்களிடத்தில், ஒற் றுமை நிலவ வேண்டியதின் அவசியத்தை வலியுறுத்தி னார்கள். புதிய பஞ்சாயத்துச் சட்டத்தின் சிறப்பான அம் சங்களைப்பற்றியும் அதன் முக்கியத்துவத்தைப்பற்றியும் அவர் விளக்கிப்பேசினார்கள். பின்பு கவர்னர், எஸ்.கே. டே ஆகியோரிடமிருந்து வந்திருந்த வாழ்த்துச் செய்திகள் படிக்கப்பட்டன.

பின்பு கீழ்க்கண்ட பிரமுகர்கள் பேசினார்கள் :— ஸ்ரீ என். எம். ஆர். சுப்பராமன், ஸ்ரீ கு. ராஜாராம், தலைவர், ராஜ்ய பஞ்சாயத்து தலைவர்கள் சங்கத்தலைவர், ஸ்ரீ எஸ். தேவசகாயம், மதுரை நகர் மன்றத் தலைவர், ஸ்ரீமதி சௌந்தரம் ராமச்சந்திரன், எம். எல். ஏ., ஸ்ரீ எம். அழகிரிசாமி, எம்.எல்.ஏ., ஸ்ரீ கே. வெங்கட சுப்ரமணியன், மாவட்டக் கல்வி அதிகாரி, ஸ்ரீ கே. டி. கே தங்கமணி, எம்.பி., ஸ்ரீ குருசாமிநாடார், செயலாளர், காந்தி கிராமம், மாவட்ட விளம்பர அதிகாரி ஸ்ரீ ஆர். கே. கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் மகாநாட்டில் சொற்பொழிவாற்றினார்கள்.

இரவு மகாநாட்டுப் பந்தலில் கலை நிகழ்ச்சிகள் நடை பெற்றன.

1960-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30-ம் தேதியில் மாவட்டமெங்கிலும் எல்லாப் பஞ்சாயத்துக்களிலும் பஞ்சா யத்து தினம் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது.

1960-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 2-ம் தேதியில் மாவட் டத்தில், தே. கல்லுப்பட்டி, திருமங்கலம், உசிலம்பட்டி, வாடிப்பட்டி, அலங்காநல்லூர், மதுரை கிழக்கு, மதுரை மேற்கு, மேலூர்-I ஆகிய எட்டு வட்டாரங்களில் பஞ்சா யத்து யூனியன் செயல்படத் தொடங்கியது. இந்த எட்டு வட்டாரங்களிலும் பஞ்சாயத்து யூனியன் ஆரம்ப விழா மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்றது. தே. கல் லுப்பட்டி பஞ்சாயத்து யூனியன் துவக்க விழாவில் மாநில இணை அபிவிருத்திக் கமிஷனர் ஸ்ரீ கோ. வேங்கடாசலபதி அவர்கள் கலந்து கொண்டு அரியதொரு சொற்பொழி வாற்றினார்கள். மொத்தத்தில் பஞ்சாயத்து வார விழா வைக் கொண்டாடுவதில் மதுரை மாவட்ட மக்கள் காட்டிய உற்சாகம் மட்டற்ற மகிழ்ச்சியை அளிக்கும் வகையில் இருந்தது.

ராமநாதபுரம் மாவட்டம்

ராமநாதபுரம் மாவட்டத்தில் பஞ்சாயத்து வாரவிழா சீரிய முறையில் கொண்டாடப்பட்டது. பஞ்சாயத்து தலை வர்கள் மகாநாடு, பஞ்சாயத்து தினக் கொண்டாட்டம், பஞ்சாயத்து யூனியன் துவக்க விழா ஆகிய மூன்று விழாக்களும் நல்ல முறையில் கொண்டாடப்பட்டன.

1960-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 25-ம் தேதியில் மாவட்ட பஞ்சாயத்து தலைவர்கள் மகாநாடு தேவகோட்டை யில் நடைபெற்றது. மூவாயிரம் பேர் கொண்ட ஊர்வலம் ஒன்று அன்று காலையில் நடைபெற்றது. ஊர்வலத்தில் தல நிர்வாகத் துறை அமைச்சர் ஸ்ரீமதி லூர்தம்மாள் சைமன் அவர்கள், மாவட்டக் கலெக்டர், மற்றும் மாவட்டத்தைச் சேர்ந்த பஞ்சாயத்து தலைவர்கள், சட்ட மன்ற உறுப்பினர்கள், பாராளு மன்ற உறுப்பினர்கள், மாவட்ட அபிவிருத்தி மன்ற உறுப்பினர்கள், மற்றும் நகரப் பிரமுகர்கள் எல்லோரும் கலந்து கொண்டனர்.

மாவட்டக் கலெக்டரின் வரவேற்புரைக்குப் பிறகு, அமைச்சர் அவர்கள் மகாநாட்டைத் துவக்கி வைத்து அரியதொரு சொற்பொழிவாற்றினார்கள். புதிய பஞ்சா யத்துச் சட்டத்தை பஞ்சாயத்து சம்பந்தப்பட்டவர்கள் நன் றாகப்புரிந்து கொண்டு, கடமையுணர்ச்சியுடனும் ஒற்றுமை யுணர்ச்சிடனும் செயலாற்ற வேண்டும் என்று அவர்கள் கேட்டுக்கொண்டார்கள். அதிகமான பொறுப்புக்கள் பஞ்சாயத்துகள் வசம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன என் றும் அதைக் கட்டிக்காப்பது பஞ்சாயத்துக்களின் தலையாய கடமை என்றும் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

மாலை நிகழ்ச்சிகளில் மாவட்டத்தைச் சேர்ந்த ஆறு பிரமுகர்களின் அரிய சொற்பொழிவுகள் இருந்தன. சொற்பொழிவாளர்கள் அத்தனை பேரும் பஞ்சாயத்து களின் புதிய பொறுப்புகள் பற்றியும், ஒற்றுமையின்

அவசியத்தைப்பற்றியும் வலியுறுத்தினார்கள். இரவு மகா நாட்டுக் கொட்டகையில் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன

1960-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30-ம் தேதியில் மாவட்டமெங்கிலும் எல்லாப் பஞ்சாயத்துகளிலும் பஞ்சாயத்து தினம் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

1960-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 2-ம் தேதியில் மாவட்டத்தில், சிங்கம்புணரி, திருவாடானை, பரமக்குடி, கமுதி, சிவகாசி, ஸ்ரீவில்லிபுத்தூர், கரியப்பட்டி ஆகிய வட்டாரங்களில் பஞ்சாயத்து யூனியன் ஆரம்பமாகியது. யூனியன் ஆரம்ப விழா ஏழு வட்டாரங்களிலும் சிறப்பாக நடந்தேறியது.

திருநெல்வேலி மாவட்டம்

பஞ்சாயத்து வார விழா திருநெல்வேலி மாவட்டத்தில் சீரிய முறையில் கொண்டாடப்பட்டது. 1960-ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 25-ம் தேதியில் நடைபெற்ற மாவட்ட பஞ்சாயத்துத் தலைவர்கள் மகாநாடு, 1960-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30-ம் தேதியில் கொண்டாடப்பட்ட பஞ்சாயத்து தின விழா, 1960-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 2-ம் தேதியில் கொண்டாடப்பட்ட பஞ்சாயத்து யூனியன் துவக்க விழா எல்லாமே மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்றது.

1960-ம் ஆண்டு செப்டம்பர் மீ 25உ அன்று காலை திருநெல்வேலி நகரில் மாவட்ட பஞ்சாயத்துத் தலைவர்கள் மகாநாடு நடைபெற்றது. அன்று காலை சாலை குமாரசாமி கோயிலிருந்து ஒரு பிரம்மாண்டமான ஊர்வலம் புறப்பட்டு நகரின் முக்கிய வீதிகள் வழியாக மகாநாட்டுப் பந்தலை வந்தடைந்தது. ராஜ்ய உள்நாட்டுத்துறை அமைச்சர் **ஸ்ரீ எம். பக்தவத்ஸலம்,** மாவட்ட கலெக்டர் ஸ்ரீ ஆர். பசுபதி, ஐ.ஏ.எஸ்., மற்றும் மாவட்டத்தைச் சேர்ந்த பஞ்சாயத்துத் தலைவர்கள், சட்ட மன்ற உறுப்பினர்கள், பாராளு மன்ற உறுப்பினர்கள், மாவட்ட அபிவிருத்தி மன்ற உறுப்பினர்கள் மற்றும் மாவட்டப் பிரமுகர்கள் புடைசூழ ஊர்வலம் நடைபெற்றது.

மகாநாட்டிற்கு மாவட்டக் கலெக்டர் தலைமை வகித்தார். நீண்டகாலம் பஞ்சாயத்துத் தலைவராகத் தொண்டாற்றி வந்துள்ள கலிங்கப்பட்டி பஞ்சாயத்து தலைவர் ஸ்ரீ சங்கரப்ப நாயுடு அவர்கள் தேசீயக் கொடியை ஏற்றி வைத்தார். ஸ்ரீ கே. ராமசுப்பு, எம்.எல்.ஏ., எல்லோரையும் வரவேற்றுப் பேசினார். ஸ்ரீ கோமதி சங்கர தீக்ஷிதர், எம்.எல்.ஏ., மகாத்மா காந்தியடிகளின் உருவப் படத்தைத் திறந்து வைத்தார். மேலகரம் பஞ்சாயத்து போர்டு தலைவர் ஸ்ரீ கே. எஸ். ஷண்முகசுந்தரம் அவர்கள் பொருட்காட்சியை திறந்து வைத்தார்கள். கவர்னர், எஸ். கே. டே ஆகியோரிடமிருந்து வந்திருந்த வாழ்த்துச் செய்திகள் படிக்கப்பட்டன.

புதிய சட்டத்தைப் பற்றி விளக்கி மாவட்டக் கலெக்டர் பேசிய பிறகு உள்நாட்டுத்துறை அமைச்சர் அவர்கள் பேசினார்கள். புதிய சட்டத்தின் பீடிகையில் கண்டுள்ள உணவு உற்பத்தி, குடும்பக் கட்டுப்பாடு ஆகிய இரண்டு அம்சங்களின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி அமைச்சர் அவர்கள் பேசினார்கள். புதிய சட்டத்தின்கீழ் கொடுக்கப்பட்டுள்ள பொறுப்புகளைப் பற்றிக் குறிப்பிட்டு இதையெல்லாம் நிறைவேற்ற வேண்டுமென்றால் நம்மிடையே ஒற்றுமை உணர்ச்சி நிலவ வேண்டியது மிக மிக அவசியம் என அவர்கள் வலியுறுத்தினார்கள்.

மகாநாட்டில் கீழ்க்கண்ட பிரமுகர்கள் சொற்பொழிவாற்றினார்கள் :—

(1) ஸ்ரீ எல். எம். கே. பாலசுப்பிரமணியம் செட்டியார், தலைவர், சங்கரன்கோயில் பஞ்சாயத்து.

(2) ஸ்ரீ என். கோபாலன், மாவட்டக் கல்வி அதிகாரி.

(3) ஸ்ரீ நாகு ரெட்டி, குருக்குத்தலை பஞ்சாயத்துத் தலைவர்.

(4) ஸ்ரீ எல். கே. எம். அப்துல் ரஹிமான் சாயபு, மேலப்பாளையம் நகராட்சி மன்றத் தலைவர்.

(5) ஸ்ரீ பி. கே. எம். கைலாசம் பிள்ளை, தலைவர், தச்சாநல்லூர் பஞ்சாயத்து.

(6) டாக்டர் ஸ்ரீமதி தங்கம் ராமகிருஷ்ணன்.

(7) ஸ்ரீ என். டி. வானமாமலை, வழக்கறிஞர், பாளையங்கோட்டை.

(8) ஸ்ரீ எஸ். வி. ராமகிருஷ்ணன், தலைவர், செங்குபட்டி பஞ்சாயத்து.

(9) ஸ்ரீ ஜி. வெங்கடகிருஷ்ணன், மாவட்ட வேளாண்மை அதிகாரி.

(10) ஸ்ரீ ஆர். வி. அனந்தகிருஷ்ணன், தலைவர், விக்கிரமசிங்கபுரம் பஞ்சாயத்து.

(11) ஸ்ரீ பி. டி. தாணுப்பிள்ளை, பாராளு மன்ற உறுப்பினர்.

(12) ஸ்ரீ ரங்கநாத முதலியார், தலைவர், இருக்கன்துறை பஞ்சாயத்து,

(13) ஸ்ரீ சித்ரபுத்ரன், டிவிஷனல் பஞ்சாயத்து அதிகாரி, கோயில்பட்டி.

(14) ஸ்ரீ லத்தீப், தலைவர், ஏருவடி பஞ்சாயத்து.

(15) ஸ்ரீ ஆர். கணபதி கரையாளர், தலைவர், ஆயக்குடி பஞ்சாயத்து.

(16) ஸ்ரீ எம். சங்கர பாண்டியன் பிள்ளை, பாராளு மன்ற உறுப்பினர்.

(17) ஸ்ரீ குத்தாலிங்கம் செட்டியார், திருநெல்வேலி நகராட்சி மன்றத் தலைவர்.

(18) ஸ்ரீ சங்கர நாராயண பிள்ளை, தூத்துக்குடி நகராட்சி மன்றத் தலைவர்.

மகாநாட்டுக் கொட்டகையில் இரவு கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

(29-ம் பக்கம் பார்க்கவும்)

"கதர் வார விழா"





சென்னையில் கதர் வார விழாக்
கொண்டாட்டப் படங்கள்.

A—திண்டுக்கல் பஞ்சாயத்து யூனி
யன் அலுவலகத்தை 12–10–60–
மத்திய அரசாங்க ரயில்வே அமை
சர் ஸ்ரீ. ஜகஜீவன்ராம் அவர்க
திறந்து வைத்தார்கள்.

G.N.—5

R.P.





குச்சிபூடி நாட்டிய நாடகங்கள் சென்னையில் அக்டோபர் 8, 9, 10 தேதிகளில் விமரிசையாக நடைபெற்றன.

“ குச்சிபூடி நாட்டிய நாடகங்கள் ”

ஆந்திர ராஜ்யத்தைச் சேர்ந்த குச்சிபூடியிலிருந்து ஸ்ரீவெங்கடராம நாட்டிய மண்டலி குழுவினர் சமீபத்தில் சென்னைக்கு விஜயம் செய்து அக்டோபர் 8, 9, 10-ம் தேதிகளில் நாட்டிய நாடகங்களை நடத்திக் காட்டினர். இவர்கள் மதுரை, தஞ்சை ஆகிய இடங்களுக்கும் சென்று நாட்டியமாடினர். “உஷா பரிணயத்தையும்”, “பாமா கலாப ” த்தையும் இவர்கள் நடத்திக் காட்டினர். இந்த நாட்டிய நாடகங்கள் தமிழ் மக்களின் கவனத்தை வெகுவாக கவர்ந்துவிட்டன என சொல்லலாம்.

இந்தக் கலை ஆந்திர ராஜ்யத்தைச் சேர்ந்த குச்சிபூடி கிராமத்தில் தோன்றியதால், இந்தக் கலை பாணிக்கே குச்சிபூடி நாட்டியமென்ற பெயர் வந்தது. பல நூற்றாண்டு களாக இக்கலையை அந்தக் கிராமம் பாதுகாத்து வரு கிறது. குச்சிபூடி கிராமம் நாட்டியக் கலைக்காக தன் வாழ்க்கையையே அர்ப்பணம் செய்திருக்கிறதென்றால் மிகையாகாது. ஒரு காலத்தில் அங்கு பிறந்த ஒவ்வொரு ஆண்குழந்தையும் நாட்டிய நாடகக்கலைக்காகவே அர்ப்ப ணிக்கப்பட்டு வந்தன. பதினாறும் நூற்றாண்டில் வாழ்ந்த ஸ்ரீ சித்தேந்திர யோகி அவர்கள் “பாமா கலாபம்” என்ற நாட்டிய நாடகத்தை இயற்றினார். இந்த நாட்டிய நாடகம் விஜயநகர சாம்ராஜ்ய சக்கிர வர்த்தி ஸ்ரீ வீர நரசிம்ஹ தேவாவின் முன்னிலையில் முதன்முதலில் நடத்திக் காண்பிக்கப்பட்டது. சித் தேந்திர யோகி, நாராயண தீக்ஷிதர், க்ஷேத்திரையா போன்ற மஹான்கள் இக்கலையைப் பாதுகாத்து வளர்த்து வந்திருக்கின்றனர். பதினேழு, பதினெட்டாம் நூற்றாண்டு களில், இந்த நாட்டியக்கலையானது மிகவும் பிரபல மடைந்திருந்தது.

குச்சிபூடி நாட்டியக் குழுவினர், ராஜ்யங்களிடையே கலாச்சார கோஷ்டிகள் பரிவர்த்தனைத் திட்டத்தின் கீழ், சென்னைக்கு வந்து இந்த நாட்டிய நாடகங்களை நடத்திக் காட்டினர். இதனால் அகில இந்திய அடிப்படையில் கலைகள் வளர்ச்சி அடைவதுடன், இந்திய கலைகளுக் கிடையே உள்ள ஒற்றுமையும் புலனாக வழி ஏற்படுகிறது.

குச்சிபூடி நாட்டிய நாடகங்கள் ஏறக் குறைய தமிழ் நாட்டின் பாகவத மேளா நாட்டிய நாடகத்துடன் ஒத்துப் போகும்படியான முறையில் உள்ளன எனலாம். ஆடை ஆபரணங்களிலும் மற்றும் சில சில்லரை விஷயங்களிலும் சில வேற்றுமைகள் இருக்கலாம். ஆனால், அடிப் படையில் இவை இரண்டுமே பரத நாட்டியக்கலையை ஆதார மாகக் கொண்டவை. இரண்டிலும் பெண் வேஷம் உள்பட எல்லா வேஷங்களையும் ஆண்களே ஏற்று நடிக் கின்றனர். அத்துடன் பாகவத மேளா நாட்டிய நாட கத்தைப் போலவே குச்சிபூடி நாடகங்களும் முன்னூறு ஆண்டுகட்கு முன் தோன்றியவை எனலாம்.

இந்த நாட்டிய நாடகத்திற்கு சுத்தமான கர்னாடக சங்கீதம் உயிராக அமைந்துள்ளது. கோயில்களில் பகவானுக்கு அர்ப்பணமாக நடிக்கப்படும் புண்ணிய கதைகள் நாட்டிய நாடகமாக நடித்துக் காட்டப்படுகின்றன.

புராதனக் கலைகளைப் பாதுகாக்க வேண்டும்

புராதனக்கலைகள் இந்த நாட்டின் பொக்கிஷங்கள். அவை கண்ணேபோல் காப்பாற்றப்படவேண்டும். நமது பண்டைய கலாச்சாரத்திற்கே பெருமை தருவன இந்தப் புராதனக்கலைகள். கலை உலகிலே தோன்றியுள்ள மறு மலர்ச்சி வரவேற்கத் தக்கதாகும். புராதனக் கலைகள், கிராமியக்கலைகள் அழிந்து போகாமல் பாதுகாப்பது மக்களின் கடமையாகும்.

குச்சிபூடி போன்ற கலை ஆர்வம் படைத்த ஊர்கள் தமிழகத்தில் இல்லாமல் இல்லை. புராதனக் கிராமியக் கலைகளை ஊக்குவிக்கும் முறையில் **“கிராம நலம்”** என்றென்றும் பாடுபடும். தமிழ் நாட்டு புராதனக் கிராமியக் கலைகளைப் பற்றி அறிஞர் பெருமக்கள் தங்க ளுடைய எழுத்தோவியங்களை “ **கிராம நலத்** ” திற்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

கிராம மக்களே உருவாக்கி, நிறைவேற்றும் விவசாய உற்பத்தித் திட்டம்

(விவசாய அமைச்சரின் வேண்டுகோள்)

விவசாய உற்பத்திப் பெருக்கத்தின் வேகத்தை அதிகப் படுத்த வேண்டியது மிகவும் அவசியம். எல்லா வகையிலும் இது "மக்களின் வேலைத்திட்டமாக" அமைய வேண்டும். பஞ்சாயத்து ஆட்சி முறையை ஆரம்பித்து நடத்துவதற்குள்ள பல காரணங்களில் இவையே மிக முக்கியமானவையாகும். பஞ்சாயத்துச் சட்டத்தின் பீடிகையிலேயே இதைப்பற்றி தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. ஒவ்வொரு பஞ்சாயத்தும், அமைக்கப்பட்டவுடனே, ஒருங்கிணைந்த விவசாய உற்பத்தித் திட்டமொன்றை தயாரித்து, அதை நிறைவேற்றி வைப்பதில் தன்னுடைய சக்திகளையெல்லாம் ஒன்று திரட்டிப் பணியாற்றவேண்டியது அவசியம். இந்த வேலைத்திட்டம் எப்படித் தயாரிக்கப்பட வேண்டும்? பல்வேறு கட்டங்களில் இதைச் செயல் படுத்துவது எப்படி? திட்டத்தை நிறைவேற்றும் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருப்பவர்களிடையே இது சம்பந்தமான பல்வேறுபட்ட வேலைகளை, ஒழுங்கான முறையில் நிறைவேற்றி வைக்கும் பொறுப்புகளை பகிர்ந்தளிப்பது எப்படி? அவ்வளவாக முன்னேற்றம் அடையாமல் பின் தங்கியுள்ள விவசாயிகள் சேர்ந்து பணியாற்ற என்ன செய்ய வேண்டும்? இதுபோன்ற அநேக பிரச்னைகள் வேளாண்மைத் திட்டத்தை உருவாக்குவதில் பங்குகொண்டுள்ள பலராலும் அடிக்கடி விவாதிக்கப்பட்டு, இவை சம்மந்தமாக என்னென்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்பதுபற்றி முடிவு செய்து திட்டம் உருவாக்கப் பட்டது. வேலைத்திட்டம்பற்றிய விவரங்கள் அடங்கிய அறிக்கையில், இதுபற்றிய முக்கிய முடிவுகள் அடங்கியிருக்கக் காணலாம். அத்துடன், இந்தத் திட்டத்தின் பல்வேறு அம்சங்களும், அவற்றை நிறைவேற்றும் வழிவகைகளைப் பற்றிய சரியான விவரங்களும், அதில் ஓரளவுக்கு, அடங்கியுள்ளன.

கிராமம் பூராவுக்குமாக இந்தத் திட்டம் உருவாக்கப் பட்டுள்ளது. இதுவே, கிராம விவசாய உற்பத்தித் திட்டத்தின் முக்கிய அம்சமாகும். இந்தப் பிரச்னையை அணுகுவதில், வேறு பல வழிகளும் இருக்கலாம். ஆனால், கிராம முழுவதையுமே ஓர் அடிப்படை அளவாகக் கொண்டு செயலாற்றுவதுதான், எல்லாவற்றிலும் சிறந்த வழியாகத் தோன்றுகிறது. இதனால், வேளாண்மைத் துறையில் முன்னேற்றம் அடைந்துள்ள விவசாயிகள், இந்த வேலைத் திட்டத்துக்குத் தலைமை தாங்கி நடத்தவும், பின்தங்கியுள்ள விவசாயிகள், கிராமத்தின் பொதுஜன அபிப்பிராயத்துக்குக் கட்டுப்பட்டு, அவர்களுடன் சேர்ந்து பணியாற்றவும் இயலும். ஒரு நியாயமான அடிப்படை அளவுக்கு எவ்வளவு தேவைகளும் சேவைகளும் வேண்டும் என்பதைப்பற்றித் திட்டமிட இதனால் இயலும். கிராமம் முழுவதும் என்பதை அடிப்படை அளவாகக் கொண்டால், அதற்குள் உள்ள உட்பிரிவுகளுக்கான தேவைகளையும் சேவைகளையும் கிராம மக்களே தங்களுக்குத் தாங்களே செய்து கொள்ளலாம். மேலும், இது, திட்ட நிறைவேற்றத்திற்கு சமூகத்தின் கூட்டு முயற்சி எவ்வளவு முக்கியம் என்பதை வலியுறுத்தும். இக் கூட்டு முயற்சியும் தனிப்பட்டவர்களால் மேற்கொள்ளப்படும் வேலைமுறைகள் போன்று முக்கியமானதே.

உணவு உற்பத்தித் திட்டத்தை சாதாரணமாக இருவகையாகப் பிரிக்கலாம். ஒன்று அரசாங்கம் தீட்டும் திட்டம்; மற்றொன்று கிராம வாசிகள் தாங்களே உருவாக்கும் திட்டம். பெரிய நீர்ப்பாசன வேலைகள், சிறிய நீர்ப்பாசன வேலைகள், ரசாயன உரங்களை வழங்கல், கிருமி நாசினிகளை விநியோகித்தல் ஆகிய இது போன்ற வேலைகள் அரசாங்க வேலைத்திட்டத்தினுள் அடங்கும். பெரிய நீர்ப்பாசன வேலைகளை ஓர் அளவுக்குத்தான் பெருக்கிக்கொண்டு போக முடியும். சிறிய நீர்ப்பாசன வேலைகளுக்காகும் செலவுத் தொகை வெகு

பஞ்சாயத்துக்களின் தலையாய பணி . . . . .

வேகமாக அதிகமாகிக் கொண்டே போகிறது. ரசாயன உரங்களை மேன்மேலும் அதிக அளவில் விநியோகம் செய்ய நாம் பாடுபட்டு வருகிறோம். ஆனால், இவையெல்லாம் பூர்ணமாக நடந்தேற காலம் அதிகமாகப் பிடிக்க லாம். உண்மையில் அரசாங்க வேலைத் திட்டமானது கிடைக்கின்ற நிதி ஆதாரங்கள், மற்றும் கிடைக்கின்ற பல்வேறுபட்ட வசதிகளைப் பொறுத்துத்தான் அமைகிறது. இந்தத் துறையில் நம்மால் இயன்றதையெல்லாம் செய்துகொண்டிருக்கிறோம். வெகு சீக்கிரத்தில் வேண்டிய வசதிகளை வழங்க முடியுமென்று எதிர்பார்க்கிறோம். இதில் தாமதம் ஏதாவது ஏற்பட்டால், புதிய தொழில்களை ஏற்படுத்துவதிலும், மேற்கொண்டும் கூடுதலான இறக்குமதிப் பொருள்களை பெறுவதிலும் ஏற்படுகின்ற தவிர்க்கமுடியாத காலதாமதம் தான் காரணமாக இருக் கிறது. கிடைக்கின்ற வசதிகள் போதிய அளவில் இல்லையே என்ற காரணத்தை வைத்து, காலத்தை விரயமாக்கிக் கொண்டிருப்பது விவேகம் அல்ல. நாம் பணியாற்ற வேண்டிய துறையில் நமக்கு இருக்கின்ற கட்டுதிட்டங்களை உணர்ந்துகொண்டு, அச் சூழ்நிலையிலேயே மேலும் மேலும் முன்னேறிச் செல்லுவதுதான் புத்திசாலித்தனத் துக்கு அழகு. ஆகவே, இப்பொழுது உருவாக்கப்பட்டு வருகின்ற கிராம உற்பத்தித் திட்டங்களுடன் அரசாங்க வேலைத்திட்டத்தை ஓர் இணைப்பான பகுதியாகக் கொள்ளவேண்டுவதில்லை.

வெளியிலிருந்து கிடைக்கும் உதவியுடன் மட்டுமல்லாமல், மேலும் அதிகப்படியான சிரத்தை எடுத்துக் கொண்டு வேலை செய்வதினாலும், உயர்தரச் சாகுபடி முறைகளைக் கையாள்வதின் மூலமும் நம்முடைய வேளாண்மை உற் பத்தியை மேலும் தீவிரப்படுத்த முடியும் என்பது எல்லோர்க்கும் தெரிந்த விஷயம். இம்மாதிரி வேலைகளை எல்லாம் சேர்த்து உருவாக்கப்படும் சரியானதொரு திட்டம் கிராம விவசாய உற்பத்தித் திட்டமாக அமையும். அரசாங்கம் தற் பொழுது வெளியிட்டுக்கொண்டுவரும் விளக்கக் குறிப்புகளின்படி, உள்ளூர் எருக்களை மேலும் அபிவிருத்தி செய்யவும், இரண்டாவதாக, பொறுக்கு விதைகளை மேலும் உற்பத்தி செய்யவும், ஒரு வேலைத் திட்டத்தை ஒவ்வொரு கிராமமும் தயார் செய்யும்படி கேட்டுக்கொள்ளப்படும். அத்துடன், உற்பத்தியை மேலும் அதிகப்படுத்த, உள்ளூர் ஆதார வசதிகளைத் திரட்டி, மற்ற மற்ற வழிகளையும் பஞ்சாயத்துக்கள் வகுத்து நிறைவேற்றலாம். இந்த எல்லா வேலை முறைகளும் ஒன்றாகச் சேர்ந்துதான் கிராம உற்பத்தித் திட்டமாக அமைகிறது. இதுபற்றிய விவரங்கள் அடங்கிய அறிக்கையும், சேர்க்கப்பட்டுள்ள இணைப்பும் அப்படிப்பட்டதொரு திட்டம் எப்படித் தயாரிக்கப்படவேண்டும் என்பதையும், திட்டத்தில் கண்டுள்ள வேலைகள் ஒவ்வொன்றையும் நிறைவேற்றிவைக்கும் பொறுப்புகளை பல்வேறுபட்ட விவசாயிகளிடையே எப்படிப் பகிர்ந்தளிப்பது என்பதுபற்றியும் விளக்கிக் கூறுகின்றன. இந்தத் திட்டத்தின் வேலைக்கால அளவு சாதாரணமாக மூன்று வருடங்களாக இருக்கும். ஏனென்றால், இந்த வேலையின் பெருவாரியான அம்சங்களை மேற்கொண்டு வெற்றியுடன் நிறைவேற்றுவதற்கு இந்தக் கால அளவு தேவைப்படுகிறது.

இனியும் காலதாமதம் செய்வதற்கில்லை. ஆகவே, எல்லா பஞ்சாயத்துக்களும் அரசாங்கத்தின் பல்வேறு பட்ட இலாகா அலுவலர்களும் இந்த வேலையில் தங்களுடைய முழுக்கவனத்தையும் செலுத்தி பணி யாற்ற வேண்டும் என்று மிகவும் கேட்டுக்கொள்கிறேன். மூன்று மாத காலத்திற்குள், புதிய பஞ்சாயத்து வட்டாரத்தில் உள்ள ஒவ்வொரு கிராமமும், அதனுடைய முழு உற்பத்தித் திட்டத்தை தயாரித்து ஒரு முடிவுக்கு வர முடியும் என்று நான் நினைக்கிறேன். இது தான் ஆரம்ப நிலை. இந்தக் காரியத்தை நிறைவேற்றவும், இயன்றால், கிராம உற்பத்தித் திட்டங்களில் கண்டுள்ள ஒவ்வொரு வேலை அளவுக்கும் மேற்கொண்டும் செல்லும் படியான நிலையில், இபபொழுதுபோலவே இந்தத் துறையில் தளராத உறுதியுடனும், சேவை மனப்பான்மையுடனும் பணியாற்றப்படும் என்று நான் நம்புகிறேன். மிகக் குறுகிய காலத்திலேயே, அவசரமும் அவசியமுமான பிரச்னைகளை வெற்றிகரமாக தீர்த்துக்கொள்வதற்குரிய திறன்தான் ஒரு ஜனநாயக அமைப்பின் உண்மையான சோதனையாகும். குறைவான விவசாய உற்பத்திதான் நம்மையெல்லாம் இப்பொழுது எதிர்நோக்கியுள்ள முக் கியமான பிரச்னையாகும். பஞ்சாயத்துக்கள் மட்டும், சில மாதங்களுக்குள்ளாகவே, தங்களுடைய வேளாண்மை உற்பத்தித் திட்டத்தை தயாரித்து, அடுத்துவரும் சில ஆண்டுகளுக்குள்ளாக அதை அமுல் நடத்தத் தொடங்கி விடுவார்களேயானால், பின்பு நம்மை நோக்கியுள்ள இந்தச் சோதனையில் நாம் முழு வெற்றி பெற்றவர்களாகி விடுவோம். இந்தத் திட்டத்தை வெற்றியுடன் நிறைவேற்றி விட்டோமேயானால், உணவு நிலையில் நாம் பின் தங்கியவர்களாக இருக்க மாட்டோம் என்பது உறுதி.

எம். பக்தவத்ஸலம்

சமுதாய நலத் திட்டம்

16 பூர்வாங்க விஸ்தரிப்பு வட்டாரங்கள்

1960 அக்டோபரிலிருந்து வேளாண்மையில் பூர்வாங்க விஸ்தரிப்பு வேலைகளை மேற்கொள்வதற்காக, 1961–62-க்கு இந்திய அரசாங்கம் சென்னை மாநிலத்துக்கு 16 வட்டாரங்களை ஒதுக்கியுள்ளது. கீழ்க்கண்ட வட்டாரங்களில் பூர்வாங்க விஸ்தரிப்பு வேலைகளை மேற்கொள்ள அரசாங்கம் உத்திரவிட்டிருக்கிறது :—

மாவட்டத்தின் பெயர்.	வட்டாரத்தின் பெயர்.	அதில் அடங்கும் பிர்க்கா.
1 வட ஆற்காடு	அரக்கோணம்	அரக்கோணம் பிர்க்கா மட்டும்
	பெரிணும்பட்டு	துக்திபெட்டு, பெரிணும்பட்டு பிர்க்காக்கள்.
2 தென் ஆற்காடு	வானூர்	கிளியனூர், வானூர்,
	மொகையூர்	மொகையூர், மணலூர் பேட்டை பகுதி.
3 செங்கல்பட்டு	ராமகிருஷ்ணராஜ் பேட்டை	ராமகிருஷ்ணராஜ் பேட்டை, எறும்பி.
4 கோயம்புத்தூர்	சிங்காநல்லூர்	அனுப்பர்பாளையம், புலியகுளம், ராமநாதபுரம், சிங்காநல்லூர், உப்பிலி பாளையம், சௌரிபாளையம், கிருஷ்ணராயபுரம் (ரூரல்).
5 மதுரை	தென் கரை	தென்கரை, தேவதானப்பட்டி.
6 ராமநாதபுரம்	காரைக்குடி	32 கிராமங்கள்.
7 சேலம்	பள்ளிபாளையம்	பள்ளிபாளையம்.
	கபிலமலை	கபிலமலை ரெவின்யூபிர்க்கா, கபிலமலை எஸ்டேட் பிர்க்கா.
	சூலகிரி	சூலகிரி, உப்பனபள்ளி, பேரிக்காய்.
	நல்லம்பள்ளி	நல்லம்பள்ளி, இந்தூர் பகுதி.
8 தஞ்சாவூர்	திருவையாறு	திருவையாறு, நடுகாவேரி.
9 திருச்சிராப்பள்ளி	டி. பாலூர்	டி. பாலூர், காமராசவள்ளி பகுதி.
	கடலூர்	கடலூர், பஞ்சப்பட்டி பகுதி.
10 திருநெல்வேலி	கடையம்	கடையம் பிர்க்காவும், பரப்பகுடி பிர்க்காவில் 9 கிராமங்களும்.

1—5. வேலூரில் வடஆற்காடு மாவட்ட பஞ்சாயத்துத் தலைவர்கள் மகாநாடு 25-9-60-ல் நடைபெற்றது.



6-7. ராமநாதபுரம் மாவட்டத்தில் பஞ்சாயத்து வார விழா.







10-9-60-ல்
(்சாதனை"
ிவுப்பதிப்பு
ட்டு விழா.
சைதாப்
வட்டாரம்
களத்தூரில்
மனமகிழ்
தை 10-10-
லநிர்வாகத்
அமைச்சர்
ார்தம்மாள்
அவர்கள்
வைத்தார்.



5. பாரதி படம் பொறித்த ஸ்டாம்புகளை பாரதி தினத்தன்று முதல் அமைச்சர் ஸ்ரீ காமராஜ் அவர்களிடம் மத்திய அரசாங்க அமைச்சர் ஸ்ரீ பி. சுப்பராயன் அவர்கள் விற்கிறார்.

6. சென்னையில் பாரதி விழா.





"சத்தியசோதனை" வெளியீட்டு விழா

R.P.

தமிழன்னையின் பொற்பாத கமலங்களில் மிகச்சிறந்த தொரு காணிக்கையை 10—9—60 அன்று சமர்ப்பித்து தமிழ் மக்கள் தங்களுடைய பெருமையையே உயர்த்திக் கொண்டனர். அண்ணல் காந்தியடிகளின் சுய சரிதை "**சத்திய சோதனை**" மலிவுப் பதிப்பாக தமிழ் மக்களுக்கு வெளியிடப்பட்ட நன்னாள் அன்று காந்தி நூல் வெளியீட்டுக் கழகத்தினர் அரிய பல பணிகளைப் புரிந்துள்ளனர். அந்தப் பணிகளுக்கெல்லாம் மகுடம் சூட்டியது போல் இப்பொழுது மகாத்மாவின் சுயசரிதையை அழகுத் தமிழிலே மலிவுப் பதிப்பாக வெளியிட்டிருக்கிறார்கள்.

காந்தியமே சிறந்த வழி

"சத்திய சோதனை" மலிவுப் பதிப்பு வெளியீட்டு விழா 10-9-60 அன்று சென்னை ராஜாஜி ஹாலில் நடைபெற்றது. முதலமைச்சர் **ஸ்ரீ காமராஜ்** அவர்கள் இந்த விழாவில் கலந்து கொண்டு அரியதொரு சொற் பொழிவாற்றினார்கள்.

"சத்தியம், அகிம்சை வழி நின்று போராடி சுதந்திரம் பெற்றுக் கொடுப்பதன் மூலம் நம்மைத் தலை நிமிர்ந்து அச்சமின்றி நடமாடவிட்டிருக்கிறார் காந்தியடிகள். பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காப்பாற்றுகின்ற பொறுப்பு நமக்கு இருக்கிறது. நாடு சுபீட்சமடைய காந்தியமே சிறந்த வழி" என்று முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

"காந்தி நினைவு நிதியினரால் பதிப்பிக்கப்பட்டு வெளி யிடப்பட்டுள்ள இந்த நூல் ஒவ்வொருவரிடமும் இருக்க வேண்டிய அரிய பொக்கிஷம். காந்தியடிகளின் நூல்களை வெளியிடும் பணி லாபத்தைத் கருதாத உன்னத மான ஒரு பொதுப்பணி. நம் நாட்டு மக்கள் அனைவரும் படித்து மகிழ வேண்டும், காந்தியக் கருத்துக்களை மக்கள் எல்லோரும் தெரிந்து கொள்ள வேண்டும் என்று உயரிய நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு அரிய புத்தகத்தை காந்தி நூல் வெளியீட்டுக் கழகத் தினர் வெளியிட்டிருக்கிறார்கள். இந்த நூலை எல்லோரும் வாங்கி திரும்பத் திரும்ப படிக்க வேண்டும்."

"வாழ்க்கையில் பின் தங்கி வகையற்றுக்கிடக்கும் கோடானு கோடி மக்களின் பிரதிநிதியாக காந்தியடிகள் வாழ்ந்தார். தங்களுடைய குறைகளை எடுத்துக்கூறி வாதாடி விடிவுக்காணச் சக்தியற்றவர்களுக்காகவே அவர் போராடி னார். காந்திஜியின் வாழ்வில் பல சோதனைகள் ஏற்பட்டன. அவர் பழகாத மக்கள் இல்லை. அவர் குறிப்பிட்டுப் பேசாத துறையும் இல்லை. மொழி, மதம், சமூகம், பொருளாதாரம், அரசியல், கல்வி, ஒழுக்கம் ஆகிய பல் வேறு துறைகளைப் பற்றியும் அவர் தமது வாழ்வில் சோதனை நடத்தி நல்ல வெற்றியும் கண்டார். இவைகளை யெல்லாம் குறித்து சத்திய சோதனை என்ற தலைப்பில் தாமே எழுதினார். எனவே இப்புத்தகத்தை வாங்குவது மட்டும் போதாது. வாங்கி மேலெழுந்த வாரியாகப் படித்தல் நல்லதல்ல. நாவல் படிப்பது போன்று படித்தால் அவரது வாழ்க்கையின் பல் வேறு சம்பவங் களின் உண்மை நிலையையும் அதன் கருத்தையும் உணர முடியாது. ஆகவே இதைத் திரும்பத் திரும்ப படிக்க வேண்டும்".

"காந்தியடிகளின் வாழ்க்கையைப்பற்றி பிறருக்கு எடுத் துரைக்க வேண்டுமெனில் நாம் அதனை நன்ருக உணர வேண்டும். எனவே நினைத்தபடி யெல்லாம் பேசுவதை நிறுத்தி உள்ளதை உள்ளபடி எடுத்துரைக்க இந்த நூல் மிகவும் பயன்படும்".

"காந்திஜி நாடு சுதந்திரம் பெற நாட்டு மக்கள் அனைவரின் ஆதரவையும் பெற்றார். மக்களைத் தன்னம் பிக்கை யுடையவர்களாக்கித் தலை நிமிர்ந்து வாழும் நிலைமைக்கு ஆளாக்கிப் புதிய தைரியத்தை ஊட்டினார். எனவே நாம் அவர் வகுத்த வழி வாழ்ந்து பயமின்றி, தைரியத்தோடும், தன்னம்பிக்கையோடும் முன்னேற வேண்டும்" என்று முதலமைச்சர் அவர்கள் தம்முடைய பேச்சில் குறிப்பிட்டார்கள்.

வழிகாட்டியாக விளங்கும் காந்திய நெறி

விழாவிற்கு உள்துறை அமைச்சர் **ஸ்ரீ. பக்தவத்ஸலம்** அவர்கள் தலைமை தாங்கினார்கள். அவர் தம் உரையில் "மக்களுக்குப் பணம் மட்டும் பெரிதல்ல. செல்வம் பெற்றவர்கள் நிம்மதியாக இருப்பார்கள் என்று சொல்ல முடியாது. உலகில் பொருளாதாரத்தில் முன் னேறியுள்ளதாகப் பெருமைப்பட்டுக் கொண்டிருக்கின்ற நாடுகளில் தற்கொலைகளும், பைத்தியமும் மிக அதிக மாக இருக்கின்றன. இதற்குக் காரணம் வாழ்வில் நிம் மதியற்றிருப்பதே. வாழ்வில் இனிமையும் நிம்மதியும் ஏற்பட பொருளாதார வசதி மட்டும் இருந்தால் போதும் என்ற கூற்று தவறு. அன்பும் அருளும் மிகவும் இன்றி யமையாதது. இவ்வகையில் வாழ்ந்து காட்டியவர்

எங்கள் நேரு

(சோம சுப்பையன், காரைப்பாக்கம்.)

அலகாபாத்தில் பிறந்தவராம் எங்கள் நேரு.
ஆசியாவின் ஜோதியாம் எங்கள் நேரு.
இந்தியாவின் பிரதமராம் எங்கள் நேரு.
ஈடில்லாத மாணிக்கமாம் எங்கள் நேரு.
உண்மையுடன் வாழ்பவராம் எங்கள் நேரு.
ஊக்கமுடன் உழைப்பவராம் எங்கள் நேரு.
எங்கும் புகழ் பெற்றவராம் எங்கள் நேரு.
ஏழைகளின் அன்பராம் எங்கள் நேரு.
ஐக்கியத்தை வளர்ப்பவராம் எங்கள் நேரு.
ஒப்பற்ற தலைவராம் எங்கள் நேரு.
ஓயாது உழைப்பவராம் எங்கள் நேரு.
ஔவியம் ஒழிப்பவராம் எங்கள் நேரு.

காந்திஜீ. அவர் வாழ்வு நமக்கெல்லாம் வழிகாட்டி. எனவே அவரது வாழ்வை எடுத்தியம்பும் "சத்திய சோதனை" யைப் படித்து அதன்படி நடப்பது மிகவும் அவசியமாகும்" என்று குறிப்பிட்டார்.

முதலமைச்சரே புத்தகங்களின் விற்பனையையும் ஆரம்பித்து வைத்தார்.. "சத்திய சோதனை" மலிவுப் பதிப்பின் முதல் பிரதியை திரு. பி. ஸ்ரீ. ஆச்சார்யா அவர்களுக்கு முதலமைச்சர் அவர்கள் விற்றார்கள். முதல் பிரதியை வாங்கிய பிரபல எழுத்தாளர் பி. ஸ்ரீ. ஆச்சார்யா அவர்கள் பேசும்பொழுது "இப்புத்தகத்தின் பதிப்புத்தான் மலிவுப்பதிப்பே தவிர, உட்பொதிந்திருக்கும் பொருள் உயர்வு வாய்ந்தது. வள்ளுவரும், வள்ளலாரும் கூறிய பொன் மொழிகளுக்கேற்ப வாழ்ந்து காட்டியவர் காந்திஜீ. அத்தகைய அண்ணலின் வழி வாழ்ந்து வரும் நமது முதலமைச்சர் அவர்கள் இந்த நூலை வெளியிடுவது மிகவும் பொருத்தமாகும்" என்றார்.

விழா நாளன்றே ஏராளமான பிரதிகள் விற்பனையாயின. விழாத் துவக்கத்தில் தமிழ் நாடு காந்தி நினைவு நிதியின் செயலாளர் திரு. க. அருணாசலம் அவர்கள் அனைவரையும் வர வேற்று பேசினார். "சத்திய சோதனை" யை சீரிய முறையில் தமிழாக்கித் தந்த காந்தி நூல் வெளியீட்டுக் கழகப்பிரதம ஆசிரியர் திரு. ரா. வேங்கட ராஜுலு அவர்கள் நன்றி கூற, நாட்டுப்பாடலுடன் விழா இனிது முடிந்தது.

"சத்திய சோதனை" மலிவுப் பதிப்பின் முதல் பதிப்பு அத்தனையும் வெகு விரைவிலேயே விற்று விட்டது. தமிழ் மக்கள் இத்துறையில் காட்டும் ஆர்வம் பாராட்டற்பாலது.

காந்தியம் வாழ்க! காந்திய நெறி வெல்க!

நெல், சோளம் விளைச்சல் போட்டி

1958-59 க்கு பரிசு பெற்றவர்கள் விவரம்.

சென்னை மாநிலத்தில் 1958–59-ஆம் ஆண்டுக்கு நெல், சோளம் விளைச்சல் போட்டியில் பரிசு பெற்றவர்கள் விவரம் பின் வருமாறு:—

நெல் விளைச்சல் போட்டி.

மாவட்டம். (1)	பரிசு பெற்றவர் பெயர். (2)	ஏக்கருக்கு உற்பத்தி. (ராத்தல்) (3)
1. பட்டுக்கோட்டை	ஸ்ரீ ஷண்முக சுந்தரம் பிள்ளை, வள்ளிவலம்.	7,415
2. குடந்தை	ஸ்ரீ. பி. ஸ்ரீனிவாச தேசிகாசசாரியர், தேவனார் விளாகம்.	5,175
3. சிவகங்கை	ஸ்ரீ எம். மாசாணம் சேர்வை, துத்தி.	6,850
4. தஞ்சாவூர்	ஸ்ரீ ஆர். சிவசுப்பிரமணியம், விளாகம்.	7,960
5. மாயூரம்	ஸ்ரீ ஜி ஸ்ரீனிவாச பிள்ளை, கனியநத்தம்	8,150
6. திருநெல்வேலி	ஸ்ரீ கெ. என் கிருஷ்ணமூர்த்தி, ராமய்யம்பட்டி	8,300
7. திண்டுக்கல்	ஸ்ரீ எஸ் ராமசாமி, பச்சமலையம்கோட்டை	7,990
8. திருச்சி	ஸ்ரீ கண்ணுசாமி, திருகளம்பூர்	7,810
9. கோயம்புத்தூர்	ஸ்ரீ பி ஜீ. சின்னண்ணன், நஞ்செய் புளியம்பட்டி	7,090
10. கன்னியாகுமரி	ஸ்ரீ பி. சிவகுருநாத பிள்ளை ஈச்சிகுளம்.	7,500
11. செங்கற்பட்டு	ஸ்ரீ தங்கவேலு பிள்ளை, அகிதி கிராமம்	7,625
12. வட ஆற்காடு	ஸ்ரீ. வி. ஜீ. ஞானப்பிரகாசன், தேவஸ்தானம்	7,790
13. சேலம்	ஸ்ரீ செல்வராஜ் முதலியார், ராயகோட்டை	7,994
14. தென் ஆற்காடு	ஸ்ரீ எஸ் முகமது கமால், சிதம்பரம்	7,255

சோளம் விளைச்சல் போட்டி.

கோயம்புத்தூர்	ஸ்ரீ ராஜகோபாலசாமி நாயுடு, உடுமலைப்பேட்டை வட்டம்.	6,040

மாநிலப் பரிசு பெற்றவர்கள் விவரமாவது:—

நெல் விளைச்சல் போட்டியில் மாநிலப் பரிசு.—

ஸ்ரீ கே. என். கிருஷ்ணமூர்த்தி, ராமய்யம்பட்டி, திருநெல்வேலி மாவட்டம (ஏககருக்கு 8,300 ராத்தல்)

சோளம் விளைச்சல் போட்டியில் மாநிலப் பரிசு.—

ஸ்ரீ டி. ஆர். ராஜகோபாலசாமி நாயுடு, ஜல்லிபட்டி, கோவை மாவட்டம். (ஏக்கருக்கு 6,010 ராத்தல்)

மாநிலப் பரிசு பெற்றவர்களுக்கு ரூ. 300 பெறுமான தங்கப் பதக்கம் வழங்கப்படும்.

(13-ம் பக்கம் தொடர்ச்சி)

பற்றிக் கூறி, அவள் பெருமை பாராட்டுவதை இப் பாடலில் காண்க :

“என் அரிய அம்மானூர் என்ன கொண்டு வந்தார்கள் ?
அக்கரையில் சர்க்கரையும் அதிமதுரத் தென்னை
வட்டும்,
கோடை பலாச்சுளையும், குலை சேர்ந்த மாங்கனியும்,
பருவப் பலாச்சுளையும், பக்குவத்து மாங்கனியும்,
போட்டு விளையாடப் பொன்னூலே அம்மானை,
கட்டி விளையாடக் காசிச் சிண்டு மணி
வைத்து விளையாட வண்ணக் கிலுகிலுப்பை,
ஒட்டி விளையாட ஓயிலா ரயில் வண்டி
சாதிக் களிப்பாக்கும், சங்கு வெள்ளைச் சுண்ணாம்பும்
எலங் கிராம்பும், இளங்கொடிக்கால் வெற்றிலையும்
அத்தனையும் கொண்டு அறிய வந்தார் அம்மானூர்”

குடும்ப ஒற்றுமையை, தாலாட்டுப் பாடல் வாயிலாகத் தெரிவிக்கும் நுண்ணறிவும், அதனைப் பாடும் நயமும் பாராட்டுக்குரியன.

“மாம்பழத்தைக் கீறி வயலுக்கு உரம் போட்டு...!”

இன்னும் சில தாலாட்டுகளைக் கேட்போம் :—

தாய் :

“ஆரடித்தார் எனழுதாய்
கொம்புக் கனியே
கோது படா மாங்கனியே
வம்புக் கழுதாயோ
வாயெல்லாம் பால் வடிய !
மாமன் அடித்தானோ
மல்லிகைப்பூச் செண்டாலே !
அத்தை அடித்தாளோ
அல்லிமலர்ச் செண்டாலே !
அடித்தாரைச் சொல்லியழு
ஆக்கினைகள் செய்து வைப்போம்
தொட்டாரைச் சொல்லியழு
தோள்விலங்கு போட்டு வைப்போம் !”

தந்தை :

“தெள்ளுதமிழ் வளர்த்த
தென்னவராம் பாண்டியர்க்கு
பிள்ளைக்கலி தீர்த்த
பெருமானும் நீதானோ ?
மாம்பழத்தைக் கீறி
வயலுக்கு உரம் போட்டுத்
தேன் பாய்ந்து நெல் விளையும்
செல்வமுள்ளார் புத்திரனே !

வெள்ளித் தேர் பூட்டி
மேகம் போல் மாடுகட்டி
அள்ளிப் படியளக்கும்
அதிட்ட முள்ளார் புத்திரனே !

வாரிப் படியளக்கும்
மகிமையுள்ளார் புத்திரனே !
சேற்றிலொரு செங்கழுநீர்
திங்களொரு பூப்பூக்கும்

நூற்றிலொரு பூவெடுத்து
முடிப்பார் மகனோ !
இன்னார் மகனே
இனியார் மருமகனே !
தனதாய விளையாடும்
தமிழோ புனக்கிளியோ ?
பொதுவாய் விளையாடும்
புள்ளி மான் நித்திரையோ ?”

பொதுவாக, செட்டி நாட்டுப் பெண்கள் தங்களது கேள்வி அறிவினாலேயே பல சொற்களைக் கோத்து நமது உள்ளத்தைத் தொட்டு உணர்ச்சியை எழுப்பும் ஆற்றல் பெற்றிருக்கிறார்கள். சில சமயங்களில் இவர்கள் கையாளும் சொற்கள் என்னவென்பதே தெரிந்துகொள்ள இயலாத அளவுக்கு உரு மாறி விடுவதுண்டு. வேறு சில சமயங்களில் பொருந்தாத பொருளைத் தருவதும் உண்டு. மதுரைப் பொற்றாமரைக் குளத்தைச் செட்டி நாட்டுப் பெண்கள் சிலர் “பொய்த் தாமரைக் குளம்” என்று சொல்லுவதை நீங்கள் கேட்டிருக்கலாம். பூத்துமடியும் வெறும் தாமரையே இல்லாத குளத்தைப் பொற்றாமரை என்பதை விட பொய்த்தாமரை என இவர்கள் கூறியது உண்மையோடு ஒட்டியிருக்கிறதல்லவா !

ஒப்பாரி

அழுவது கலையன்று ; ஆனால் வருத்தத்தை ஒப்பாரியாக வெளியிடுவது கலை. அந்தக் கலையில் கைத் தேர்ந்தவர்கள் செட்டி நாட்டுப் பெண்கள்.

இளமையில் கணவனைப் பறி கொடுத்த ஒரு பெண் கதறுகிறாள் :—

“சில்லென்று பூத்த
சிறு நெருஞ்சிக் காட்டுடே
நில்லென்று சொல்லி
நிறுத்தி வழிபோனீரே”

“கட்டிய சேலை இன்னும் கசங்கி மடியவில்லே
வச்ச பூ இன்னும் வாசங் குறையவில்லே
மஞ்சள் கலையவில்லே மடிப்புக்குலையவில்லே”

“பிஞ்சு வயதென்றேன்
போராசைக்காரி யென்றேன்
பெருமாள் பறி கொடுத்துப்
பிரிந்திருக்க மாட்டேனென்றேன்
பிரிந்திருக்க மாட்டேனென்றேன்
பிடிக்க வந்தான் கேட்கலையே”

" மட்ட வயதென்றேன்
மனசாசைக்காரி யென்றேன்
மன்னர்தனைப் பிரிந்து
வாழ்ந்திருக்க மாட்டேனென்றேன்
வாழ்ந்திருக்க மாட்டேனென்றேன்
மாய்க்க வந்தான் கேட்கலையே "

ஆடை அணிகளை இழக்க நேரிட்டது குறித்து வருந்துகிறாள் :—

" ஒரு கோடி தங்க நகை
உருவிவைக்க சொன்னீரே
கால் கோடி தங்க நகை
கழற்றி வைக்கச் சொன்னீரே."

" தங்க முளையடித்துத்
தாறுநூல் பாவோடித்
தறிகாரன் செய்த தெல்லாம்
தையல் நல்லாள் பூவாடை "

கடல் கடந்த நாடுகளுக்குச் சென்ற செட்டியார்கள் மூன்றுண்டுகளுக்கு பின்னர், தாயகத்திற்குத் திரும்பி வருவார்கள். இந்த மூன்றுண்டுக் காலத்திலே உறவினர் பலர் உயிர் நீத்திருப்பார்கள். அவர்களுடைய இல்லங்களுக்குச் சென்று துக்கம் விசாரிப்பதே தாய் வீட்டுக்கு வந்தவுடன் முதல் வேலையாக இருக்கும். இவ்வாறு துக்கம் விசாரிப்பவரிடம், கணவன் இறந்த நிகழ்ச்சியையும், பிணத்தைச் சுடுகாட்டுக்குத் தூக்கிச் சென்றபோது ஊர் மக்கள் அவருக்கு மரியாதை செலுத்தியதையும் ஓர் ஆச்சி வர்ணிப்பதைக் கேளுங்கள் :—

" வீதி வழி வந்தாக்கால் வெள்ளி ரதம் போலிருக்கும்
வெள்ளி ரதத்திலொரு வேல் வந்தாப் போலிருக்கும்
சாலே வழி வந்தாக்கால் தங்கரதம் போலிருக்கும்
தங்க ரதத்திலொரு சாமி வந்தாப்போலிருக்கும்"

நாடோடிப் பாடல்கள் எவ்வளவோ உள்ளன. ஆனால் செட்டி நாட்டு நாடோடிப் பாட்டுக்கு ஒப்புமில்லை . . . உயர்வுமில்லை என்று தான் சொல்ல வேண்டும். நான் எடுத்துக் காட்டிய ரத்தினங்களெல்லாம் பொன்னும் மணியும் பொலியும் செட்டிநாட்டின் சொத்துக்கள்தான். "பார்படுப செம்பொன்—பதிபடுப முத்தமிழ்" என்ற வர்ணனைக்கு இலக்காக விளங்கும் செட்டி நாட்டிலே, ஊர் பேர் தெரியாத கவியரசிகள் எத்தனை பேர் எவ்வளவு பொக்கிஷங்களைப் புதைத்து வைத்திருக்கிறார்களோ !"

புதுமை காண்பீர் !

(மா. பாதமுத்து, பி.ஏ., கதர் வளர்ச்சி அலுவலர், தே. கல்லுப்பட்டி.)

1 நெஞ்சத்து நினைவெல்லாம், கனவில் கண்ட
நீண்டுயர்ந்த நெறியெல்லாம், அண்ணல் காந்தி
விஞ்சுகின்ற கொடும்வறுமை நச்சுப் பொய்கை
வீழ்ந்துவிட தூர்ந்துவிட விண்ட கொள்கை,
மிஞ்சுகின்ற மிடுக்கோடு பூத்த திங்கே
மீட்சிதரும் பஞ்சாயத்துமன்றம் ; இன்பம்
கொஞ்சுகின்ற கொள்கையினை நல்ல றத்தைக்
கூட்டாகக் காத்திடுவார். புதுமை காண்பீர் !

2 எல்லாரும் எல்லாமே எய்தி வாழ
ஏற்றவழி போற்றும் வழி சாற்றக் கேட்பீர் !
பொல்லாங்கை, உட்பகையை, பொய்மைக் கூற்றை
பொசுக்கிடுவார் பொல்லறத்தை ; தூய்மை சேர்க்கும்
நல்லறத்தின் நறுந்தேனை, இன்பப் பேற்றை,
நல்வழிகள் நல்கிஒளிர் அமுத ஊற்றை,
பல்துறையால் காத்திடுவார் ; மன்றம் ஏறிப்
பணிபுரியும் அறச் செல்வர். புதுமை காண்பீர் !

3 கண்மூடிக் கொள்கைகளில் மண்கள் மூடும் ;
கவின்பெற்ற அறக்கொள்கை செழுமை எய்தும் ;
பண்புகொல்லும் கொடும்வறுமை மாய்ந்து போகும் ;
பைந்தமிழின் இன்பம்போல் செல்வம் சேரும் ;
கண்கவரும் கவின்கலைகள், இதயம் பொங்கக்
களிப்பருளும் நறுங்கவிதை, அறத்தின் ஆட்சி
பண்பாடும் ; வாழ்வெல்லாம் களிப்பின் காட்சி
பயிலுகின்ற மாட்சியினை மன்றம் காண்பீர் !

4 தன் வாழ்வை, தன்னரசை, பொருளை, பண்பு
தாங்கியுள்ள சமுதாய நெறிகள் தன்னை
இன்பமுடை எழிலறமாய் மாற்றிக் கொள்ள
இயைந்த நெறி மன்றத்தில் கண்டு உய்வோம் ;
துன்பத்தைத் துடைத்திடுவோம் ; தூய வாழ்வைத்
துணையாக்கி சுயஆட்சி, கிராம ஆட்சி
மன்றத்தில் ஒலித்திடவே வழிகள் காண்போம் ;
மகிழ்வோடு அதைக் காப்போம் ; அறத்தைக் காப்போம் !

(16-ம் பக்கம் தொடர்ச்சி)

1960-ம் ஆண்டு செப்டம்பர் மீ 30-ல மாவட்டத்தில் பஞ்சாயத்து தினம் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

1960 ம் ஆண்டு அக்டோபர் மீ 2-ல் திருநெல்வேலி மாவட்டத்தில் தூத்துக்குடி, கோயில்பட்டி, சங்கரன் கோயில், குருவிக்குளம், சேரன்மாதேவி, பாப்பா குடி, மானூர் ஆகிய ஏழு வட்டாரங்களில் பஞ்சாயத்து யூனியன் ஆரம்பித்து வைக்கப்பட்டது. பஞ்சாயத்து யூனியன் ஆரம்பவிழா இந்த ஏழு வட்டாரங்களிலும் மிகவும் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது.

கன்யாகுமரி மாவட்டம்

கன்னியாகுமரி மாவட்ட பஞ்சாயத்துத் தலைவர்கள் மகாநாட்டை 1960ம்-ஆண்டு செப்டம்பர் மீ 25-ம் தேதி காலை 9-மணிக்கு நாகர்கோவில் எஸ்.எல்.பி. உயர்நிலைப் பள்ளியில் சென்னை மாநில கவர்னர் மேன்மை தங்கிய **ஸ்ரீ விஷ்ணுராம் மேதி** அவர்கள் ஆரம்பித்து வைத்தார் கள். கூட்டத்திற்கு மாவட்டக் கலெக்டர் திரு ஜே. ஏ. அம்பா சங்கர் ஐ.ஏ.எஸ்.,அவர்கள் தலைமை தாங்கினார்கள். கன்னி யாகுமரி மாவட்டத்தைச் சார்ந்த பஞ்சாயத்துத் தலைவர் கள், பஞ்சாயத்து அங்கத்தினர்கள், மாவட்ட அபிவி ருத்தி மன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், அதிகாரிகள், பொது மக்கள் அனைவரும் வருகை தந்து சிறப்பித்தனர்.

அன்று காலை 8-மணிக்கு நாகர்கோவில் தாலூகா அலுவலகத்திலிருந்து ஒரு மாபெரும் ஊர்வலம் புறப் பட்டு நகரைச் சுற்றி பவனி வந்து எஸ்.எல்.பி. உயர் நிலைப்பள்ளி மைதானத்தை வந்தடைந்தது. திரளான ஆண்களும், பெண்களும், கலந்துகொண்ட அந்த ஊர் வலத்தில் காந்திமகான் அவர்களின் திரு உருவப்படம் நன்கு அலங்கரிக்கப்பட்ட வாகனமொன்றில் எடுத்துச் செல்லப்பட்டது.

மகாநாட்டை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் மேன்மை தங்கிய கவர்னர் அவர்கள் புதிதாக அமைய விருக்கும் பஞ்சாயத்து ஆட்சிக்குரிய சட்டங்களின் முக்கிய அம்சங்களை எடுத்துக்கூறி இச்சட்டமானது கட்சிப் பாகு பாடின்றி எல்லா அரசியல் கட்சித் தலைவர்களாலும் ஏகமனதாக ஒப்புக் கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்ட தென்றும், அதனால் நாட்டிலே அபிவிருத்தித் திட்டங் களை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு எல்லா பஞ் சாயத்துகளும், பஞ்சாயத்து யூனியன்களும், கட்சி வேறு பாடின்றி ஒத்துழைத்து எல்லா சக்திகளையும் திரட்டி செயலாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். மேலும் நமது சென்னை மாநிலம் பல துறைகளில் இதர மாநிலங்களுக்கு முன்மாதிரியாக அமைந்துள்ளதென்றும், அதுபோல பஞ்சாயத்துச் சட்டம் திறம்பட செயல்படுவதி லும் ஓர் எடுத்துக்காட்டாக விளங்க அனைவரும் துணை புரிய வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

பஞ்சாயத்துத் தலைவர்கள் சார்பில் கவர்னர் அவர் களுக்கு ஒரு பாராட்டுப் பத்திரம் வாசித்தளிக்கப்பட்டது.

கூட்டம் முடிந்தபின் பஞ்சாயத்துத் தலைவர்களின் மகா நாடு ஆரம்பமாயிற்று. அம்மகாநாட்டில் திருவாளர்கள் ஏ. நேசமணி, எம்.எல்.ஏ., பி. ராமசாமிப் பிள்ளை, ஆர். சுப்பிரமணிய பிள்ளை, செல்லப்பன் நாடார், கே. எம். பூதலிங்கம் பிள்ளை, டி. டி. டானியல், எம்.எல்.ஏ., பி. தாணுலிங்க நாடார், எம்.பி., சிவராம கிருஷ்ண ஐயர், நயினுமுகம்மது, டி. எஸ். ராமசாமி, எம்.எல்.ஏ., அம்சி நாராயண பிள்ளை ஆகியோர் புதிய பஞ்சாயத்து ஆட்சியின் சட்ட திட்டங்கள் பற்றி விரிவாகப் பேசினர்.

கோயம்புத்தூர் மாவட்டம்

கோயம்புத்தூர் மாவட்டம் பஞ்சாயத்து வார விழாவை கோலாகலத்துடன் கொண்டாடியது. பஞ்சாயத்து வார சமயத்தில் கோவை மாவட்டம் திருவிழாக் கோலமே கொண்டிருந்தது எனலாம்.

1960-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 25-ம் தேதியன்று கோயம்புத்தூரில் மாவட்ட பஞ்சாயத்துத் தலைவர்கள் மகாநாடு நடைபெற்றது. மாவட்டத்திலுள்ள சகல பஞ் சாயத்துத் தலைவர்களும் இந்த மகாநாட்டில் கலந்து கொண்டு மகாநாட்டை வெற்றிகரமாக்கித் தந்தனர்.

அன்று காலை நகராட்சி மன்ற உயர்நிலைப் பள்ளிக் கட்டிடத்திலிருந்து ஒரு பிரம்மாண்டமான ஊர்வலம் புறப்பட்டு நகரின் முக்கிய வீதிகளின் வழியே மகாநாடு நடக்கும் வ. உ. சிதம்பரம் பூங்காவைச் சென்றடைந்தது. ஊர்வலத்தில் மாவட்டத்தைச் சேர்ந்த பஞ்சாயத்துத் தலை வர்கள், மாவட்ட அபிவிருத்தி மன்ற உறுப்பினர்கள், சட்டப் பேரவை உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப் பினர்கள், மாவட்டக் கலெக்டர், மாவட்ட அதிகாரிகள், மற்றும் மாவட்டப் பிரமுகர்கள் எல்லோரும் ஏராள மாகக் கலந்துகொண்டனர்.

கோவையில் நடைபெற்ற மகாநாட்டில், மத்திய அர சாங்க சமுதாய நல அபிவிருத்தி கூட்டுறவுத் துறை துணை அமைச்சர் **ஸ்ரீ பி. எஸ். மூர்த்தி** அவர்கள் கலந்து கொண்டார்கள்.

மகாநாடு காலை ஒன்பது மணிக்கு தொடங்கியது. நிர்மாண ஊழியர் டாக்டர் எம். அறம், எம். ஏ., பி.எச்.டி., அவர்கள் மகாத்மா காந்தியடிகளின் உருவப் படத்தைத் திறந்து வைத்துப் பேசி னார்கள். மாவட்டக் கலெக்டர் ஸ்ரீ ஜி. ராமச்சந்திரன், ஐ.ஏ.எஸ்., அவர்கள் மகாநாட்டிற்கு வந்திருந்த பஞ் சாயத்துத் தலைவர்களை வரவேற்றுப் பேசிய பிறகு, மத்திய அரசாங்க துணை அமைச்சர் ஸ்ரீ பி. எஸ். மூர்த்தி அவர்கள் பேசினார்கள். உறுதியுடனும், ஊக்கத்துடனும், செய லாற்றப் பஞ்சாயத்துத் தலைவர்கள் முன்வர வேண்டும் என்று அவர்கள் கேட்டுக்கொண்டார்கள். " இந்த மாற்றம்

வெறும் பதவி மாற்றம் மட்டும் அல்ல, - பொறுப்பு களும், கடமைகளும் அத்துடன் மாற்றப்பட்டுள்ளன" என்றும் அவர் குறிப்பிட்டார். பின்பு மகாநாட்டை ஒட்டி அமைக்கப்பட்டிருந்த பொருட்காட்சியை அமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

பிற்பகல் மகாநாடு மறுபடியும் கூடியது. மாவட்டத் தைச் சேர்ந்த (அதிகாரிகளும் அதிகாரப் பற்றற்றவர் களுமாக) பதின்மூன்று பிரமுகர்கள் பேசினார்கள். புதிய பஞ்சாயத்துச் சட்டம், பழைய பஞ்சாயத்துச் சட்டம், குடும்பக் கட்டுப்பாடு, உணவு உற்பத்தி, பஞ்சாயத்துக்களின் பொறுப்புகளும் கடமைகளும் பற்றி சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன. மகாநாட்டில் சுமார் 5,000 பேர் கலந்துகொண்டனர். இரவு நடந்த கலை நிகழ்ச்சிகளை மகாநாட்டில் கூடியிருந்தவர்கள் வெகுவாக ரசித்துப் பாராட்டி மகிழ்ந்தனர்.

1960-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 30-ம் தேதியில் மாவட்டமெங்கிலும் பஞ்சாயத்து தினம் மிகவும் விமரி சையாகக் கொண்டாடப்பட்டது.

1960-ம் வருஷம் அக்டோபர் மாதம் 2-ந் தேதி கோவை மாவட்டத்தைச் சேர்ந்த திருப்பூர், பல்லடம், ஈரோடு, கோபிசெட்டிபாளையம்-I, பெரியநாயக்கன்பாளை யம், அவினுசி, சத்தியமங்கலம், பெருந்துறை ஆகிய எட்டு வட்டாரங்களில் பஞ்சாயத்து யூனியன் செயல்படத் தொடங்கியது. பஞ்சாயத்து யூனியன் துவக்க விழா இந்த எட்டு வட்டாரங்களிலும் பாராட்டத் தக்க முறையில் நடைபெற்றது.

நீலகிரி மாவட்டம்

நீலகிரி மாவட்டம் பஞ்சாயத்து வார விழாவினை குதூ கலத்துடன் கொண்டாடியது. உதகமண்டலத்தில் 1960-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 25-ம் தேதி அன்று மாவட்ட பஞ்சாயத்து தலைவர்கள் மகாநாடு நடைபெற்றது. அன்று காலை மாவட்டக் கலெக்டர் அலுவலகத்திலிருந்து ஒரு ஊர்வலம் புறப்பட்டு நகரின் முக்கிய வீதிகள் வழியாக மகாநாட்டுக் கொட்டகையை சென்றடைந்தது. மாவட்டக் கலெக்டர், மாவட்ட அதிகாரிகள், நகரப் பிரமுகர்கள், மற்றும் பஞ்சாயத்துத் தலைவர்கள், எல்லோரும் ஊர்வலத் தில் கலந்து கொண்டனர்.

மகாநாட்டுக் கொட்டகையின் முன் ஸ்ரீ பி. கே. லிங்கா கவுடர், எம்.எல்.ஏ., அவர்கள் தேசீயக்கொடியை ஏற்றி வைத்தார்கள். கோதகிரி பஞ்சாயத்து தலைவர் ஸ்ரீ. எம். கே. நஞ்சா கவுடர் மகாத்மா காந்தியின் உருவப் படத்தை திறந்து வைத்தார். நீலகிரி மாவட்டக் கலெக்டர் ஸ்ரீ. ஏ. எச். டயாஸ், ஐ.ஏ.எஸ்., எல்லோரையும் வர வேற்று, புதிய பஞ்சாயத்துச் சட்டத்தின் முக்கியத்துவத் தைப்பற்றி விளக்கிப் பேசினார்கள். பின்பு ஸ்ரீ என். எம். லிங்கம், எம்.பி., அவர்கள் மகாநாட்டைத் துவக்கிவைத் துப் பேசும்பொழுது இந்தச் சட்டம் கொண்டு வரவேண் டியதன் அவசியத்தைப்பற்றியும் இந்தச் சட்டத்தை எப் படி மக்கள் அமுல் நடத்தவேண்டுமென்பது பற்றியும் விளக்கிப் பேசினார்கள். ஸ்ரீ வி. எம். சுரேந்திரராம், எம்.எல்.சி., ஸ்ரீ நஞ்சப்பா, எம்.பி., ஆகியோர் பஞ்சா யத்து ஆட்சி பற்றி விளக்கினார்கள். பிறகு ஸ்ரீ நஞ் சப்பா, எம்.பி., பொருட்காட்சியை திறந்து வைத்தார் கள்.

மாலையில், புதியச் சட்டத்தின் பீடிகை பற்றியும், குடும்பக் கட்டுப்பாட்டின் அவசியத்தைப்பற்றியும், உணவு உற்பத் திப்பெருக்கத்தின் தேவையைப் பற்றியும் பல பிரமுகர்கள் பேசினார்கள். அதன்பிறகு கலை நிகழ்சிகள் நடைபெற்றன. 1960-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 30-ம் தேதியில் பஞ்சாயத்து தினமும், 1960-ம் வருஷம் அக்டோபர் மாதம் 2-ம் தேதியில் உதகமண்டலம் வட்டாரத்தில் பஞ்சாயத்து யூனியன் ஆரம்ப விழாவும் நடைபெற்றது.

சேலம் மாவட்டம்

சேலம் மாவட்டத்தில் பஞ்சாயத்து வார விழா மற்ற மாவட்டங்களைப்போலவே சிறப்பாகவும் செம்மையாகவும் நடைபெற்றது.

1960-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 25-ம் தேதி அன்று சேலம் மாவட்ட பஞ்சாயத்து தலைவர்கள் மகாநாடு சேலத்தில் நடைபெற்றது. மகாநாட்டு நிகழ்ச்சிகள் துவங்குவதற்கு முன்னால், பிரம்மாண்டமான ஊர்வலம் ஒன்று நடைப்பெற்றது. ஊர்வலத்தில், மாவட்டக் கலெக்டர், மாவட்ட அதிகாரிகள், மாவட்டத்தைச் சேர்ந்த பாராளு மன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப் பினர்கள், பஞ்சாயத்து தலைவர்கள் மற்றும் பிரமுகர்கள், எல்லோரும் கலந்து கொண்டனர். ஊர்வலத்தில் ஐயாயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொண்டனர்.

மகாநாடு சரியாக ஒன்பது மணிக்கு ஆரம்பமாகியது. மாவட்டக் கலெக்டர் எஸ். பி. அம்புரோஸ், ஐ.ஏ.எஸ்., தேசீயக் கொடியை ஏற்றிவைத்தார். மாநில இணை அபி விருத்திக் கமிஷனர் ஸ்ரீ கோ. வேங்கடாசலபதி அவர்கள் பொருட்காட்சியைத் திறந்து வைத்தார்கள்.

இறைவணக்கத்திற்குப் பிறகு, சென்னை ராஜ்ய முன்னாள் அமைச்சர் டாக்டர் குருபாதம் அவர்கள் மகாத்மா காந்தி யின் திரு உருவப் படத்தைத் திறந்து வைத்தார்கள். பின்பு கவர்னர், எஸ். கே. டே, ஆகியோரிடமிருந்து வந்த செய்திகள் படிக்கப்பட்டன.

மாவட்ட பஞ்சாயத்து தலைவர்கள் சங்கத்தின் தலை வர் ஸ்ரீ ஆர். எஸ். வீரப்ப செட்டியார் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

மாவட்டக் கலெக்டர் தன்னுடைய தலைமை உரையில் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றி வைப்பதில் பஞ்சாயத்துகளுக்குள்ள பெரும் பங்கை விளக்கிப் பேசினார்கள். பின்பு மாநில இணை அபி விருத்திக் கமிஷனர் ஸ்ரீ கோ. வேங்கடாசலபதி அவர்கள் பஞ்சாயத்து வார விழாக் கொண்டாட்டத்தைத் துவக்கி

வைத்துப் பேசுகையில் மகாத்மா காந்தி கண்ட கனவை நனவாக்க வேண்டியது நம் கடமையென்றும், இந்த தூய பணியில் கட்சி வேற்றுமைகளுக்கே இடமில்லை யென்றும், "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு" என்பதை ஒருவரும் மறக்கக் கூடாது என்றும் குறிப்பிட்டார்கள்.

பின்பு மாவட்ட ரெவன்யூ அதிகாரி ஸ்ரீ கே. சி. நடராஜன், 35 ஆண்டுகளாக பஞ்சாயத்து தலைவராகப் பணி யாற்றி வரும் நாகரசம்பேட்டை பஞ்சாயத்துத் தலைவர் ஸ்ரீ ராஜா சுப்பிரமணிய செட்டியார், ஸ்ரீமதி ஹேமலதா தேவி சுப்பிரமணியம், எம்.எல்.ஏ., சேலம் நகராட்சி மன்றத் தலைவர் ஸ்ரீ எம். கோபால், ஸ்ரீ கே. அப்பாவு பிள்ளை, எம்.எல்.ஏ., ஆகியோர் பேசினார்கள்.

மகாநாட்டில் பிற்பகலில் கீழ்க்கண்டவர்கள் பேசினார்கள் :—

(1) ஸ்ரீ டி. எம். காளியண்ணன், எம்.எல்.ஏ.,— உணவு உற்பத்தியும் பஞ்சாயத்துகளும் என்பது பற்றியும், (2) ஸ்ரீகே.எஸ். சுப்பரமணிய கவுண்டர், எம்.எல்.ஏ.,— விவசாயக் கடன் சேவை கூட்டுறவுகள், (3) ஸ்ரீ எஸ். நாக ராஜ மணியகார், எம்.எல்.ஏ.,—பஞ்சாயத்து சட்டத்தின் நோக்கங்கள், (4)நாமக்கல் தாலுகா பஞ்சாயத்துத் தலைவர் கள் சங்கத்தலைவர் ஸ்ரீ கே. வி. ராமசாமி—மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டமும் பஞ்சாயத்துகளும், (5) தர்மபுரி பஞ்சாயத்துத் தலைவர் ஸ்ரீ வி. ஆர். ஜகதீச முதலியார்— "பஞ்சாயத்துகளின் கடமைகள்" என்பது பற்றியும் பேசினார்கள். மாவட்ட அதிகாரிகள் சிலரும் பேசினார்கள்.

இரவு மகாநாட்டுப் பந்தலில் நடைபெற்ற கலைக்காட்சிகளை ஆயிரக்கணக்கான மக்கள் கண்டு ரசித்தனர்.

1960-ம் வருஷம் செப்டெம்பர் மாதம் 30-ம் தேதி அன்று மாவட்டமெங்கும் பஞ்சாயத்து தினம் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

1960-ம் வருஷம் அக்டோபர் மாதம் 2-ம் தேதி முதல் மாவட்டத்தில் கரியப்பட்டி, ஹோசூர், காவேரிப்பட்டிணம், தர்மபுரி, கொளத்தூர், பெத்தநாயக்கன் பாளையம், நாமகிரிப்பேட்டை, கிருஷ்ணகிரி, கங்கவல்லி, இடைப்பாடி வட்டாரங்களில் பஞ்சாயத்து யூனியன் செயல்படத் தொடங்கியது. பஞ்சாயத்து யூனியன் துவக்கவிழா சிறப்பாக நடைபெற்றது. இடைப்பாடி வட்டாரத்தில் முதல் அமைச்சர் ஸ்ரீ காமராஜ் அவர்கள் துவக்க விழாக் கொண்டாட்டத்தில் கலந்துகொண்டார்.

வட ஆற்காடு மாவட்டம்

வட ஆற்காடு மாவட்ட பஞ்சாயத்து தலைவர்கள் மகாநாடு 1960-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 25-ம் தேதியில் வேலூரில் மிகவும் விமரிசையாக நடைபெற்றது. அன்று வேலூர் நகரமே விழாக் கோலம் பூண்டிருந்தது. வேலூர் ரிசர்வ் போலீஸ் மைதானத்தி அமைக்கப்பட்டிருந்த பெரிய கொட்டகையில் மகாநாடு நடைபெற்றது.

சரித்திரப் பிரசித்தி பெற்ற வேலூர் கோட்டையின் முன்பாக அமைக்கப்பட்டுள்ள மகாத்மா காந்தியின் உருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்தார் மாவட்டக் கலெக்டர் ஸ்ரீ சி. பி. கேலு ஏராடி, ஐ.ஏ.எஸ். அதன் பிறகு 5,000 மக்கள் அடங்கிய பிரம்மாண்டமான ஊர்வலம் நகரின் முக்கிய வீதிகள் வழியாக மகா நாட்டுப் பந்தலை சென்றடைந்தது.

ஸ்ரீ வி. கே. கிருஷ்ணமூர்த்தி, எம்.எல்.ஏ., அவர்கள் தேசீயக் கொடியை ஏற்றி வைத்தார்கள். மகாத்மா காந்தியின் உருவப்படத்தை ஸ்ரீ லட்சுமிரதன் பாரதி அவர்கள் திறந்து வைத்து அடிகளாரின் லட்சிய வாழ்வைப்பற்றி விளக்கிப் பேசினார். மாவட்டக் கலெக்டர் எல்லோரையும் வரவேற்றுப் பேசுகையில் புதிய சட்டத்தின் விசேஷ அம்சங்களை விளக்கிக் கூறி, பஞ்சாயத்துகளின் பொறுப்பையும் எடுத்துச் சொன்னார். சட்டமன்ற உதவி சபா நாயகர், **ஸ்ரீ பக்தவத்சலு நாயுடு** அவர்கள் மகாநாட்டைத் துவக்கி வைத்தார்கள். அதிகப் பொறுப்புகளை பஞ்சாயத்துகளுக்கு அளிப்பது மூலம் அரசாங்கம் பஞ்சாயத்துகளில் பூர்ண நம்பிக்கை வைத்திருக்கிறது என்பது புலனாகிறது என்றும் அந்த நம்பிக்கை வீண் போகாமல் காப்பாற்றப்பட வேண்டியது பஞ்சாயத்து நிறுவனங்களின் கடமை என்றும் அவர் வலியுறுத்திப் பேசினார்கள்.

பிற்பகல் நிகழ்ச்சியில் பல பிரமுகர்கள் பேசினார்கள். ஸ்ரீ தசரதன், எம்.எல்.ஏ., பஞ்சாயத்து தலைவர், எக்லாம்புரம், ஸ்ரீ இ. எல். சவுந்தர ராஜன், ஸ்ரீ டி. கரிய கவுண்டர், எம்.எல்.ஏ., ஸ்ரீ எஸ். எம். அண்ணாமலை, எம்.எல்.ஏ., ஸ்ரீ பி. ராமச்சந்திரன். எம்.எல்.ஏ., ஸ்ரீ ஆர். தர்மலிங்கம். எம்.பி., ஸ்ரீ டி. வி. தேவராஜ் முதலியார், எம்.எல்.சி., ஸ்ரீ வி. கே. கோதண்டராமன், எம்.எல்.ஏ., ஸ்ரீ ஏ. ஈ. சந்திரசேகர நாயக்கர், எம்.எல்.ஏ. ஸ்ரீ என். அண்ணாமலை பிள்ளை, எம்.எல்.சி., மற்றும் பலரும் பேசினார்கள்.

இரவு கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன.

1960-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 30-ம் தேதியில் மாவட்டமெங்கிலும் பஞ்சாயத்து தினம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

1960-ம் வருஷம் அக்டோபர் மாதம் 2-ம் தேதியில் வட ஆற்காடு மாவட்டத்தில் துரிஞ்சாபுரம், ஆரணி, கலசப்பாக்கம், கே.வி.குப்பம், போளூர், வேம்பாக்கம், ஆற்காடு ஆகிய ஏழு வட்டாரங்களில் பஞ்சாயத்து யூனியன்கள் துவக்கிவைக்கப்பட்டன.

—:—:—

குடும்பக் கட்டுப்பாடு

இணைப்பு

அறுவை சிகிச்சை முறையைப் பிரபலப்படுத்த திட்டம்:—மக்கள் பெருமளவில் அறுவைச் சிகிச்சைக்கு முன்வரும்படி ஊக்கமளிப்பதற்காகவும், பிரபலப்படுத்துவதற்காகவும் முனைப்பான திட்டம் ஒன்றை அரசாங்கம் அனுமதித்துள்ளது.

இத் திட்டம் ஐம்பது வயதுக்குட்பட்ட ஆண்களுக்கும் 24 அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடைய பெண்களுக்கும் பயனளிக்கும். தற்காலம் உயிருடன் வாழும் குழந்தைகள் மூன்றேனும் உடையவருக்கே இத்திட்டம் பொருந்தும். **இத்தகைய தகுதிகள் இருந்து, வாசெக்டமி அறுவை சிகிச்சை செய்து கொள்ளும் ஆண்களுக்கும், சால்பின்ஜக்டமி செய்து கொள்ளும் பெண்களுக்கும் அறுவை சிகிச்சைக் காலத்தில் சம்பாத்தியக் குறைவு ஏற்பட்டதற்கோ, மற்றும் இதர செலவுகளுக்காவோ, அறுவைச் சிகிச்சை முடிந்ததும் ரூ. 30 தரப்படும். இந்த தொகை, அறுவை சிகிச்சை முடிந்ததும் ஆஸ்பத்திரியில் தரப்படும்.** அறுவை சிகிச்சை செய்து கொள்ளும் அரசாங்க சிப்பந்திகளுக்கு ஓய்வுக்காக ஆறு நாட்களுக்கு மேற்படாமல், விசேஷ லீவ் கொடுக்கப்படும்.

ஊராட்சி மன்றத் தலைவர் அறுவை சிகிச்சை செய்து கொள்ள விரும்புவோருக்கு ஆஸ்பத்திரிக்கு இலவசமாக சென்றுவர வசதி செய்து கொடுப்பார். இம்மாதிரியாக ஆஸ்பத்திரிக்குச் சென்றுவர வசதி செய்து கொடுக்கும் ஊராட்சி மன்றத்துக்கு, நபர் ஒன்றுக்கு ரூ. 10 வீதம் கொடுக்கப்படும். இத்தொகையும் ஆபரேஷன் முடிந்தவுடன், அதே ஆஸ்பத்திரியில் கொடுக்கப்படும்.

வாசெக்டெமி என்றால் என்ன?

2. வாசெக்டமி என்பது ஆண்களை மேலும் குழந்தை உண்டாக்க இயலாதபடி செய்யும் அறுவைச் சிகிச்சை முறை. ஆண் ஒருவரை நிரந்தரமாக மேலும் குழந்தை உண்டாக்க இயலாதபடி செய்ய இது மிக எளிய ஒரு ரண சிகிச்சை. கருத்தரிக்கச் செய்கின்ற ஏராளமான உயிரணுக்கள் செல்லும் குழாய் அரை அங்குலத்துக்குக் கத்தரித்து அகற்றப்படுகிறது. அதாவது அந்த நாளத்தில் ஒரு சிறு பகுதி வெட்டப்பட்டுக் கருத்தரிக்க உதவக்கூடிய அணுக்கள் செல்லும் மார்க்கம், விந்து சுரப்பையை அடையாதபடி தடுக்கப்படுகிறது.

இந்த அறுவை சிகிச்சை எங்குச் செய்யப்படுகிறது ?

3. பின் இணைப்பில் கொடுக்கப்பட்டிருக்கும் ஆஸ்பத்திரிகளில் ஏதேனும் ஒன்றில் அறுவை சிகிச்சை செய்து கொள்ளலாம். **இந்த அறுவை சிகிச்சைக்கு எவ்வித கட்டணமுமில்லை.**

ஆஸ்பத்திரியில் படுத்திருக்க வேண்டுமா ?

4. அறுவை சிகிச்சை செய்யப்படும் இடம் மட்டும் வலி தெரியாதபடி உணர்ச்சி நீங்க ஊசி போட்டு, இந்த அறுவை சிகிச்சை செய்யப்படுகிறது. அறுவை சிகிச்சை செய்துகொள்ளுகிறவர் நல்ல பிரக்ஞையுடனேயே இருப்பார். பதினைந்திலிருந்து இருபது நிமிஷங்களுக்குள் அறுவை சிகிச்சை நடந்து முடிந்து விடுகிறது. ஒரு நாளைக்குக்கூடப் படுக்கையில் படுத்திருந்தாக வேண்டும் என்ற அவசியம் இல்லை. வீட்டில் ஒருவார கால ஓய்வுக்குப்பின்பு அலுவலகத்துக்குச் திரும்பலாம். அறுவை சிகிச்சை முடிந்ததும் கனமான பாரத்தை தூக்குவதோ அல்லது கார் ஓட்டுவதோ கூடாது.

இந்த அறுவை சிகிச்சையின் விளைவு என்ன ?

5. வாசெக்டமி அறுவை சிகிச்சையைக் காயடித்தல் போன்ற செயலெனத் தப்பர்த்தம் செய்து கொள்ளக் கூடாது. **இந்த அறுவை சிகிச்சை சம்பந்தப்பட்ட நபரின் ஆண்மையை இழக்கச் செய்வதில்லை.** காம நீர் சுரப்பிகள் எதுவும் இதில் அகற்றப்படுவது கிடையாது. காம உணர்ச்சியையோ, அல்லது சிற்றின்ப சுகத்தையோ இது குறைப்பதில்லை. ஆண்மையோ, ஸ்தம்பன சக்தியோ குறைபடுவதில்லை. சுரப்பிகளுக்குத் தீங்கு எதுமில்லை. விந்துவில் கருத்தரிக்கச் செய்யக்கூடிய அணுக்கள் இருக்காது என்பது மட்டுமே இதில் உள்ள நிலைமையாகும். (சாதாரணமான நபர்களுக்கு ஒவ்வொரு தடவையிலும் விந்துவில் ஏற்படும் லட்சக் கணக்கான அணுக்களில் ஒரு அணுவே, கருத்தரிக்கச் செய்ய போதுமானது).

இது ஒரு புதிய பரிசோதனையா ?

6. வாசெக்டமி அறுவை சிகிச்சை புதிதான கருத்து அன்று. பல நாடுகளில் இது அனுசரிக்கப்படுகிறது. அமெரிக்க யுனைட்டெட் ஸ்டேட்சில் எல்லா ராஜ்யங்களிலும் குறிப்பாக கலிபோர்னியா, வடக்கு கரோலினா ஆகியவைகளில் வாசெக்டமி அறுவை சிகிச்சை செய்யப்படுகிறது.

20—9—60-ல் கிண்டியில் தொழில் பேட்டைகள் பற்றி நடந்த கருத்தரங்கை மத்திய அரசாங்க தொழில் துறை அமைச்சர் ஸ்ரீ லால்பகதூர் சாஸ்திரி அவர்கள் ஆரம்பித்து வைத்தார்கள்.

இதுபற்றி தஸ்தாவேஜிகள் மிக ஜாக்கிரதையாக வைக்கப் பட்டிருந்தன. இந்த அறுவை சிகிச்சையின் பின் விளைவுகள் பற்றி ஆராய்ச்சிகள் செய்யப்பட்டன. இப் பிரச்னையில் கிடைத்துள்ள கணிசமான சாட்சியங்களி லிருந்து ஆண்களுக்கு, இந்த அறுவை சிகிச்சை செய்வ தால் தீங்கு எதுவும் ஏற்படவில்லை என்பது புலனு கிறது. அது மட்டுமல்ல; கவலை, பயம் முதலியன நீங்கியதாலும், மன நிலைகளை யொட்டியும், வாசெக்டமி அறுவை சிகிச்சை செய்துகொண்ட ஆண்களில் அநேக ருடைய உடல் நலம், உண்மையில் அபிவிருத்தி யடைந்தது.

சால்பின்ஜக்டமி என்றால் என்ன ?

7. ஆண்களுக்கு வாசெக்டமி அறுவை சிகிச்சை எப் படியோ, அதே மாதிரிப் பெண்களுக்குச் செய்யப்படும் அறுவை சிகிச்சைக்கு சால்பின்ஜக்டமி என்பது பெயர். கரு அல்லது கரு முட்டை, கருக்குழியை அடையாத படி இது தடுக்கிறது. பெண்களை அது நிரந்தரமாக மேற்கொண்டு குழந்தை பெறமுடியாதவர்களாக்கு கிறது.

ஆஸ்பத்திரியில் எத்தனை நாள் இருக்க வேண்டும் ?

8. குழந்தை பிறந்தவுடனே 2, 3 நாட்களில் தாய் ஆஸ்பத்திரியில் இருக்கும்போது இந்த அறுவை சிகிச்சை விசேஷமாகச் செய்யப்படுகிறது. இந்தச் சமயத்தில் அறுவை சிகிச்சை செய்வதுதான் சுலபமானது. ஏனெ னில் அப்போது தான் கருக்குழியும் அதைச் சேர்ந்த உறுப்புக்களும் விரிவு கொண்டு, இடுப்புக் குழியில் இறங் காமல் இருக்கும். அச்சமயத்தில் அறுப்புத் துவாரமும் பெரிதாக இருக்காது. நாற்பத்திஆறிலிருந்து 72 மணி வரை ஆனபின்பு உடல் நலத்தைப் பாதிக்கக்கூடிய அணுக் கள் கர்ப்பப்பை அடங்கிய அடிவயிற்றுப்பாகத்தை அடையக் கூடிய சந்தர்ப்பங்கள் அதிகரித்துவிடுகின்றன. ஊசி போட்டுப் பொதுப்படையாக உணர்ச்சியற்றுப் போகும்படி செய்தோ அல்லது அந்த இடத்தில் மட்டும் வலி ஏற்படாமல் உணர்ச்சியற்றுப் போகும்படி செய்தோ இந்த அறுவைச் சிகிச்சையைச் செய்யலாம். கருமுட்டையைக் கருக்குழிக்குக் கொண்டு செல்லும் குழாய் துண்டிக் கப்படுவதே இந்த அறுவை சிகிச்சையாகும். ஆஸ்பத்திரி யில் நீண்ட காலம் இருப்பதோ, வீட்டில் நீண்ட காலம் ஓய்வு எடுப்பதோ இதற்கு அவசியமில்லை.

இந்த அறுவைச் சிகிச்சை எங்கு செய்யப்படுகிறது ?

9. பின் இணைப்பில் கொடுக்கப்பட்டிருக்கும் ஆஸ்பத்திரி களில் ஏதேனும் ஒன்றில் இந்த அறுவை சிகிச்சையைச் செய்து கொள்ளலாம். **இந்த அறுவை சிகிச்சைக்கு எவ்விதக் கட்டணமுமில்லை.**

ஏற்கனவே எவ்வளவு பேர் இந்த அறுவை சிகிச்சையைச் செய்து கொண்டிருக்கிறார்கள் ?

10. சென்ற மூன்று ஆண்டுகளில், சென்னை நகர ஆஸ்பத்திரிகளில் மட்டும் சுமார் 2,946-க்கு மேற்பட்ட நபர்கள் இந்த அறுவை சிகிச்சையைச் செய்து கொண்டிருக்கின்றனர். மாநிலத்தில் எல்லா மாவட்டங் களிலுமாகச் சேர்ந்து இந்த அறுவை சிகிச்சை செய்து கொண்டிருப்பவர்கள் தொகை 3,834 ஆகும். இந்தியா முழுதிலுமாக 41,391 பேர் இந்த அறுவை சிகிச்சை செய்து கொண்டிருக்கிறார்கள். அறுவைச் சிகிச்சை பற்றி

இந்த நபர்கள் பூரண திருப்தியடைந்துள்ளனர். தங்கள் நண்பர்களுக்கும் இதைத் தாங்கள் சிபார்சு செய்வதாகப் பலர் தெரிவித்துள்ளனர்.

இந்த அறுவை சிகிச்சையின் விளைவு என்ன ?

11. அடிவயிற்றில் லேசான தழும்பு ஒன்று மட்டுமே இருந்து வரும். அறுவை சிகிச்சை செய்த ஒரு வாரத்துக்குள் அப்பெண் வீட்டுக்குச் சென்று விடலாம். கரு உறுப்புக்கள் எதுவும் இதில் அகற்றப்படுவது கிடையாது. சாதாரணமாக மாதவிடாய் ஆகும். சாதாரணமாகத் தாம்பத்திய வாழ்க்கை நடத்தி வரலாம். முன்போலவே எல்லா வீட்டு வேலைகளையும் செய்து வரலாம். வேண்டாத கர்ப்பம் இனி ஏற்படாது என்ற கவலை நீங்கப் பெறுவதால், அப்பெண்ணின் தேக நலம் அபிவிருத்தி யடையும்.

இந்த அறுவைச் சிகிச்சை செய்ய, பிள்ளைப்பேறு காலம் வரை காத்திருக்க வேண்டுமா ?

12. கர்ப்பமில்லாத சமயத்தில், வேறு எந்த அறுவை சிகிச்சையையும் போலவே, எந்த சமயத்தில் வேண்டுமானாலும் இதைச் செய்யலாம். வயிற்றை கிழித்தோ அல்லது பிறப்பு அவயவம் மூலமோ இந்த சிகிச்சை செய்யலாம். குழந்தை பிறந்த உடனே செய்யப்படாதவர்கள் விஷயத்தில், கிழித்த தழும்பு நீளமாக இருக்கும்.

கணவன், மனைவி இருவரும் இந்த அறுவை சிகிச்சையைச் செய்துகொள்ள வேண்டுமா ?

13. கணவன், மனைவி இருவருமே இந்த அறுவை சிகிச்சையை மேற்கொள்ள வேண்டியது அவசியமில்லை. கணவனோ, அல்லது மனைவியோ செய்து கொண்டால் போதுமானது.

பின் இணைப்பு

இத்திட்டத்தின் கீழ், அறுவை சிகிச்சை கீழ்க்கண்ட ஆஸ்பத்திரிகளில் செய்யப்படும் :—

1. செங்கல்பட்டு மாவட்டம்.

(1) அரசாங்க மாவட்டத் தலைமை ஆஸ்பத்திரி, செங்கல்பட்டு.

(2) அரசாங்க ஆஸ்பத்திரி, காஞ்சீபுரம்.

2. தென் ஆற்காடு மாவட்டம்.

(1) அரசாங்க மாவட்டத் தலைமை ஆஸ்பத்திரி, கடலூர்.

(2) அரசாங்க ஆஸ்பத்திரி, விழுப்புரம்,

(3) அரசாங்க ஆஸ்பத்திரி, சிதம்பரம்.

3. வட ஆற்காடு மாவட்டம்.

(1) அரசாங்க மாவட்டத் தலைமை ஆஸ்பத்திரி, வேலூர்.

(2) அரசாங்க ஆஸ்பத்திரி, திருவண்ணாமலை.

(3) அரசாங்க ஆஸ்பத்திரி, குடியாத்தம்.

4. சேலம் மாவட்டம்.

(1) அரசாங்க மாவட்டத் தலைமை ஆஸ்பத்திரி, சேலம்.

(2) அரசாங்க ஆஸ்பத்திரி, கிருஷ்ணகிரி.

(3) அரசாங்க ஆஸ்பத்திரி, தர்மபுரி.

(4) அரசாங்க ஆஸ்பத்திரி, ஆத்தூர்.

5. கோயமுத்தூர் மாவட்டம்.

(1) அரசாங்க மாவட்டத் தலைமை ஆஸ்பத்திரி, கோயமுத்தூர்.

(2) அரசாங்க ஆஸ்பத்திரி, ஈரோடு.

(3) அரசாங்க ஆஸ்பத்திரி, கோபிசெட்டிபாளையம்.

(4) அரசாங்க ஆஸ்பத்திரி, திருப்பூர்.

6. திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

(1) அரசாங்க மாவட்டத் தலைமை ஆஸ்பத்திரி, திருச்சிராப்பள்ளி.

(2) அரசாங்க ஆஸ்பத்திரி , கரூர்.

(3) அரசாங்க ஆஸ்பத்திரி, புதுக்கோட்டை,

"கிடைக்கட்டும் கிராமநலம் !"

(உதயை-மு. வீரையன்)

ஆதித்தன் ஒளிகண்ட அகிலம் போல
அக்கரைதான் திகழ்கின்ற பச்சைப் போல
கோதிட்ட கூந்தலெழில் தன்னைப் போல
கொட்டுகின்ற மழைநீரின் பயனைப் போல
வீதியினிற் காசுகிடந் தெடுத்தல் போல
விடிவெள்ளி உழவர்க்கு தெரிதல் போல
சேதி சொல்லி பாட்டாளி வர்க்கம் வாழ
செய்திடவே கிராமநலம் என்றும் தேவை !

காதலர்கள் வாழ்ந்திடவோ நிலவு வேண்டும் :
காதகர்கள் சாய்ந்திடவோ நீதி வேண்டும் ;
சாதலினை மேற்கொள்ள வெறுப்பு வேண்டும் ;
சர்க்கார்வாழ்ந் திடநம் ஒத் துழைப்பு வேண்டும்;
வேதனைகள் தீர்ந்திடவோ பொருளும் வேண்டும் ;
வித்தையினைக் காட்டிடவோ ஏய்ப்பும் வேண்டும்;
கீதமென நம்மக்கள் வாழ யாண்டும்,
கிடைக்கின்ற கிராமநலம் என்றும் வேண்டும் !

புதுப்புனலைக் கண்டவுடன் பூரிப் புற்று
பொட்டிட்டு புத்தாடை பொலிவும் பூண்டோ
இதுகாறும் இல்லாத வண்ணம் ஆடி
இருக்கின்றார் ; மகிழ்ச்சியிலே திளைக்கின் றார்கள் ;
முதுமையிலே உழல்கின்ற உழத்தி கூட
மொட்டவிழ்த்த மலர்போல முறுவல் பூத்து
மதுவுண்ட வண்டானார் என்ற செய்தி
மலரட்டும் ; கிராமநலம் கிடைக்கட் டும்மே !



12-9-60-ல் மாநில குடும்பக் கட்டுப்பாடு போர்டின் கூட்டம் செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் நடைபெற்றது.

7. தஞ்சாவூர் மாவட்டம்.

(1) அரசாங்க மாவட்டத்தலைமை ஆஸ்பத்திரி, தஞ்சாவூர்.

(2) அரசாங்க ஆஸ்பத்திரி, நாகப்பட்டினம்.

(3) அரசாங்க ஆஸ்பத்திரி, கும்பகோணம்.

(4) அரசாங்க ஆஸ்பத்திரி. மன்னார்குடி.

(5) அரசாங்க ஆஸ்பத்திரி, மாயவரம்.

(6) அரசாங்க ஆஸ்பத்திரி, திருவாரூர்.

8. திருநெல்வேலி மாவட்டம்.

(1) அரசாங்க மாவட்டத் தலைமை ஆஸ்பத்திரி, பாளையங்கோட்டை.

(2) அரசாங்க ஆஸ்பத்திரி, தூத்துக்குடி.

(3) அரசாங்க ஆஸ்பத்திரி, அம்பாசமுத்திரம்.

(4) அரசாங்க ஆஸ்பத்திரி, நாங்குனேரி.

9. ராமநாதபுரம் மாவட்டம்.

(1) அரசாங்க மாவட்டத்தலைமை ஆஸ்பத்திரி, ராமநாதபுரம்.

(2) அரசாங்க ஆஸ்பத்திரி, ஸ்ரீவில்லிபுத்தூர்.

(3) அரசாங்க ஆஸ்பத்திரி, விருதுநகர்.

(4) அரசாங்க ஆஸ்பத்திரி, அருப்புக்கோட்டை.

(5) அரசாங்க ஆஸ்பத்திரி, ராஜபாளையம்.

10. மதுரை மாவட்டம்.

(1) அரசாங்க ஆஸ்பத்திரி, திண்டுக்கல்.

(2) எர்ஸ்கின் ஆஸ்பத்திரி, மதுரை.

(3) அரசாங்க ஆஸ்பத்திரி, பெரியகுளம்.

(4) அரசாங்க ஆஸ்பத்திரி, பழனி.

11. நீலகிரி மாவட்டம்.

(1) அரசாங்க மாவட்டத் தலைமை ஆஸ்பத்திரி, உதகமண்டலம்.

(2) அரசாங்க ஆஸ்பத்திரி, கூனூர்.

(3) அரசாங்க ஆஸ்பத்திரி, கோட்டகிரி.

(4) அரசாங்க ஆஸ்பத்திரி, கூடலூர்.

12. கன்னியாகுமரி மாவட்டம்.

(1) அரசாங்க மாவட்டத் தலைமை ஆஸ்பத்திரி, நாகர்கோயில்.

(2) அரசாங்க ஆஸ்பத்திரி, பத்மநாபபுரம்.

குடும்பக் கட்டுப்பாடு கைப் புத்தகம்

குடும்பக் கட்டுப்பாடு கைப்புத்தகத்தை (தமிழ்) அந்தந்த ஊர்ப்பஞ்சாயத்து அலுவலகத்திலேயே பெற்றுக்கொள்ளலாம். பிரதி ஒன்றின் விலை 12 நயா பைசா. திருத்திய பதிப்பு. அறுவை சிகிச்சைமுறை பற்றிய முழு விவரமும் இதில் அடங்கியுள்ளது.

ஆசிரியர்,
"கிராம நலம்"

விவசாயத் தொழில்—ஆய்வுக் கண்ணோட்டம்:

கிராம வளம் பெருக

-2-

[ஓ. இரா. கிருட்டிணசாமி, எம். ஏ., எம். காம்., எப். ஆர். ஈ. எஸ்., அரசியல், பொருளாதார வரலாற்றுத்துறை ஆசிரியர், தமிழ்க் கலைக் களஞ்சியம்.]

2. உழவுப் பொருளாதாரம்

கூட்டுறவு கிராம முன்னேற்றத்திற்குரிய ஒரே வழி என்பதை ஆராயும் முன்பு கிராமத்தின் உயிர்நாடியாக விளங்கும் உழவின் பொருளாதாரத்தைத் தெரிந்து கொள்ளவேண்டும். உழவு ஒரு தொழில். இது பொருளாதாரச் செயல்களில் ஒன்று. மற்றத் தொழில்களுக்கு இருப்பதைப்போல் உழவுத் தொழிலுக்கும் துணைக் காரணிகைகள் உண்டு. இயற்கை வளம், பாடு, கைம்முதல், அமைப்பு ஆகிய நான்கும் உழவுத்தொழிலை நடத்துவதற்கு வேண்டும். இவைகளில் இயற்கைவளம் தலையாயது. இயற்கைவளம் என்பது நிலம், நிலத்தைச் சார்ந்த காற்று தட்பவெப்ப நிலை, நீர் நிலை அமைப்பு ஆகியவைகளைக் குறிக்கும்.

நிலவளமும் இயற்கை நிகழ்ச்சியும்

இயற்கை வளம்—உழவுத் தொழிலுக்கு நிலமும் நீரும் மிக இன்றியமையாதன. வெறும் நிலம் மட்டும் இருந்தால் போதாது; நிலம் வளமுள்ளதாகவும் உழவுத் தொழிலுக்கு ஏற்றதாகவும் வேண்டும். ஒவ்வொரு வகைப் பயிருக்கும் அதற்கேற்ற தட்பவெப்ப நிலையும் வளமும் உள்ள நிலம் வேண்டும். சான்றாகப் பருத்திக்குக் கரிசல் மண்ணும் வெப்பமும் வேண்டும். கோதுமை விளைவதற்கு வெப்பம் தணிவாக இருக்க வேண்டும். வெப்பமும் நல்ல மண் வளமும் மிகுந்த நீர் வசதியும் உள்ள இடங்களில் நெல் நன்றாக விளைகின்றது. இவ்வாறாக நில வளம், நீர் நிலை, தட்பவெப்ப நிலை முதலியவைகளைப் பொறுத்து எதைப் பயிர் செய்வது என்பதை முடிவு செய்யவேண்டியுள்ளது. உழவன் தன் விருப்பம்போல் எந்த நிலத்திலும் எதை வேண்டுமானாலும் பயிர் செய்ய முடியாது.

நிலத்தின் வளமும், அமைப்பும் இயற்கை நிகழ்ச்சிகளால் பெரிதும் பாதிக்கப்படுகின்றன. நல்ல வளமாக உள்ள நிலம் திடுமென ஏற்பட்ட வெள்ளப் பெருக்கால் மணல் வெளியாக மாறலாம். நிலத்தின் மேல் தளத்திலுள்ள வளமிக்க நுண்மண் தூவிகளைக் காற்றடித்துச் சென்றுவிடலாம். மழை நீர் வெள்ளம் வயலின் மேல் மண்ணை அரித்துச் சென்றுவிடலாம். ஆற்றின் வெள்ளத்தால் மேடு பள்ளமாகும்; பள்ளம் மேடாகும். வளமிக்க வயல் காடாகும். மணல் வெளி வண்டல் மண் நிலமாகலாம். தட்பவெப்ப நிலை மாறுபட்டு வானம் பெய்த்தால் வளமிக்க நிலமும் வறண்ட பாலை நிலமாக மாறிவிடும். கடற்கரை ஓரமுள்ள வளமிக்க நன்னிலமும் காற்றுக் கடல் மணலை அடித்துக்கொண்டுவந்து சேர்ப்பதன் மூலம் வளங்குன்றி மணல்மேடாக மாறக்கூடும். இயற்கையின் செயலே செயல்; இயற்கையின் செயலால் ஏற்படும் நிலவள மாறுபாடுகளை நமக்கு நன்மை பயக்கும் வகையில் தடுத்துக் காத்தல் என்பது அவ்வளவு எளிய செயலா?

மூன்று வகை நிலம்—மூன்று பிரிவு உழவர்

இவ்வாறு இயற்கை அன்னையின் விளையாட்டுப் பொருளாக இருக்கும் "இயற்கை வளம்" என்ற துணைக் காரணிகை உழவுத் தொழிலில் பேரிடமல்லவா ஏற்றுள்ளது? உழவுத் தொழிலுக்கு முதலில் வேண்டியது நிலம். நிலம் மூன்று வகையில் தேடப்படுகின்றது. புதிதாக விலைக்கு வாங்குவது ஒரு வகை. பரம்பரைச் சொத்துரிமை மூலம் நிலம் கிடைப்பது மற்றொருவகை. நிலத்தைக் குத்தகை அல்லது வார முறைக்கு எடுத்துக் கொள்ளல் மூன்றுவது வகை. இதையொட்டி, உழவர்களை மூன்று வகையினராகப் பிரிக்கலாம்:—(1) பரம்பரை நிலக்கிழார், (2) புது நிலக்கிழார், (3) நிலமில்லாத உழவுத் தொழிலாளர். முதல் வகையினர் உழவுத் தொழிலை மேற்கொள்ளல் எளிது. இரண்டாவது வகையினர் பண வசதி உள்ளவர்களாக இருக்க வேண்டும். மூன்றுவது வகையினர் பணம் பெற்றிலராயினும் தொழில் திறமை உடையவராயிருத்தல் வேண்டும்.

24-10-60 அன்று தொழில் துறை அமைச்சர் ஸ்ரீ ஆர். வெங்கடராமன் ஐக்கிய நாடுகள் சபையின் கூட்டத்தில் கலந்துகொள்ள அமெரிக்காவுக்குப் பயணமானுர்.

உழைத்தால்தான் உண்டு வாழ்வு

பாடு.—உழவுத் தொழிலில் இயற்கை வளத்திற்கு அடுத்தபடியாகச் சிறப்புடையது பாடு. பாடு இன்றியமையாத காரணிகை. உழைத்தால் உண்டு வாழ்வு என்பது உழவுத் தொழிலுக்கு நன்கு பொருந்தும். இத் தொழிலில் ஒவ்வொரு நிலையிலும் பாடுபட வேண்டும். நிலத்தை உழுது பண்படுத்துதல், உரமிடுதல், நீர் இறைத்தல், விதை விதைத்தல், பயிர் நடுதல், களையெடுத்தல், காவல் புரிதல், அறுவடை செய்தல் முதலிய எண்ணிறந்த செயல்கள் உள்ளன. ஒவ்வொன்றும் பாடுதான். பாட்டின் சிறப்பைப் பார்க்கும்போது, உழவுத்தொழில், இயற்கை வளமும் பாடும் சேர்ந்த ஒரு கூட்டுச் செயல் என்றே தோன்றுகிறது. உழவுத் தொழிலில் பெரும்பாலும் மனிதன் நேரடியாகப் பாட்டைச் செலுத்துகின்றுன். உழவுத் தொழிலில் இயந்திரங்களைப் பயன்படுத்தும் வாய்ப்புக் குறைவு. மனிதனின் நேரடியான உழைப்பே பெரும்பாலும் தேவைப்படுகிறது. எனவே, உழவன் உழைப்பாளியாகத் திகழ்கின்றுன். உழவனின் குடும்பம் சற்றுப் பெரிதாக இருந்தால் உழவிற்கு வேண்டிய உழைப்பை நல்குவதற்குக் குடும்பத்தவரே போதுமானது. குடும்பத்தவரின் உழைப்புப் போதுமானதாக இல்லையெனின், கூலி ஆட்கள் நியமிக்கப்படுகின்றனர். சில உழவர்கள் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நிரந்தரப் பண்ணையாட்களை நியமித்துக்கொள்கின்றனர். அவர்களுக்குப் பணமாகவோ, விளைபொருளாகவோ ஊதியம் வழங்கப்படுகிறது. நாற்று நடுதல், களையெடுத்தல், அறுவடை செய்தல்போன்ற சமயங்களில் ஆட்கள் பலர் தேவைப்படுவர். அப்பொழுதெல்லாம் நாட்கூலிக்கு ஆட்கள் வரவழைக்கப்படுகின்றனர். பெரும்பாலும் உழவனின் குடும்பத்தவரே தொழிலுக்கு வேண்டிய பாட்டை நல்குவதால் உற்பத்தியைக் குறைக்க வேண்டிய சமயங்களில் ஆட்களைக் குறைத்துக் கூலிச் செலவைத் தடுப்போம் என்ற வாய்ப்பு இல்லாமல் போகின்றது.

எல்லாவற்றிற்கும் பணம் தேவை

முதல்.—உழவுத் தொழிலுக்குக் கைம்முதல் (Capital) பலவகைகளில் தேவைப்படுகிறது. நிலத்தை விலைக்கு வாங்குவதற்கும், அதைச் சீர்திருத்திப் பண்படுத்துவதற்கும் பணம் வேண்டும். உரம், விதை, உழவுக் கருவிகள், காளைமாடுகள் முதலியன வாங்குவதற்கும், ஆட்களின் சம்பளம், நிலவரி, குடும்பச் செலவு முதலியவைகளுக்கும் பணம் தேவைப்படுகிறது. ஓராண்டில் நல்ல விளைவு ஏற்பட்டு மிகுதியான வருமானம் கிடைத்தால் சிறிது சேமிப்பு ஏற்படலாம். அந்தச் சேமிப்புத் தொகையை அடுத்த ஆண்டுக்குக் கைமுதலாக வைத்துக் கொள்ள முடியும். வருமானம் குறைந்து சேமிக்க முடியவில்லை யென்றுல், வேண்டிய பணத்தைக் கடனுகவாவது வாங்கியாக வேண்டும்.

அமைப்பு.—உழவுத் தொழிலில் நிருவாகம் என்று ஒன்று தனியாகக் கிடையாதென்றே சொல்லலாம். குடும்பத்தலைவனே அமைப்பாளனுகச் செயல் ஆற்றுகிறன். எந்த நிலத்தில் எதைப் பயிர் செய்வது, எப்பொழுது உழவைத் தொடங்குவது, விதைவிதைப்பது, எந்தெந்தச் சமயத்தில் நீர் பாய்ச்சுவது, களையெடுப்பது, எவ்வளவு உரம் இடுவது, எப்பொழுது அறுவடை செய்வது, விற்பனை செய்வது என்பனவற்றை உழவனே தீர்மானித்துக் கொள்கின்றுன். "தன் தொழிலுக்குத்தானே தலைவன்" என்பது உழவுத் தொழிலில் சிறப்பாக விளங்குகின்றது. சில இடங்களில் பெருநிலக்கிழார்கள் உழவுத் தொழிலை நடத்துவதற்கும், மேற்பார்வை செய்வதற்கும் சம்பள அலுவலாளரை அமர்த்துகின்றனர். (தொடரும்)

வாழ்க

நம் பஞ்சாயத்து யூனியன்கள்

[ஸ்ரீ. கோ. வேங்கடாசலபதி, மாநில இணை அபிவிருத்திக் கமிஷனர்.]

சென்ற மாதம் திருச்சி ஜில்லாவைச் சேர்ந்த ஒரு வட்டாரத்திலுள்ள பஞ்சாயத்துத் தலைவர்கள் அடங்கிய கூட்டத்திற்குச் சென்று கொண்டிருந்தேன். அந்தக் கிராமத்தின் வீதி வழியே சுமார் 100 பேர்களடங்கிய ஊர்வலம் ஒன்று எனக்கு எதிராக வந்துகொண்டிருந்தது. ஊர்வலத்தினர் உற்சாகமாக சில கோஷங்களை முழங்கிக் கொண்டு வந்தார்கள். அவர்களுடைய கோஷங்களில் "பஞ்சாயத்து, ஊராட்சி" என்ற வார்த்தைகள் திரும்பத் திரும்பக் கேட்டவுடன் அந்த கோஷத்தைச் சற்றுக் கூர்ந்து கவனித்தேன். அந்த கோஷங்கள் எனக்கு ஊக்கமும் உற்சாகமும் ஊட்டுவனவாக இருந்தன. அவற்றில் சில :

"ஆலமரத்துக்கு வேரும் விழுதும்போல
மாநில ஆட்சிக்கு பஞ்சாயத்தும் யூனியனும்"

"பயிர் செழிக்கப் பருவ மழை,
பார் செழிக்கப் பஞ்சாயத்து முறை"

பொருள் நிறைந்த அந்த வார்த்தைகள் எனக்கு மட்டற்ற மகிழ்ச்சியை அளித்தன. மேலும் அதைக் கோஷித்தவர்கள் யார் யார் என்று எனக்கு அறிவிக்கப்பட்ட பொழுது என் உள்ளம் சொல்லொணு மகிழ்ச்சியில் மூழ்கியது. காரணம், அந்தக் கூட்டத்தில் பெரும்பாலானவர்கள், பஞ்சாயத்துத் தலைவர்கள். அவர்களில் சிலர், கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்றவர்கள். சிலர் உள்ளூரிலுள்ள கிராமப்பள்ளிகளிலே படித்துப் படிப்பை நிறுத்திக் கொண்டு விவசாயத்தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள். ஜாதி மத வித்தியாசமின்றி, கட்சி வேறுபாடு இல்லாமல், அவர்கள் எல்லோரும் சேர்ந்து **"ஊராட்சி ஓங்குக"** என்று கர்ஜித்தது, வருங்கால இந்தியாவின் புதிய முழக்கம் என்றே எனக்குத் தோன்றியது.

அடுத்து வரும் அக்டோபர் மாதம் 2-ம் தேதி முதல் புதிய பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து யூனியன்களும் அமுலுக்கு வரப் போகின்றன. ஆகையால் புதிய பஞ்சாயத்து சட்டத்திலுள்ள ஷரத்துக்களைப்பற்றி ஒருவருக்கொருவர் பேசி, புதிய விளக்கமும் தெளிவும் அக் கூட்டங்களில் அவர்கள் பெறுகிறார்கள். ஆங்காங்குள்ள பஞ்சாயத்து இலாகாவைச் சேர்ந்த ஜில்லா உத்தியோகஸ்தர்கள், பஞ்சாயத்துத் தலைவர்களுக்குத் தெரியாத விஷயங்களைப் பற்றி விளக்கிச் சொல்கிறார்கள். பஞ்சாயத்து மூலம் புதிய சமுதாயத்தை அமைப்பதற்கான இந்தக் கல்விமுறை தமிழ் நாட்டில் சென்ற சில வாரங்களாக பல வட்டாரங்களில் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றது. குறிப்பாக, செப்டெம்பர் மாதம் 25-ம் தேதி முதல் அக்டோபர் 2-ம் தேதி முடிய உள்ள இந்த வாரத்தை பஞ்சாயத்து வாரமாக கொண்டாடுகிறார்கள். அதாவது, பஞ்சாயத்து மூலம் கிராமங்களை அபிவிருத்தி செய்வது எப்படி, பஞ்சாயத்து அங்கத்தினர்கள், தலைவர்கள் தெரிந்து கொள்ளவேண்டிய விஷயங்கள் யாவை என்பதை அறிந்து பஞ்சாயத்து விஷயங்களில் புதிய ஊக்கமும் உற்சாகமும் பெறுவதற்குரிய ஒரு-வார விழாவாக கொண்டாடுவதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

நாட்டின் முன்னேற்றத்திற்கான நல்ல அறிகுறி

சென்ற ஒரு வருஷமாக தமிழ் நாட்டில் உள்ள எல்லா ஜில்லாக்களையும் சுற்றி, இந்த புதிய பஞ்சாயத்து வேலைகள் எம்முறையில் நடைபெறுகின்றன என்பதைக் கவனித்து வருகின்றேன். புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பஞ்சாயத்துக்களில், பெரும்பாலான அங்கத்தினர்களும், தலைவர்களும் ஊர்ச் சேவை செய்வதில் ஊக்கமும் உற்சாகமும் காட்டும் இளைஞர்களாக இருந்து வருவதைக் காண்கின்றேன். இது, நாடு நல்ல முறையில் முன்னேறப் போகிறது என்பதற்கு ஒரு அறிகுறி என்றே எனக்குத் தோன்றுகிறது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்திய சர்க்கார் பொதுவாக இந்தியாவின் அபிவிருத்திக்குப் பொறுப்பேற்றிருக்கிறது. ராஜ்யங்களின் அபிவிருத்திக்கு அந்தந்த ராஜ்யங்களிலுள்ள மக்கள் சர்க்கார் பொறுப்பு ஏற்றிருக்கிறது. அதேபோல, இனி ஒவ்வொரு ஊரின் முன்னேற்றத்திற்கும் அந்த ஊர் பஞ்சாயத்து சபையே பொறுப்பேற்கப் போகிறது.

ஊரில் உள்ளவர்கள் பொறுப்பேற்காவிட்டால் ஊர்களின் விவசாயம், வேறு யாரால் அபிவிருத்தி அடைய முடியும்? விவசாயத்திற்கு அவசியமான நல்ல கால் நடைகள் வேண்டுமென்ற எண்ணம் கிராமத்தில் உள்ளவர்களுக்கு ஏற்படாவிட்டால் எத்தனை சர்க்கார் இலாகாக்கள் இருந்தும் என்ன பயன் தரும்? நம்முடைய ஊரிலுள்ள பள்ளிக்கூடம், நல்லமாதிரியாக இருக்க வேண்டும்; ஊரிலுள்ள பிள்ளைகள் உற்சாகமாகப் படிப்பதற்கு வேண்டிய வசதிகள் அமைய வேண்டுமென்ற நினைவு அந்தந்த கிராமவாசிகளுக்கு ஏற்பட்டாலன்றி, சர்க்கார் இலாகா என்னதான் பாடுபட்டாலும் என்ன செய்துவிட முடியும்? அது

போலவே, ஊர்கள் சுத்தமாக, அழகாக இருக்கவேண்டு மென்ற எண்ணம் கிராம வாசிகளிடையே தோன்றி விட்டால், அந்த ஊர்கள் சுத்தமாகவும், அழகாகவும் இருக்கும் என்பதில் சந்தேகமென்ன ?

பஞ்சாயத்துகள் பொறுப்புணர்ச்சியுடன் நடந்துகொள்ள..

கிராமங்களில் என்னென்ன அபிவிருத்தி ஏற்பட வேண்டுமென்று மத்திய சர்க்காரும் ராஜ்ய சர்க் காரும் நினைக்கிறார்களோ, அந்த வேலைகளையெல்லாம் செய்ய வேண்டுமென்ற எண்ணம் பஞ்சாயத்துக்களில் உள்ளவர்களுக்கு ஏற்படும் பொழுதுதான் நம்முடைய ஐந்தாண்டுத் திட்டங்கள் நல்ல முறையில் நடை பெறும். இதை உத்தேசித்தே, விவசாயம், கால்நடை அபிவிருத்தி, கைத்தொழில்கள், ஆரம்பப் பள்ளிக் கூடங்கள், குடிதண்ணீர் வசதி, கிராமப் பாதைகள், ஏரி, குளங்கள் மராமத்து, பாசனவசதி செய்து கொள் ளுதல், குடும்பக் கட்டுப்பாடு முதலிய தேசீயத் திட்டங் களையெல்லாம், 3-வது ஐந்தாண்டு திட்டத்தில் பஞ்சா யத்து யூனியன்கள் மூலமாக செய்வது என்று சென்னை சர்க்கார் தீர்மானித்து 375 வட்டாரங்களில் செலவு செய்ய சுமார் 142 கோடி ரூபாய் ஒதுக்கி வைத் திருக்கிறார்கள்.

எனவே, இனிமேல் ஒவ்வொரு பஞ்சாயத்தும், பஞ்சா யத்து யூனியன்களும் ஐந்தாண்டுத் திட்ட சம்பந்தமாக ஒவ்வொரு ஊரிலும், ஒவ்வொரு வட்டாரத்திலும் செய்ய வேண்டிய அபிவிருத்தி வேலைகள் என்ன ? அதற்காக சட்ட ரீதியாக இந்த ஸ்தல ஸ்தாபனங்களுக்குக் கிடைக்கும் நிதி எவ்வளவு ? சர்க்கார் மூலம் பெறும் வேறு மானியங்கள் எவ்வளவு ? கிராமவாசிகள் தங்களுக்குத் தாங்களே விதித்துக்கொள்ள வேண்டிய வரிகள் யாவை? என்ற விஷயங்களையெல்லாம் நன்றாகத் தெரிந்துகொள் ளும்படி செய்வதற்கான ஏற்பாடுகளையும் சர்க்கார் செய்து வருகிறார்கள்.

பஞ்சாயத்து ஆற்றவேண்டிய பணி

இரண்டு தினங்களுக்கு முன்பு ஜில்லா தலைநகரங் களில் நடைபெற்ற ஜில்லாப் பஞ்சாயத்து சம்மேளன மகாநாடுகளை போல இன்னும் இரண்டு தினங்களில் அதாவது 30-ம் தேதி விஜயதசமி யன்று ஒவ்வொரு கிராமத்திலும் பஞ்சாயத்து விழா கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இந்த தினம் முதல், ஒவ்வொரு பஞ்சாயத்துத் தலைவருக்கும், தன்னுடைய பஞ்சாயத்து எல்லைக்குள் புறம்போக்கு நிலங்கள் எங்கெங்கே எவ்வளவு இருக்கின்றன, தரிசு நிலங்கள் எவ்வளவு இருக்கின்றன, காடுகள் எவ்வளவு, விவசாய விளைவுக்கான நல்ல நிலங்கள் எவ்வளவு என்ற விவரங்களெல்லாம் தெரியவரும். கிராமத்தைச் சுற்றி யுள்ள நிலங்களில் இன்று உள்ள உற்பத்தியைப்போல இன்னும் ஒரு மடங்கு அதிகம் உற்பத்தி செய்வதற்காக பொறுக்குவிதை, உரம் சேகரித்தல், பாசன வசதி ஏற் படுத்துதல் குறித்து என்னென்ன ஏற்பாடுகளை கிராமத் தார் செய்ய வேண்டுமென்பதைப் பற்றி பஞ்சாயத்து சபை யோசிக்கும். அதற்கான திட்டமிடும். புறம்போக்கு நிலங்களில் என்னென்ன செடிகொடிகளை மரங்களை நட்டு, அதன் மூலம் எந்த வகையில் கிராமத்தின் செல்வத்தைப் பெருக்கலாம் என்ற விஷயத்தைப் பற்றியும் பஞ்சாயத்து மூலம் ஊரார் கூடி யோசிப்பார்கள். கிராமங்களை அபி விருத்தி செய்வதற்கு கிராமத்திலுள்ள முக்கியஸ்தர்கள் ஒன்று சேர்ந்து என்னென்ன செய்யலாம் என்று சிந்திக்க ஆரம்பிக்கும், இது ஒன்றே கிராமங்கள் அபிவிருத்திக்கான முதற்படி என்று சொல்லலாம்.

அடுத்தபடியாக, அக்டோபர் மாதம் 2-ம் தேதி இந்த ராஜ்யத்திலுள்ள 75 சமுதாய அபிவிருத்தி வட்டாரங்கள் பஞ்சாயத்து யூனியன்களாக மாறி வேலை செய்யப் போகின்றன. அந்தந்த பஞ்சாயத்து எல்லைக்குள் இதுவரை ஜில்லா போர்டு செய்து வந்த காரியங்களை இனிமேல் பஞ்சாயத்து யூனியனே செய்துவரும். அது மட்டுமல்ல, தேசீய வளர்ச்சித் திட்டம், சமுதாய நலத்திட்டம் என்ற பெயரில் நடைபெற்று வந்த அபி விருத்தி வேலைகள் எல்லாம் இனிமேல் இந்தப் புதிய பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்கள் மூல மாகவே நிறைவேற்றப்பட்டு வரும். திட்டங்களை நிறை வேற்றுவதற்கு வேண்டிய நிதி வசதியையும், பயிற்சி பெற்ற சர்க்கார் ஊழியர்களையும் அரசாங்கம் கொடுத்து உதவ முன்வந்திருக்கிறார்கள். இந்த சந்தர்ப்பத்தை சரியாகப் பயன்படுத்திக் கொண்டு, கிராம வளர்ச்சிக்கு பஞ்சாயத்தும், பஞ்சாயத்து யூனியனும் இனிமேல் நல்ல முறையில் வேலைசெய்து வரும் என்றே சொல்லலாம்.

" ஒன்று பட்டால் உண்டு வாழ்வு "

வெள்ளையர்கள் இந்த நாட்டைவிட்டு வெளியேறிவிட் டால் நிர்வாகம் நடைபெறாது, எல்லாம் ஒரே குழப்பமாகி ஸதம்பித்துவிடும் என்று எண்ணியவர்களைப் போல இந்த பஞ்சாயத்துக்களின் மூலம் ஊரில் கட்சிகளும் வேற்றுமை களும் வளர்ந்துவிடும் என்று ஐயப்படுவோரும் இல்லா மற் போய்விடவில்லை. எனவே பஞ்சாயத்து மூலம் கிராம அபிவிருத்தி ஆகவேண்டுமென்று எண்ணுகின்ற அன் பர்கள் அனைவரும் மிகவும் விழிப்புடன் இருந்து பஞ்சாயத்து வேலைகள் நல்லமுறையில் வளர்ந்துவர அவ ரவர்களால் ஆன உதவிகள் அத்தனையும் செய்யவேண்டிய நேரம் இது.

கிராமப் பஞ்சாயத்துக்கள் மூலம் கிராமங்கள் அபி விருத்தியடைய வேண்டுமானால் முதலாவதாக வேண்டு வது, அந்தந்த ஊர் மக்களிடையே மன ஒற்றுமை ஏற் படுவதேயாகும். பஞ்சாயத்துகளிடம் எவ்வளவுதான் நிதி வசதி இருந்தபோதிலும், திட்டங்களை நிறைவேற்ற சர்க்கார் ஊழியர்கள் எத்தனைபேர் உழைத்த போதிலும் ஒற்றுமை இல்லாத ஊர்களில் வேலைகள் ஒழுங்காக நடைபெறுவ தற்கு இடமே இல்லை. இதனால் தான் தீர்க்கதரிசியான பாரதியாரும் " ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு, நம்மில் ஒற்றுமை நீங்கினால் அனைவருக்கும் தாழ்வு, நன்று இது தேர்ந்திடல் வேண்டும், இந்த ஞானம் வந்தால் பின்

நமக்கு எது வேண்டும்?" என்று கேட்கிறார். பாரதியாருடைய இந்த உபதேசம், கிராமவாசிகள் அவரவருடைய உள்ளத்திலும் பசுமரத்தாணிபோல் பதிய வேண்டும். **ஊரினுடைய அபிவிருத்திக்கு ஒற்றுமையே ஜீவ நாடி, அதுவே உயிர், அதுவே எல்லாம்.**

அடுத்தபடியாக, ஊரில் உள்ளவர்கள் எல்லோரும் வயிறுற உண்பதற்கு உணவும், உடுத்துவதற்கு நல்ல ஆடைகளும், வசிப்பதற்கு வீடுகளும், வாழ்க்கைக்கு வேண்டிய வேறுபல வசதிகளும் பெற்றாக வேண்டும். இதற்கு வேண்டும் பொருள்கள் எல்லாம் உற்பத்தியாவதற்கு ஊரார் எல்லாம் ஒன்றுசேர்ந்து கடுமையாக உழைக்க வேண்டும். ஒன்றுபட்ட உழைப்பே ஊரை உயர்த்தும். **ஒன்றுசேர்ந்த உழைப்பின் சக்தியே ஊரை உயர்த்தும்.** பெரும் சக்தியாக விளங்கும். அதுவே ஊரிலுள்ள பசியையும், பட்டினியையும் போக்கும். எனவே, ஊரில் யாரும் சோம்பி இராமல், ஒவ்வொருவரும் உடலால் எவ்வளவு உழைக்க முடியுமோ அத்தனையும் வஞ்சகமின்றி உழைப்பதனையே விரதமாகக் கொண்டு வேலை செய்வோமானால், இன்றுபோல கிராமவாசிகள் ஏழையராய் இருந்து ஏங்கவேண்டிய அவசியம் இல்லாது போகும். ஊர்கள் தோறும் மகாகவி பாரதி எண்ணியதுபோல "கன்னலும் தேனும், கனியும் இன்பாலும், கதலியும் செந்நெலும் செழித்து" கிராமங்கள் அனைத்தும் புதிய திருவுடனும், தேஜசுடனும் விளங்கும் என்பதில் ஐயமில்லை.

ஊரை உயர்த்துவதே அடிப்படை நோக்கம்

ஊராரின் ஒற்றுமையாலும் உழைப்பாலும் நம் ஊர்கள் புது ஊர்களாகி, புதிய சமுதாயத்தின் ஜீவநாடியாக விளங்க வேண்டுமென்று எண்ணுபவர்கள், ஊக்கத்துடனும் உற்சாகத்துடனும் வேலை செய்வதற்கு ஒரு அரிய சந்தர்ப்பத்தை சென்னை அரசாங்கம் இப்புதிய பஞ்சாயத்து சட்டத்தின் மூலமாக செய்து கொடுக்கிறார்கள். இந்த சட்டத்தை அமுல் செய்வதில் ஏதேனும் குறைகள் தென்படுமாகில், அதைத் திருத்திக் கொள்வதற்கும், மாற்றிக் கொள்வதற்குமான உரிமை சுதந்திர நாட்டில் எப்போதும் நமக்கு உண்டு. எனவே சட்டத்திலுள்ள குறைகளைப் பெரிதுபடுத்திக் கொண்டு, செய்தவற்றை மறந்து செய்யாதவற்றை சொல்லிக் கொண்டிராமல், பஞ்சாயத்துத் தலைவர்களுடைய எண்ணமும் செயலும், பஞ்சாயத்துக்கள் மூலம் கிராமங்கள் அபிவிருத்தியாவதற்கு ஏற்ற முறையில் இருந்தால் **அதுவே ஊர்களின் வளர்ச்சிக்கு உதவியாக இருக்கும்.**

பஞ்சாயத்துத் தலைவர்களுக்கும், ஊர்களின் அபிவிருத்திக்குப் பாடுபடும் ஏனைய சக ஊழியர்களுக்கும் ஒன்று ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

பாரதப் போர் நிகழும்போது மனம் சோர்ந்திருந்த அர்ச்சுனனைப் பார்த்து அன்று தேர்ப்பாகனாக இருந்த கண்ணன், "அர்ச்சுனா, உன்னாலே உன்னை உயர்த்திக் கொள்ளவேண்டும். உன்னைத் தாழ்த்திக் கொள்ளக் கூடாது; நிச்சயமாக உனக்கு நீயே உறவினன், உனக்கு நீயே பகைவன்", என்று சொன்னதைப் போல அந்நியர்களுடைய ஆட்சி காரணமாக சகல துறைகளிலும், தாழ்வுற்று, வறுமை மிஞ்சி, விடுதலை தவறிக்கெட்டு இருந்த கிராமவாசிகளை நோக்கி **காந்தியடிகள்** "கிராமவாசிகளே, ஒன்று சேர்ந்த உங்களுடைய கூட்டு முயற்சியாலும், உழைப்பாலும் உங்கள் உணவுக்கு வேண்டிய தானியங்களையும், உடைக்கு வேண்டிய பருத்தியையும், மற்றும் உங்களுக்குத் தேவையான அத்தியாவசியமான பொருள்களையும் நீங்களே உற்பத்தி செய்யுங்கள். நீங்கள் கட்டுப்பாடுடன் இருந்து உங்களுடைய ஊர்களை நிர்வகித்துக் கொள்வதற்கு வேண்டிய அறிவையும், ஆற்றலையும் நீங்களே வளர்த்துக் கொள்ளுங்கள். நீங்கள் உற்பத்தி செய்யும் மூலப் பொருள்களை விற்றுவிட்டு, உங்களுடைய தேவைகளுக்காக வியாபாரிகளுடைய கையை எதிர்பார்த்து நிற்காதீர்கள். ஊரில் ஒற்றுமையின்றி ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொண்டு நியாயம் தேடி ஊருக்கு வெளியே ஓடி உங்கள் பொருள்களை வீணாக்காதீர்கள். நீங்கள் கவனமில்லாது இருந்தால் உங்கள் உழைப்பை மற்றவர்கள் சுரண்டிக்கொண்டு போவார்களேயொழிய, வெளியிலே இருந்து வந்து உங்கள் நிலையை யாரும் உயர்த்திவிடுவார்கள் என்று எண்ணி ஏமாந்து விடாதீர்கள். உங்கள் வாழ்வும் வளமும் உங்கள் கையிலேயே இருக்கிறது" என்று, ஒருமுறையல்ல, ஒரு தடவையல்ல, பலமுறையும், பல ஆண்டுகள் தொடர்ச்சியாக விடாமல் சொல்லிக் கொண்டு வந்ததைப் பஞ்சாயத்துத் தலைவர்கள் அறிந்துகொள்ள வேண்டும்.

ஒப்பிலாத ஒரு சமுதாயத்தை அமைப்போம்

காந்தியடிகள் கூறிய இதே கருத்தை தெய்வத் **திருவள்ளுவரும்** ரத்தினச் சுருக்கமாக குறள் வடிவில் அமைத்துக் கூறியிருக்கிறார்:

> **" குடிசெய்வல் என்னும் ஒருவர்க்குத் தெய்வம்**
> **மடிதற்றுத் தான்முந்துறும் "**

அதாவது "நான் பிறந்த ஊரை உயர்த்துவேன் என்று உறுதிகொள்ளும் ஒருவருக்குத் தெய்வம் தானாகவே கச்சை கட்டிக்கொண்டு உதவி செய்யும்". மேலும், தம்முடைய ஊரின் உயர்வுக்கான முயற்சிகளை தளராமல் செய்து கொண்டே இருப்பவர்களுக்கு அந்த நோக்கம் தடையின்றித் தானாகவே பூர்த்தியாகும். இது பொய்யா மொழி.

தமிழ் நாட்டிலுள்ள பஞ்சாயத்துத் தலைவர்கள் காந்தியடிகள் சொன்னதையும், தமிழ் வேதம் சொல்லியதையும் மனதில் இறுத்தி கிராமப் பஞ்சாயத்துக்களின் மூலம், இந்த் தேசத்தில், உலகம் இதுவரையில் கண்டிராததும், ஒப்பிலாததும் ஒரு புதுமையானதுமான சமுதாயத்தை அமைக்க முன்வருவார்களாக.

(வானொலியில் 28—9—60-ல் நிகழ்த்திய பேச்சு)

Printed by the Controller of Stationery and Printing, Madras, on behalf of the Government of Madras. Edited by the Public Relations Officer and published by the Development Commissioner, Government of Madras.



1-3. ஸ்ரீ பெரும்புதூரில் செங்கல்பட்டு மாவட்ட பஞ்சாயத்துத் தலைவர்கள் மகா நாடு 25-9-60-ல் நடைபெற்றது.

4-5. திருவள்ளூர் வட்டாரம்—பஞ்சாயத்து யூனியன் துவக்க விழா.

Regd. No. M. 7277.
© GOVERNMENT OF MADRAS
1960